விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி

# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 மாசி 01 புதன்கிழமை (13.02.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 056

## ஒலிபெருக்கி அதிர்வு நோயாளர்கள் அதிர்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் நேற்றிரவு ஒலிபெருக்கி அதிர்ந்த வண்ணம் இருந்ததால் நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.

யாழ். போதனா வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தை ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ இன்று திறந்து வைக்கவுள்ளார்.


இந்த நிலையில் நேற்றிரவு ஒலிபெருக்கி பரிசோதனை இடம்பெற்றது. நீண்ட நேரம் இடம்பெற்ற இச்சம்பவத்தால் அருகில் இருந்த விடுதிகளில் தங்கியிருந்த நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களை (20ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை நாட்டில் ஒரேயொரு அரசுதான் அதில் பயங்கரவாதத்திற்கு இடமில்லை

## யாழ்.வந்த ஜனாதிபதி தெரிவிப்பு

(எஸ்.கரன்,சாளின்)

இந்த நாட்டில் ஒரேயொரு அரசாங்கம்தான் உள்ளது. அந்த அரசாங்கம் மீண்டும் பயங்கரவாதம் உருவாக இடமளிக்காது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். யாழ். மாவட்ட விசேட அபிவிருத்திக்குழுக் கூட்டம் நேற்று யாழ்.ரில்கோ விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (02ஆம் பக்கம் பார்க்க)



# பாதுகாப்பு வேலியை ஊடறுத்து புகையிரதப் பாதை செல்லும்

## ஜனாதிபதி பதிலளிப்பு

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கில் பாதுகாப்புத் தரப்பினரால் போடப்பட்ட வேலியை ஊடறுத்து புகையிரதப்பாதைசெல்லும். அதைப் பற்றி கவலைப்படத் தேவையில்லை என்றார் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ.

யாழ்.மாவட்டத்தின் விசேட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று ஜனாதிபதி தலைமையில் யாழ்.ரில்கோ விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் வலி வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தன் வலி. வடக்கில் பாதுகாப்பு தரப்பினரால் வேலி அமைக்கப்பட்டுள்ளது.

மாவிட்டபுரம் வீமன்காமம் பகுதியில் காங்கேசன்துறை வரையான புகையிரதப்பாதை (20ஆம் பக்கம் பார்க்க)

பெற்றோர் உருக்கமான வேண்டுகோள்

## உத்தரவிட்டார் ஜனாதிபதி நேற்று விடுதலையாவர் மாணவர்கள் இன்று

(யாழ்ப்பாணம்)

வெலிக்கந்தையில்தடுத்து வைக்கப்பட்டுள்ள பல்கலைக் கழக மாணவர்கள் இருவரும் இன்று விடுதலை செய்யப் படுவார்கள் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணத்தில் நேற்று உறுதியளித்தார்.

யாழ்.மாவட்டத்தின் விசேட அபிவிருத்திக் குழுக்கூட்டம் நேற்று யாழ்.ரில்கோ விருந்தினர் விடுதியில் ஜனாதிபதி (20ஆம் பக்கம் பார்க்க)





நயினை நாகபூசணியை வணங்கும் ஜனாதிபதி...

## 3500 பேருக்கு சி.சு.க. அங்கத்துவம்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் யாழில் உள்ள மூவாயிரத்து 500 இளைஞர் யுவதிகளுக்கு இன்றைய தினம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அங்கத்துவ அடையாள அட்டை வழங்கிவைக்கப்படவுள்ளது.

இவ் அடையாள அட்டை வழங்கும் நிகழ்வு இன்று காலையில் இடம்பெறவுள்ள யாழ்.போதனா வைத்தியசாலையில் அமைக்கப் பட்டுள்ள கட்டிடத்திறப்பு விழாவினை அடுத்து நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இவ் மூவாயிரத்து 500 தமிழ் இளைஞர் யுவதிகளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அங்கத்துவ உறுப்புரிமை பெற்றவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (எ-4)

# வெற்றிலை கொடுத்து ஜனாதிபதி வரவேற்பு!

## தமிழ் ஊடகவியலாளர்களும் புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ யாழில் கலந்து கொண்டிருந்த நிகழ்வுகள் யாவற்றிலும் தமிழ் கலாசாரம் புறக்கணிக்கப்பட்டதோடு பாதுகாப்புத் தரப்பினரால் தமிழ் ஊடகவியலாளர்களும் புறக்கணிக்கப்பட்டிருந்தனர்.

நேற்றையதினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முதலில் சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்தில் யாழ்.ஒளி ஆரம்பிப்பு விழாவில் கலந்துகொண்டிருந்தார்.

அடுத்ததாக யாழ்.ரில்கோ விடுதியில் நடைபெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும் பங்கேற்றிருந்தார்.

பிற்பகல் 3 மணியளவில் காரைநகர் மணற்காடு அம்மன் ஆலயத்திற்கு விஜயம் செய்திருந்ததோடு மாலை 5 மணிக்கு நயினாதீவிற்கும் விஜயம் செய்திருந்தார். இவ் நிகழ்வு அனைத்திலும் யாழ்ப்பாணத்து பாரம்பரியம் பின்பற்றப் படாமலேயே ஜனாதிபதி வரவேற்கப்பட்டதோடு அழைத்து செல்லவும்பட்டார். பூமாலை அணிவித்து வரவேற்கப்படாமல் பௌத்த பாரம்பரியமான வெற்றிலை கொடுத்து வரவேற்கப்பட்டதோடு கண்டிய (20ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு தரப்பினாலேயே லலித், குகன் கடத்தப்பட்டனர்

### திமுது ஆட்டிக்கல சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் வைத்து காணாமல் போனதாக கூறப்பட்ட லலித் மற்றும் குகன் ஆகியோர் அரச பாதுகாப்பு பிரிவினராலேயே கடத்தப்பட்டதாக முன்னணி சோஷலிச கட்சியின் குழு உறுப்பினர் திமுது ஆட்டிக்கல தெரிவித்துள்ளார்.

கடந்த டிசம்பர் மாதம் 9-ம் திகதி முதல் காணாமல் போனதாக கூறப்பட்ட மக்கள் போராட்டக்குழு உறுப்பினர்களான லலித் மற்றும் குகன் ஆகியோரின் சாட்சியப்பதிவுகள் நேற்று யாழ்.மேல் நீதிமன்றில் (20ஆம் பக்கம் பார்க்க)

## அபிவிருத்தியில் அக்கறை கொண்டதால் அழைப்பிதழ் இன்றியும் கலந்துகொண்டேன்

### விநாயகமூர்த்தி எம்.பி. தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அபிவிருத்திக் குழுக் கூட்டத்திற்கு அழைப்பிதழ் வழங்கப்படவில்லை. இருப்பினும் பல விடயங்களை இங்கு குறிப்பிட வேண்டும் என்பதற்காகவும் அபிவிருத்தியில் அக்கறை உள்ளதாலும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டேன் என்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி.

இதன்போது குறுக்கிட்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அழைப்பிதழ்களை எதிர்பார்க்காதீர்கள். அபிவிருத்திக் குழுக் கூட்டத்திற்கு அழைப் (20ஆம் பக்கம் பார்க்க)

# உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பில் யாழ்.தளபதியே நடவடிக்கை எடுப்பார்

(யாழ்ப்பாணம்)

உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பில் யாழ்.கட்டளை தளபதியே நடவடிக்கை எடுப்பார் என ஜனாதிபதி நேற்றுத் தெரிவித்தார்.

வலி வடக்கில் 24 கிராம சேவையாளர் பிரிவில் மக்கள் இன்னும் மீள்குடியேற்றப்படவில்லை. இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள மக்களின் காணிகள் விடுவிக்கப்பட்டு மீள்குடியேற்றம் இடம்பெறவேண்டும்எனகோரிக்கை விடுத்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி ஜனாதிபதியிடம் மகஜர் ஒன்றினை நேற்று கையளித்தார்

இதன்போது ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார். யாழ்.மாவட்ட விசேட அபிவிருத்திக்குழுக்கூட்டம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் யாழ்.ரில்கோ விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது இதில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் மேற்படி மகஜரைக் கையளித்தார். அத்தோடு மீள்குடியேற் (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# சர்வதேச நாணய நிதியத்திடம் புதிய கடன் பெறும் எண்ணமில்லை

## அரசாங்கம் அறிவிப்பு

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து புதிதாக கடன் பெற்றுக் கொள்வதில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

கடன்பெற்றுக்கொள்வது தொடர்பில் இலங்கையரசாங்கம், சர்வதேச நாணய நிதியத்திற்கு சில நிபந்தனைளை விதித்துள்ளது.

எனினும், இந்த நிபந்தனைகளை சர்வதேச நாணயநிதியம் ஏற்றுக் கொள்ளத் தவறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் பெற்றுக் கொள்ளப் போவதில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

அரசின் வரவு செலவுத் திட்ட கொள்கைகளுக்கு அமைவாகக் காணப்பட்டால் மட்டுமே சர்வதேசநாணயநிதியத்திடம்கடன்பெற்றுக் கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதேவேளை, சர்வதேச முதலீட்டுச் சந்தையில் கொடுக்கல் வாங்கல் செய்யக்கூடிய அளவிற்கு இலங்கையில் அபிவிருத்தி ஏற்பட்டுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது.

இதனால் சர்வதேச நாணய நிதியம் எதிர் வரும் காலங்களில் வரவு செலவுத் திட்டத்திற்காக நிதியீட்டம்செய்யாதுஎனசுட்டிக்காட்டியுள்ளது.

சர்வதேசநாணயநிதியத்திடம்1.5பில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாகப் பெற்றுக் கொள்ள அரசாங்கம் உத்தேசித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# ஐ.தே.கட்சி எம்.பி; அரசுடன் இணைவு

பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரொருவர் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இணைந்துக் கொள்ளவுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

அக்கட்சியின் சார்பில் வடக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரே அரசாங்கத்துடன் இணைந்துக் கொள்ளவுள்ளதாக அரசியலில் பரபரப்பாகப் பேசப்படுகிறது.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று செவ்வாய்க்கிழமை விஜயம் செய்துள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பங்கேற்கும் நிகழ்வில், அவர் கலந்து கொண்டதாகவும் செய்திகள் தெரிவித்தன.

இவர் அரசாங்கத்துடன் இணைந்ததும் பிரதியமைச்சர் பதவி வழங்கப்படவுள்ளதாகவும் ஆளும் தரப்புத் தகவல்களை மேற்கோள் காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன. (எ-11)

# பேருந்து கடலுக்குள் பாய்ந்து விபத்து



யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறைக்கு சென்றுகொண்டிருந்த பேருந்து பண்ணை கடலுக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளாகியது.

நேற்று மாலை 5.45 மணியளவில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் ஐந்து பேர் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்தே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது. (எ-11)

# இலங்கை நாட்டில் ஒரே...

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 30 வருட காலமாக இந்த நாட்டில் இடம்பெற்று வந்த யுத்தத்தினால் நீங்கள் அனுபவித்து வந்த துன்ப துயரங்களை நான் நன்கறிவேன். ஆனால் அந்த நிலைமை தற்போதில்லை. எல்லோருக்கும் ஒரே மாதிரியான வசதிகள் வந்து சேர வேண்டும். அதில் வித்தியாசம் எதுவும் இருக்க முடியாது.

உங்கள் பகுதி அபிவிருத்தி பற்றிப் பேசவே யாழ்ப்பாணத்திற்கு வந்துள்ளேன். அதற்காக நீங்கள் எல்லோரும் உதவி செய்ய வேண்டும்; பாடுபட வேண்டும்.

நான் செய்யும் சேவைகளை நீங்கள்தான் மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும். அதுதான் எனது தேவை. அதுதான் எனது நோக்கம்.

இன, மத, குல பேதம் இல்லாமல் சேவை செய்ய வேண்டும். அரசாங்கம் வழங்கும் எல்லா உதவிகளும் மக்களைச் சரியாகச் சென்று சேர வேண்டும். அது உங்கள் கடமை. நீங்கள் எல்லோரும் மக்கள் சேவையை பொறுப்புடன் செய்ய வேண்டும். அவ்வாறு மக்கள் உங்கள் சேவையை எதிர்பார்த்து வந்து சந்தோசமாகச் செல்ல வேண்டும். அதுதான் எமக்குத் தேவை. மக்கள் சந்தோசம்தான் எங்கள் சந்தோசம்.

இந்த நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் உருவாகாமல் செயற்பட வேண்டும். வடக்கின் வசந்தம் வேகமாக உருவாக வேண்டும். இந்த நாட்டில் ஒரேயொரு அரசுதான் உள்ளது. அதன்படி வேலை செய்வதுமிகஅவசியம். நீங்கள் சரியாக வேலை செய்தால் நான் எப்போதும் உங்களைப்பாதுகாப்பேன்.

அத்தோடு உள்ளூராட்சி சபைகளுக்கு ஒதுக்கப்படும்

(19ம் பக்கம் பார்க்க)

# யாழ்.வர்த்தக நிலையம் முற்றாக எரிந்து நாசம்

(யாழ்ப்பாணம்)

யாழில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்று முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

யாழ்.ஸ்ரான்லி வீதியில் உள்ள சின்ன ராசா லிங்கராசா என்பவருக்கு சொந்தமான தில்லையம்பதி மின் உபகரண விற்பனை நிலையமே முற்றாக எரிந்துள்ளது.

நேற்று பின்னிரவு 10.30 மணியளவில் ஏற்பட்ட மின் ஒழுக்கு காரணமாகவே இவ் அனர்த்தம் சம்பவித்துள்ளது.

உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்த யாழ்.மாநகரசபை தீயணைப்பு பிரிவினர் நிலைமையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்ததுடன் அருகிலிருந்த கடைகளிற்கும் தீ பரவாமல் தடுத்துக்கொண்டனர்.

மேற்படி விற்பனை நிலையத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் பல லட்சக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு வந்து யாழ் பொலிஸார் இவ்வனர்தம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-8;11)


தபால் மூலம்

ஆறு மாத கால டிப்ளோமா

Course Length - Six Month

2013 February- 2013 July

தமிழ் மொழி மூலம்

Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி.
Dip. in Health & Hospital Management - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி.
Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology. M.Sc. Psychology)

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.alcomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

(சி/2413) விண்ணப்ப முடிவுத் திகதி : 28.02.2013


# கண்ணீர் அஞ்சலி



## அமரர் சோமசுந்தரம் ஜெகதீஸ்வரன்

(பீப்பா ராசன்) அன்ன சத்திர லேன், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் இல. 313 ஜெயந்தி நகர், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட எமது நிறுவனத்தின் உரிமையாளரும் சிறந்த சாரதியுமான பொறியியலாளருமான அமரர் சோமசுந்தரம் ஜெகதீஸ்வரன் 11.02.2013 இல் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு நாம் ஆழ்ந்த துயர் அடைவதோடு அன்னாரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தவரின் துயரில் நாமும் பங்குகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகத்தினர், உரிமையாளர்கள், ஓட்டுநர்கள், நடத்துனர்கள், பணியாளர்கள், தனியார் பேருந்தின் (உத்தரவாதம்) வரையறுக்கப்பட்ட நிறுவனம், கிளிநொச்சி மாவட்டம்.

(சி-2412)





குழந்தையின்மையா? ஆண்மைக்குறைவா? கவலை வேண்டாம்

உயிரணுக்கள் உற்பத்தியின்மை/ குறைவு

முழுமையாக குணமடைய உலகிலேயே NO:1 வைத்தியம்







குழந்தையின்மை: குழந்தையின்மைக்கு ஆண், பெண் இருவரும் காரணமாகின்றார்கள். பெண்கள் 50 சதம் காரணம் என்றால் 40 சதம் ஆண்களே காரணமாகின்றார்கள். 10 சதம் இருவரும் குழந்தை வேண்டாம் என்று இருப்பது. இதில் கணவன்,மனைவி இருவரும் ஒரு நாளைக்கு பலமுறை முழுமையான தாம்பத்திய உறவில் ஈடுபட்டு வந்தாலும் ஆண்களிடமிருந்து வெளியாகும் விந்துவில் 60%க்கும் மேல் உயிரணுக்கள் இருந்தால் மட்டுமே ஒரு பெண்ணை கருத்தரிக்கச் செய்ய முடியும். ஆனால் 60%க்கும் குறைவாக இருந்தால் கருத்தரிக்கச் செய்ய முடியாது. இப்படிப்பட்ட ஆண்களுக்கு உயிரணுக்கள் உற்பத்தியின்மை/குறைவு போன்ற பிரச்சனைகளுக்கு 100 சதம் உத்தரவாதத்துடன் குணமடைய சிகிச்சையளிக்கப்படுகின்றது. இது போன்று பெண்களுக்கு ஏற்படும் கர்ப்பப்பை பிரச்சனை மாதப்பிரச்சனைகளிலிருந்தும் முழுமையாக குணமடைந்து குழந்தை பாக்கியம் பெறுவது உறுதி. பல நடிகைகள் எங்களிடம் சிகிச்சை பெற்று அழகான, இயற்கையான, கட்டுக்கோப்பான உடலமைப்பைப் பெற்றுள்ளனர். இந்த மருந்துகள் அனைத்தும் அரசு ஆய்வுகூடத்தில் பரிசோதனை செய்த பின்பே சிகிச்சைக்குத் தரப்படுகின்றது. எனவே 100 சதம் பக்கவிளைவுகள் கிடையாது. சிறப்புச் சிகிச்சைக்கு அரசு பதிவு பெற்ற சித்த மருத்துவர் Dr. G.ஜெகதீஸ்குமார் அவர்களைத் தொடர்பு கொள்ளவும்.

பெண்களுக்கு ஏற்படும் குழந்தையின்மை மற்றும் சகல பிரச்சனைகளிற்கும் டொக்டர்.டி.தேவி அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம் (பெண்கள் மட்டும்). 0091 9600336009

செல்: 0091 9842457673
இலங்கைச் செல்: 0754154364

(சி-2417)

ஸ்ரீ தேவி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை
இராமபுரம், சென்னை-89, இந்தியா.
E-mail: sridevisiddha@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## நன்றி

ஒரு ஊரிலே குரு இருந்தார். அவர் ஒருநாள் இரவு ஒரு முக்கியமான புத்தகத்தைக் கையிலே வைத்து படித்துக் கொண்டிருந்தார்.

அவர் படித்துக் கொண்டிருந்தது ஒரு ஞானநூல். அதிலே ஆழ்ந்து போய் இருந்தார் அந்தக் குரு.

அந்த நேரம் ஒரு திருடன் கையிலே கத்தியுடன் மெதுவாக உள்ளே நுழைந்தான். அந்தக் குருவின் அருகில் மெதுவாகப் போய் மிரட்டினான்.

''சத்தம் போடாதே! மரியாதையாக உன்னிடமுள்ள பணத்தைக் கொடு... இல்லையென்றால் கொன்று விடுவேன்... பணத்தைக் கொடுக்கிறாயா... இல்லையேல் ஒரு குத்தாக குத்தட்டுமா...?" என்று மிரட்டினான்.

அந்தப் பெரியவர் நிமிர்ந்து பார்த்தார்.

"இதோ பாரப்பா... என்னைத் தொந்தரவு செய்யாதே! கொலை அச்சுறுத்தல் விடுக்காதே! அதோ பார்... அந்த மேசை மேலேதான் பணம் உள்ளது. எடுத்துக் கொள்" என்று கூறிவிட்டு மறுபடியும் படிக்க ஆரம்பித்தார்.

திருடனும் மேசையை நோக்கி நகர்ந்தான்.

இவ்வேளை பெரியவர் தலை நிமிராமல் புத்தகத்தை பார்த்துக் கொண்டு சொன்னார்; ''எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு போக வேண்டாம். சிறிதளவு மிச்சம் இருக்கட்டும்... நாளைக்கு வரி கட்ட வேண்டியிருக்கிறது" என்றார்.

இவருடைய நிதானம், பதற்றமின்மை, அமைதி இவற்றையெல்லாம் பார்த்த திருடன் அசந்து போனான்.

இருந்தாலும் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் அவர் கூறியவாறே சிறிதளவு பணத்தை வைத்து விட்டு மிகுதியாக இருந்த பணத்தை எடுத்துக் கொண்டு வாசலைத் தாண்டும்போது அந்தப் பெரியவர் சொன்னார்;

"எதை யார் கொடுத்தாலும் நன்றி சொல்ல வேண்டும்... அதுதான் நாகரிகம்?" என்றார்.

திருடன் திகைப்புடன் திரும்பிப் பார்த்தான். "நன்றி" என்று சொல்லிவிட்டு அவன் தனது பயணத்தைத் தொடர்ந்தான்.

நாட்கள் சென்றன. அந்தத் திருடன் ஒருநாள் பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டான். பொலிஸார் அவனை விசாரணைக்குட்படுத்தினர். இதன்போது பெரியவர் ஒருவரின் வீட்டிலே திருடியதை அவன் ஒத்துக் கொண்டான்.

அந்தப் பெரியவரை சாட்சி சொல்ல பொலிஸார் அழைத்தனர். அதற்கு அவர் சொன்னார்; "என்னைப் பொறுத்த வரைக்கும் இவன் திருடன் இல்லை; அவனுக்கு ஏதோ பணக்கஷ்டம் ஏற்பட்டது. அதனாலே அவன் என்னிடம் வந்தான்; நான் கொடுத்தேன்- ''நன்றி'' கூறி விட்டு போனான்... என்னப்பா "நன்றி" கூறினீயா இல்லையா? என்றார்.

''ஆமாம் சுவாமி... சொன்னேன்'' என்றான் திருடன் ஆச்சரியத்துடன்...

வேறு குற்றத்திற்காக அவன் சிறைக்குப் போனான்; சிறிது நாட்கள் சென்றபின் வெளியிலே வந்தான்.

வந்தபின் நேராக அந்தப் பெரியவரிடம் சென்றான்; ''குருவே என்னை சீடனாக ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்றான்.

அதன்பின்னர் அவன் பெரியவரின் சீடனானான்.

அந்தக் காலத்திலே இப்படி நல்லவர்களுடைய நடவடிக்கைகளே கெட்டவர்களை திருத்தியது. இந்தக் காலத்திலே அப்படியெல்லாம் நடக்குமா?

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# வன்னி வலயங்களுக்கு இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் கடமைக்கு வருகை தரவில்லை

## மாணவர்கள் காத்திருப்பு

யாழ்ப்பாணத்தில் இருந்து முல்லை., கிளிநொச்சி, துணுக்காய், மன்னார், மடு ஆகிய கல்வி வலயங்களுக்கு இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் பலர் கடமையை பொறுப்பேற்காமையால் 55 ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களின் கல்வி நிலை பாதிப்படையும் சூழ்நிலை தோன்றியுள்ளதாக பாதிப்புக்குள்ளாகிய மாணவர்களின் பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

துணுக்காய் கல்வி வலயத்தில் 106 ஆசிரியர்களும் முல்லை. கல்வி வலயத்தில் 185 ஆசிரியர்களும் மன்னார் கல்வி வலயத்தில் 85 ஆசிரியர்களும் கிளி.கல்வி வலயத்தில் 330 ஆசிரியர்களுமாக மொத்தம் 706 ஆசிரியர்கள் பற்றாக்குறை காணப்பட்டிருந்த நிலையில் கடந்த வருடாந்த இடமாற்றத்திற்காக மேற்படி வலயங்களில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் கடந்த முதலாம் திகதி தொடக்கம் தாங்கள் விண்ணப்பித்த கல்வி வலயங்களில் கடமையினை பொறுப்பேற்றிருக்கின்ற நிலையில் இவர்களுக்கு பதிலாக வருகை தர வேண்டிய ஆசிரியர்களில் பலர் இன்னும் கடமையினை பொறுப்பேற்காத நிலை காணப்படுகின்றது.

ஏற்கனவே பற்றாக் குறையாக உள்ள 706 ஆசிரியர்களுடன் வருடாந்த இடமாற்ற ஆசிரியர்களும் வருகை தராமல் இருப்பதால் வகுப்புக்களில் மாணவர்கள் பாட ஆசிரியர்கள் இன்றி வீணாக பொழுதை கழிக்கின்றனர்.

எனவே, போரினால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்தும் நோக்குடன் செயற்படுகின்ற கல்வி அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனம் எடுத்து மாணவர்களுடைய கல்விக்காக ஆசிரியர்களை நியமித்து தருமாறு பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர்கள் கோரிக்கை ஒன்றையும் முன்வைத்துள்ளனர். (அ-3-15)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் மிதிவெடி தவிர்ப்பு தினம்

சர்வதேச மிதிவெடி தவிர்ப்பு தினமான எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி கொண்டாடப்படுவதையிட்டு முல்லைத்தீவு மாவட்டத்தின் சகல பகுதிகளிலும் கிராம அபிவிருத்தி நிறுவனம், ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடனும் அரச திணைக்களங்களின் அனுசரணையுடனும் மிதிவெடி அபாய தவிர்ப்பு கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

இந்நிகழ்வை சிறப்பிக்கும் நோக்கில் பாடசாலை மட்டத்தில் போட்டிகளை நடத்தி பங்குபற்றுபவர்களுக்கு பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. அத்துடன் கண்காட்சிகளை ஒழுங்கமைத்தல் மற்றும் மிதிவெடி குறியீட்டு பூங்கா அமைத்தல் போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் பாடசாலை மாணவர்கள் மத்தியில் பாடல்களை உருவகித்து பாடுதல், கதைகளை உருவகித்து கூறுதல், நாடகம், வில்லுப்பாட்டு, பட்டிமன்றம், சித்திரம் வரைதல் உட்பட பொருட்களை உருவாக்குதல். (இவை யாவும் மிதிவெடி அபாய தவிர்ப்பு செயற்பாட்டுடன் தொடர்புடையதாக இருக்கும்) போன்ற நிகழ்வுகளை நடத்தி சிறப்பான மாணவர் குழுக்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுடைய நிகழ்வுகள் மேடையேற்றப்படுவதுடன் காட்சிப்படுத்தப்படவுள்ளது. எனவே, இந்நிகழ்வுகளை நடத்தி சிறப்பிப்பதற்கு பாடசாலை ஆசிரியர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென கிராம அபிவிருத்தி நிறுவனத்தின் முகாமையாளர் ஏ.டி.ஜே.ரஜனி கேட்டுள்ளார். (அ-3-15)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 60 | 80 | 90 | 80 |
| பச்சைமிளகாய் | 230 | 200 | 300 | 300 |
| தக்காளி | 120 | 120 | 120 | 130 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 40 | 40 |
| கோவா | 50 | 40 | 60 | 70 |
| கரட் | 100 | 100 | 140 | 140 |
| பூசணி | 25 | 30 | 40 | 50 |
| புடோல் | 40 | 40 | 40 | 60 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 100 | 100 | 90-140 |
| பெரிய வெங்காயம் | 100 | 60 | 120 | 100 |
| பாகற்காய் | 60 | 60 | 80 | 120 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 70 | 60 | 80 | 70 |
| பயற்றங்காய் | 60 | 60 | 100 | 80 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 140 |
| பீற்றூட் | 35 | 40 | 80 | 60 |
| கறிமிளகாய் | 120 | 140 | 140 | 140 |
| முருங்கைக்காய் | 400 | 500 | -- | -- |
| போஞ்சி | 40 | 40 | 80 | 120 |
| கத்தரிதம்புள்ள | 25 | 20 | 40 | -- |
| கீரை - 1 பிடி | 15-30 | 20 | 20 | 30 |
| தேசிக்காய் | 20-40 | 50 | 50 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 40 | 48 | 45-50 |
| இராசவள்ளி | 80-120 | 110 | 120 | 140 |
| வெங்காயப்பூ | 70-110 | 100 | 140 | 100 |

# இராசி பலன்

13.02.2013
(மாசி 01,புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.2[illegible] மணிக்கு
திருதியை முற்பகல் 11.22 மணிவரை
உத்தரட்டாதி பின்னிரவு 5.58 மணிவரை
இராகுகாலம் 12.33-2.03 மணிவரை
சுபநேரம் 5.03-6.33 மணிவரை
சதுர்த்தி விரதம்

**மேடம்** வழிபாட்டால் அமைதிகாண வேண்டிய நாள், சுபசெலவுகள் அதிகரிக்கும், தொழிலில் சில மாற்றங்கள் ஏற்படலாம், வெளியூர் பயணங்கள் மேற்கொள்ளலாம்.

**இடபம்** வீட்டு உபயோகப்பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், உறவினர் வருகையால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், போசன நன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**மிதுனம்** வருமானம் திருப்தி தரும், தந்தை வழியில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், அரச வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப்பெறுவீர்கள், உற்சாகத்துடன் பணிபுரியும் நாள்.

**கடகம்** ஆன்மீக சிந்தனை மேலோங்கும், புகழ் மிக்கவர்களின் சந்திப்புண்டு, முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், மங்கையரால் ஏற்பட்ட மனக்கலக்கம் மாறும், திடீர் பயணங்கள் தித்திக்கவைக்கும்.

**சிங்கம்** கணபதியை வழிபட்டு காரியம் தொடங்கவேண்டிய நாள், விரயங்கள் தீர்க்க இயலாமல் போகும், வாகனங்களில் செல்லும் போது விழிப்புணர்ச்சி அவசியம், வார்த்தையில் நிதானம் தேவை.

**கன்னி** பெண்களின் சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகும், நட்பு வட்டம் விரிவடையும், பயணாளிகளால் பிரபல்யமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள்.

**துலாம்** வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், மறைமுக எதிர்ப்புக்கள் விலகும், எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், உடல் நலம் சீராகி உற்சாகமடைவீர்கள், எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**விருச்சிகம்** தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்,பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, விருந்து விழாக்களில் கலந்துகொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், பிறருக்கு உதவும் எண்ணம் மேலோங்கும்.

**தனுசு** திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே நடந்தேறும், தொழிலில் எதிர்பார்த்த வருமானம் வந்து சேரும், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், பயணாளிகளால் பலனுண்டு, சுபசெலவுகள் கூடும்.

**மகரம்** ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுவீர்கள், சகோதர ஒற்றுமை பலப்படும், விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும்.

**கும்பம்** எதிர்பார்ப்புக்கள் எளிதில் ஈடேறும், நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடக்கலாம், வருமானம் திருப்தி தரும் நாள்.

**மீனம்** பொருளாதார நலன்கருதி வெளியூர் பயணம் ஒன்றை மேற்கொள்வீர்கள், வழிபாட்டால் திருப்தி காணவேண்டிய நாள், முயற்சிகளில் சில தாமதங்கள் ஏற்படலாம், சஞ்சலங்கள் சற்று அதிகரிக்கும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுமி மீது பலாத்காரம்

# சந்தேக நபர்கள் விளக்கமறியலில்

(கரவெட்டி)


கற்கோவள பகுதியில் 15 வயது சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்த இரு சந்தேக நபர்களை எதிர்வரும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 6ஆம் திகதி புதன்கிழமை இரவு கற்கோவளம் புனிதநகர் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த சிறுமி தனிமையிலிருந்த வேளை ஆசிரியர் உட்பட இருவர் குறித்த சிறுமியை கடத்திச் சென்று ஆளில்லாத வீட்டில் வைத்து மேற்படி குற்றத்தை புரிந்துள்ளனர்.

இதனையடுத்து குறித்த சிறுமியின் தந்தையால் பருத்தித்துறைப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து இரு சந்தேக நபர்களையும் கைது செய்த பொலிஸார் பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் ஆஜர்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதவான் இரு சந்தேக நபர்களையும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (அ-3-24)

செய்தி: ஐ.தே.க தலைமையில் பொது எதிர்க் கட்சிகளின் முன்னணி



நன்றி: ஐலண்ட்

## அடையாள அட்டை கண்டெடுப்பு

கோப்பாய் வீதி உரும்பிராய் என்னும் முகவரியைச் சேர்ந்த திருமதி நல்லைத்தம்பி இராசாத்தி என்பவரது (486542411V) என்ற இலக்கத்தினை கொண்ட தேசிய அடையாள அட்டை மற்றும் முதியோர் அட்டை என்பன கண்டெடுக்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலை காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பணிப்பாளர் அறிவித்துள்ளார். உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-5)

# குடாநாட்டு பேருந்து சேவைக்கான நேர எல்லை அதிகரிக்கப்பட வேண்டும்

## பயணிகள் கோரிக்கை

யாழ்.குடாநாட்டுக்கான அரச மற்றும் தனியார் துறை பேருந்து பணிகள் தினசரி இரவு 8 மணியுடன் நிறுத்தப்படுவதால் வெளி மாவட்டங்களில் இருந்துவரும் பல நூற்றுக் கணக்கான பயணிகள் அவல நிலைக்கு உட்படுவதாக பாதிக்கப்பட்ட பயணிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக தெரிய வருவது, தற்போது சமாதான காலம் நிலவுவதால் யாழ். குடாநாட்டுக்கு இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் தினசரி பல்லாயிரக்கணக்கான மக்கள் வருகை தந்து தமது தேவைகளை பூர்த்தி செய்வதுடன் தமது உறவினர்களையும் சந்தித்து செய்கின்றனர்.

இந்நிலையில் யாழ்.குடாநாட்டுக்கான இரவு நேர போக்குவரத்து சேவைகள் தினசரி இரவு 8 மணியுடன் நிறுத்தப்படுவதால் தூர இடங்களிலிருந்து வரும் பயணிகள் யாழ். பேருந்து நிலையத்தில் நின்று தமக்குரிய இடங்களுக்கு செல்ல முடியாமல் சிரமப்படுவதை காணக்கூடியதாக உள்ளது.

முச்சக்கர வண்டிகளில் உரிய இடங்களுக்கு செல்ல முற்படுகையில் இரவு நேர பயணம் எனக்கூறி கட்டணங்களை முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் அதிகமாக அறவிடுகின்றனர்.

இதனால் பாதிக்கப்படும் பயணிகள் அதிகாலை வரை யாழ்.பேருந்து நிலையத்திலேயே தரித்து நிற்பதைக் காணமுடிகிறது.

எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு இரவு தினசரி 9 மணி வரையிலாவது பயணிகள் போக்குவரத்து சேவையினை நடத்த முன்வர வேண்டுமென பாதிக்கப்பட்ட பயணிகள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (அ-3-15)




## விழிப்புணர்வு கலந்துரையாடல்

(தும்பளை)

மலேரியா சம்பந்தமான விழிப்புணர்வு கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 12.30 மணி வரை யாழ்.திருமறைக்கலா மன்றத்தில் உள்ள கலைக்கோட்டத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-19)

## சொற்பொழிவு

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் தேவி பாகவதம் எனும் தலைப்பில் அ.குமாரவேல் தொடர் சொற்பொழிவாற்றவுள்ளார். (அ-3-19)

## இளைஞர் கழக நிர்வாகத்தெரிவு

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழக நிர்வாகத் தெரிவு அண்மையில் இடம்பெற்றது. இதில் தலைவராக லோ.சோபிதன், செயலாளராக நா.சிந்துஜன், பொருளாளராக ப.பிரியங்கன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். அமைப்பாளராக அ.ஸ்ரீதரன் மற்றும் 8 நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். (அ-3-37)


# Invitation for Bids (IFB)

## Zonal Education office, Thunukkai.

1. The chairman, Regional Procurement Committe on behalf of the Zonal Education Office, Thunukkai now invites sealed bids from eligible and qualified bidders for the following civil works.

| S.No | Bid Code No | Name of School & Description of Works | Required grade of Bidder | Bid Security Rs. | Basic Estimate Cost(Mn) |
|---|---|---|---|---|---|
| 01 | NP/44/20/2/5/TSEP/1 | Construction of 50'X25' Tow storey class room building Mu/Mankulam M.V | C7 | 52,000.00 | 5.20 |
| 02 | NP/44/20/2/5/TSEP/2 | Construction NFE Center (Technical and Vocational Training Workshop) at Mu/Mankulam M.V | C8 | 45,000.00 | 4.47 |

2. Source of Fund for the above work is *Transforming General Education as the Foundations of a Knowledge Hub Grant project (TSEP) under World Bank.*

3. The period of Completion of each of these Services is 120 days from the Start date.

4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for above mentioned grade or above with the Institute for Construction Training and Development (ICTAD)

5. interested bidders may obtain further information and inspect the bidding documents at the Zonal Education Office Thunukkai during office hours

6. A complete set of Bidding Documents in English language may be purchased from the office of Zonal Education office, School Works Branch, Thunukkai by interested bidders on the submission of a Written application to the date from 2013.02.14 until 2013.02.26 from 09.00 hrs to 15.00 hrs. Upon payment of a non refundable fee of LKR 1,500/= the method of payment will be cash to the office of the Zonal Education Office, Thunukkai.

7. Bids Shall be delivered to Zonal Education Office Thunukkai on or before 14.00 hours on 28.02.2013, Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.

8. All bids shall be accompanied by a Bid Security on the name of Zonal Director of Education, Thunukkai for rupees above mention which should be obtained either from a reputed Bank operating in Sri Lanka or from the Construction Guarantee Fund, valid for a period of 120 days (from 28.02.2013 till 28.06.2013) from the date of close of bids. The Bid Security should be "On-demand" & "Un-conditional" and on the format given in the Bidding Document.

Mrs.L.M.Weniton,
Chairman,
Regional Procurement Committee
Zonal Education Office,
Thunukkai.

(C-2414)



## உணவு சிற்றுண்டி வழங்கலுக்கான கூறுவிலை கோரல்-2013

### வலயக் கல்வி அலுவலகம் -கிளிநொச்சி

கிளிநொச்சி கல்வி வலயத்தின் கீழ் நடத்தப்படும் கருத்தரங்குகள், பயிற்சி வகுப்புக்கள், விழாக்கள், போட்டிகள் என்பனவற்றுக்கு உணவு சிற்றுண்டி வகைகளை வழங்குவதற்கான கூறுவிலை கோரப்படுகின்றது.

01. நியதிகள், நிபந்தனைகள், கட்டுப்பாடுகள் உள்ளடக்கியதான விரிவான கேள்வி கோரல் விபரத்தினை அலுவலகத்தில் பார்வையிட முடியும்
02. இக்கேள்விப் பத்திரங்களை 10.02.2013-ம் திகதி தொடக்கம் 27.02.2013-ம் திகதி காலை 10.00 மணிவரை ரூபா நானூறு (ரூபா 400/=) மீளளிக்க முடியாத வைப்புப் பணம் செலுத்தி நேரடியாக அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.
03. பூரணப்படுத்திய கேள்விப் பத்திரங்களை 27.02.2013-ம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலாகவோ அலுவலகத்திற்கு (கணக்காளர், வலய கல்வி அலுவலகம், கிளிநொச்சி) அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
04. அதிகாரம் பெற்ற கேள்விச் சபையினர் 27.02.2013-ம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு கூடி கேள்விப் பத்திரங்கள் திறக்கப்பட்டு இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்.
05. இது சுருக்கமான பத்திரிகை விளம்பரமாகும்.

க.முருகவேல்
தலைவர் கேள்விச்சபை/
வலயக் கல்விப் பணிப்பாளர்,
கிளிநொச்சி.

(C-2415)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச கடல் எல்லையை மீறுவோருக்கு எதிராக புதிய சட்டம் அமுலாக்கப்படும்

(கொழும்பு)

சர்வதேச கடல் எல்லைகளை மீறும் இலங்கை மீனவர்களுக்கு அபராதம் விதிக்கக் கூடிய வகையில் புதிய சட்டங்களை இயற்றுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளதாக கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நிமல் ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

உத்தேச திருத்தத்திற்கு அமைய சர்வதேச கடல் எல்லைகளை மீறும் இலங்கை மீனவர்களுக்கு ஒரு மில்லியன் ரூபா வரை அபராதம் விதிக்கக்கூடிய சந்தர்ப்பம் கிடைக்கவுள்ளது.

இலங்கை மீனவர்களுக்கு சொந்தமான ஒரு சில மீன்பிடி படகுகள் நாட்டிற்கு சொந்தமான பொருளாதார வலயத்தை மீறி வேறு நாட்டிற்குச் சொந்தமான கடல் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசிக்கின்றமை தெரியவந்துள்ளது.

இதனால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுவதாகவும் கடற்றொழில் அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச கடல் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசிக்கும் மீனவர்கள் அழிவடையும் அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ள அரியவகை மீனினங்களை பிடிக்கின்றமை தொடர்பிலும் தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரண பயன்பாடு குறித்தும் முறைப்பாடு கிடைத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

புதிதாக மேற்கொள்ளப்படவுள்ள சட்டத் திருத்தத்தின் போது இந்த நடவடிக்கைகளைத் தடுப்பதற்கான சரத்துக்களும் உள்ளடக்கப்படவுள்ளன. திருத்த சட்ட மூலத்திற்கு அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக கடற்றொழில் அபிவிருத்தி திணைக்களம் அறிவித்துள்ளது. (அ-2)

## இல்ல மெய்வல்லுநர்போட்டி

யா/ ஒஸ்மானியா கல்லூரியின் 50 ஆவது ஆண்டு இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் பாடசாலை அதிபர் எம்.எஸ்.ஏ.எம்.முபாரக் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப் பொன்விழா இல்லமெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராக வலயக் கல்விப் பிரதிப் பணிப்பாளர் கே. வரதராஜமூர்த்தி, சிறப்பு விருந்தினராக யாழ். தேசிய கல்வியியற்கல்லூரிவிரிவுரையாளர்எஸ்.ஆர். சத்தியேந்திரம்பிள்ளை ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

சிறப்பு விருந்தினராக யாழ்.- கிளிநொச்சி ஜம்மியத்துல் உலமா தலைவர் மௌலவி ஏ.எம். அப்துல் அஷீஸ் கலந்து கொள்கிறார். (அ-5)

* * * * *

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து ஆரம்ப பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி (முதன்மை நிலை 2,3) நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலையின் அதிபர் சு.தியாகலிங்கம் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். வலய கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார் கலந்து கொள்ளவுள்ளார். வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களை திருமதி நந்தினி உதயகுமார் வழங்கி வைப்பார். (அ-5)

* * * * *

யா/சண்டிலிப்பாய் அ.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர்சி.தவநாயகம்தலைமையில்நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.சிவானந்தராசா, ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் மானிப்பாய் பிரதேசப் பொறுப்பாளர் வெ. அன்ரன் ஜோன்சன் (ஜீவா) ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக யா/ உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை அதிபர் தேவதயாளன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (அ-3)

## புகலிடம் வழங்குவது அரச தலைவர்களே

(கொழும்பு)

அரச தலைவர்களே மிகவும் மோசமானவர்களுக்கு புகலிடம் வழங்குவதாக பாராளுமன்ற உறுப்பினர் அர்ஜுனரணதுங்க தெரிவித்துள்ளார்.

அளுத்கம -தர்கா நகரிலுள்ள முஸ்லிம் மகளிர் கல்லூரிக்கு வருகை தந்த போதே அவர் இதனைக்குறிப்பிட்டுள்ளார்.

அளுத்கம -தர்கா நகரிலுள்ள முஸ்லிம் மகளிர் கல்லூரியின் குறைகளைக் கண்டறிவதற்காக கல்லூரியின் அபிவிருத்திக்குழு விடுத்த கோரிக்கைக்கு அமைய அவர் அங்கு சென்றிருந்தார். (அ-2)

## பாப்பரசர் வெற்றிடத்திற்கு ரஞ்சித் ஆண்டகை போட்டி?



பாப்பரசர் பதினாறாம் ஆசிர்வாதப்பரின் வெற்றிடத்திற்கு இலங்கையைச் சேர்ந்த கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை போட்டியிடக் கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வத்திக்கான் பாப்பரசர் பதினாறாம் ஆசிர்வாதப்பர் போப் பெனடிக் எதிர்வரும் 28 ஆம் திகதி இராஜினாமா செய்யவுள்ளதாக நேற்று முன்தினம் திடீர் அறிவிப்பு விடுத்தார்.

உடல் நிலை குறைவே இவரது இந்த அறிவிப்புக்கு காரணம் என பரவலாக தெரிவிக்கப்படுகின்றது. இந்நிலையில் வத்திக்கானின் புதிய பாப்பரசர் இயேசு நாதர் உயிர்த்தெழுந்த தினமான எதிர்வரும் மார்ச் 31 ஆம் திகதி ஈஸ்டரன்று தேர்ந்தெடுக்கப்படவுள்ளதாக பாப்பரசர் போப் பெனடிக்கின் ஊடகப் பேச்சாளர் பெடரிகோ லெம்போர்டி குறிப்பிட்டுள்ளார்.

புதிய பாப்பரசர் இலத்தீன் அமெரிக்காவில் இருந்து தெரிவு செய்யப்படுவதற்கு அதிக வாய்ப்புக்கள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் பாப்பரசர் நிலைக்கு போட்டியிட கூடியவர்கள் பெயர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ள நிலையில் அதில் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் பெயரும் உள்ளடக்கப்பட்டுள்ளது. (அ-2)

## பொருளாதார சுமையால் காதல் திருமணங்கள் கைவிடப்படுகின்றன

### பிமல் எம்.பி. வருத்தம்

(கொழும்பு)

இளைஞர், யுவதிகளின் பல காதல் திருமணங்கள் பொருளாதார சுமையால் நிறைவேறாது இடைநடுவில் கைவிடப்பட்டதாக ஜே.வி.பி.யின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

பத்ரமுல்லையிலுள்ள ஜே.வி.பி யின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற சோசலிச இளைஞர் முன்னனியின் காதலர் தின விழிப்புனர்வு குறித்து ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருட்களின் விலையேற்றத்தாலும் பொருளாதார சுமைகளினாலும் பல இளைஞர், யுவதிகளின் காதல் திருமணங்கள் நிறைவேறாது இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளன.

குறிப்பாக தற்போதைய சூழ்நிலையில் சாதாரண திருமண வைபவத்தை நகரப்புரத்தில் நிறைவேற்றுவதென்றால் குறைந்தது 10 இலட்சம் ரூபாவாவது தேவை. அந்தளவிற்கு நாட்டில் விலைவாசி உயர்வடைந்துள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் காதலர் தினத்தை முன்னிட்டு சோசலிச இளைஞர் முன்னணியினால் விசேட விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

குறிப்பாக அம்பாந்தோட்டை, மாத்தறை, பதுளை போன்ற நகரங்களில் துண்டுப்பிரசுரங்களை விநியோகிப்பதுடன் சுவரொட்டிகளையும் ஒட்டவுள்ளோம் என்றார். (அ-2)

## ஐ.தே.கவின் தலைமைத்துவத்தை நிரப்பக்கூடியவர் எவரும் இல்லை

### கூறுகிறார் ரணில்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தை ஏற்றுக் கொண்டு வெற்றிடத்தை நிரப்பக் கூடிய பிறிதொருவர் இல்லை. இவ்வாறு தலைவர் ரணில் விக்ரமசிங்க கூறுகிறார்.

மாத்தறை - திக்வெல்ல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய போதே அவர் குறித்த கருத்தை முன்வைத்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், 2014 ஆம் ஆண்டில் இந்த அரசாங்கத்தின் ஆயுட் காலத்தை நிறைவு செய்ய வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சி பற்றியல்ல, நாட்டை பற்றி சிந்திக்க வேண்டும். எனக்காக என்று சுயநலமின்றி நாட்டை பற்றி கவனம் செலுத்த வேண்டும்.

தனியாக சென்று ஒழுங்கு பத்திரத்திற்கு அமைய செயற்பட முடியாது. தலைவருக்கான வெற்றிடத்தை நிரப்பக் கூடிய ஒருவர் குறித்த யோசனை தமது கட்சி யாப்பில் இல்லை.

பிழை செய்தவர்களை திருத்திக் கொண்டு நல்வழிப்படுத்தி அனைவரையும் இந்த போராட்டத்தில் இணைத்துக் கொள்ள வேண்டும் எனவும் அவர் கூறினார். (அ-2)



யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலர் எஸ்.சிவசிறி உள்ளிட்ட விருந்தினர்களை அழைத்து வரப்படுவதையும் மாணவிகளின் அணிவகுப்பினையும் பிரதம விருந்தினரின் பாரியார் வெற்றி பெற்ற மாணவி ஒருவருக்கு வெற்றிக் கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.செல்வதீபன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னையில் இன்று ஐ.நா.அலுவலகம் முற்றுகை; நெடுமாறன், வைகோ உள்ளிட்டோர் கைது

இலங்கைத் ஈழத்தமிழர்களுக்கு நீதி கிடைக்க வேண்டுமென வலியுறுத்தி அறப்போர் தொடர்பாக ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது,

சுதந்திரத் தமிழ் ஈழ விடியலை நோக்கி வீரத் தியாகி முருகதாசன் நினைவு நாளையொட்டி லண்டன் மாநகரில் இருந்து மானமும் தியாக உணர்வும் கொண்ட தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவினர், மனித குலத்தின் மனசாட்சியைத் தட்டி எழுப்ப தியாகப் பயணத்தினை ஆரம்பிக்கின்றனர்.

நெஞ்சைப் பிளக்கும் ஈழத் தமிழர் படுகொலை அவலக் காட்சிகள் காணொளிகளாக உள்ளத்தை உருக்கும் புகைப்படங்களாக மக்கள் விழிகளையும் உள்ளங்களையும் கண்ணீரோடு ஈர்க்கும் வகையில் பரப்புரை செய்கின்றனர்.

பிரான்ஸ், பெல்ஜியம், ஜேர்மனி, நெதர்லாந்து நாடுகளின் 54 நகரங்களில் ஈழ விடியலுக்கான கருத்துப் பரப்புரை செய்தவாறு சுவிட்சர்லாந்து நாட்டின் ஜெனீவாவுக்குச் செல்கின்றனர்.

இலங்கை அரசை அனைத்துலக நீதிமன்றக் குற்றக்கூண்டில் நிறுத்தவும் சுதந்திரத் தமிழ் ஈழத்திற்கான பொது வாக்கெடுப்பினை அனைத்துலக நாடுகள் நடத்திடவும் அந்த வாக்கெடுப்பில் புலம்பெயர் ஈழத்தமிழ் மக்கள் அந்தந்த நாடுகளில் பங்கேற்கவும் அதற்கு முன்னதாக சிங்களக் குடியேற்றங்களும் சிங்கள இராணுவமும் தமிழ் ஈழத் தாயகத்திலிருந்து வெளியேற்றப்படவும் இலக்காகக் கொண்டு தமிழ் ஈழ மக்களும் உலகெங்கும் உள்ள தன்மானத் தமிழர்களும் ஒரு சேரக் குரல் எழுப்ப வேண்டியது தமிழ்க் குலத்தின் தலையாய கடமையாகும்.

இதேவேளை, இலங்கையில் இனப்படுகொலையை தடுக்கத் தவறிய ஐக்கிய நாடுகள் சபையைக் கண்டித்து உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன் தலைமையில் சென்னையில் ஐ.நா. அலுவலகத்தை முற்றுகையிட்ட நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர்.

இலங்கையில் தமிழினப் படுகொலையை தடுக்கக்கோரி ஐக்கிய நாடுகள் சபையின் முன்பாக தீக்குளித்த முருகதாசனின் நினைவு நாள் நேற்றாகும். இதையொட்டி இலங்கையில் இனப்படுகொலையை தடுக்க தவறிய ஐ.நா. சபையைக் கண்டித்தும் இலங்கையில் தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு காண பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளைவலியுறுத்திசென்னை அடையாறில் உள்ள ஐ.நா. அலுவலகம் முன்பாக முற்றுகைப் போராட்டம் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து சென்னையில் நேற்று காலை பழ.நெடுமாறன், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ., தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் நிறுவனர் தி.வேல்முருகன் உள்ளிட்ட நூற்றுக்கணக்கானோர் ஐ.நா. அலுவலகத்தை முற்றுகையிட முயன்றனர். ஆனால், அனைவரையும் தடுத்த பொலிஸார் அவர்களை கைது செய்தனர். (அ-2)

## சூதாட்ட விடுதி சுற்றி வளைப்பு; 26 பேர் கைது

(கொழும்பு)

கொழும்பு- மருதானையிலுள்ள விடுதியொன்றில் சூதாட்டத்தில் ஈடுபட்ட 26 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய நேற்று முன்தினம் பிற்பகல் இவர்கள் கைது செய்யப்பட்டதாக தெரிவித்துள்ளனர்.

நீண்ட காலமாக குறித்த விடுதியில் சூதாட்டம் இடம்பெற்று வந்தமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. சுற்றிவளைக்கப்பட்ட விடுதியிலிருந்து ஒரு இலட்சத்து 55 ஆயிரம் ரூபா பணத்தை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 26 பேரும் கொழும்பை அண்மித்த பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்பது தெரிய வந்துள்ளது. சந்தேக நபர்கள் நேற்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர். (அ-2)

## இலங்கைக்கு அருகாமையில் உள்ள கப்பல் பாதைகள் மாசடைந்துள்ளன

(கொழும்பு)

இலங்கைக்கு அருகாமையில் உள்ள கப்பல் பாதைகள் மாசடைந்துள்ளதாக நாவா விண்வெளி ஆய்வு நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையை அண்மித்த பகுதிகளில் கப்பல் பாதைகளே மிகவும் அதிகமாக மாசடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

ஒரு தசாப்த காலமாக குறித்த கப்பல் பாதைகள் தொடர்பில் அவதானிக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளது.

கப்பல்களிலிருந்து வெளியேற்றப்படும் வாயுக்கள் மற்றும் ஏனைய பொருட்களினால் இவ்வாறு கடல் மாசடைந்துள்ளது. கடலில் கலந்துள்ள சில வகை நச்சுப் பொருட்கள் மனித உடலுக்கு தீங்கை ஏற்படுத்தக் கூடிய வகையில் அமைந்துள்ளது என ஆய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

குறிப்பாக இருதயம் மற்றும் சுவாசப்பை ஆகியவற்றுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எனத் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக்கும் சிங்கப்பூருக்கும் இடையிலான கப்பல் பாதையே இவ்வாறு மாசடைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளனர். (அ-2)

## கல்வி முறைமையில் மாற்றம் வேண்டும்

### பிரதமர் தெரிவிப்பு

கல்வி முறைமையில் மாற்றம் ஏற்பட வேண்டும் என பிரதமர் டி.எம்.ஜயரத்ன வலியுறுத்தியுள்ளார். கம்பளை வலயக் கல்வி பணிமனைக்கான மூன்றுமாடி கட்டட திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே பிரதமர் தற்போதைய கல்வி முறைமை தொடர்பில் கருத்து வெளியிட்டார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், தற்போதைய கல்வி முறையில் குறைபாடுகள் காணப்படுவதாக தெரிவித்த அவர், சமூக முறையிலும் மாற்றங்கள் ஏற்பட வேண்டும் என குறிப்பிட்டுள்ளார். அநேகமான பிள்ளைகள் இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளுக்குச் சென்று கல்வி பயில்வதில் ஆர்வம் காட்டுவதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

வாழ்வாதார தொழில்களை மேற்கொள்வதற்கு பொருந்தக்கூடிய கல்வி முறைமை ஒன்றை இலங்கைக்கு அறிமுகப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## இலங்கையில் பொ.ந.மாநாடு என கமலேஸ்சர்மா கூறவில்லையாம்

### பொதுநலவாய அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாடு எதிர்வரும் நவம்பரில் கொழும்பில் நடைபெறும் என்பதை பொதுநலவாய நாடுகளின் செயலாளர் கமலேஸ்சர்மா உறுதிப்படுத்தினார் என வெளியான செய்தி மறுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொதுநலவாய நாடுகளின் செயலகம் விடுத்துள்ள அறிக்கையில், அவ்வாறான உறுதிமொழி எதனையும் கமலேஸ்சர்மா வெளியிடவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறான ஒரு அறிக்கை வெளியிடப்படுமானால் அதனை பொதுநலவாய நாடுகளின் அமைப்பின் உத்தியோகபூர்வ பேச்சாளர் ரிச்சட் உகுவினால்தான் வெளியிடப்படும்.

இந்நிலையில் கமலேஸ்சர்மா தற்போது இலங்கையில் விஜயத்தை மேற்கொண்டுள்ளார் என்று மாத்திரமே பேச்சாளர் அறிக்கை வெளியிட்டுள்ளார் என்பதை பொதுநலவாய அமைப்பு செயலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையின் வெளியுறவு அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகமவை கோடிட்டு நேற்று முன்தினம் ஊடகங்களில் பொதுநலவாய நாடுகள் மாநாடு இலங்கையில் நடக்கும் என்பதை கமலேஸ் உறுதிப்படுத்தினார் என்ற செய்தி வெளியாகியிருந்தது.

இந்த நிலையில் இது பிழையான செய்தி என்று குறிப்பிட்டுள்ள பொதுநலவாய நாடுகளின் உத்தியோகபூர்வ பேச்சாளர் ரிச்சட் உகு இலங்கையில் தற்போது பயணம் மேற்கொண்டுள்ள சர்மா, தமது பயணத்தை இன்று முடித்துக்கொண்ட பின்னர் தமது அமைப்பினால் நிலைப்பாட்டு அறிக்கை ஒன்று வெளியிடப்படும் என்று குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## ஜனாதிபதியை சந்திக்க முதலமைச்சர்கள் விருப்பம்

(கொழும்பு)

மாணவர்களிடமிருந்து பணம் அறவிட்ட விவகாரம் தொடர்பாக மாகாண முதலமைச்சர்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்திக்கவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எட்டாம் வகுப்பு மாணவியொருவர் வகுப்பறை தளபாடங்களுக்கு வர்ணம் பூசுவதற்காக 800 ரூபாவை செலுத்த சில தேங்காய்களை திருடியதாக கூறப்படும் செய்தி பணம் அறவிடுவது தொடர்பாக சில நடவடிக்கைகளை எடுக்க அதிகாரிகளை தூண்டியுள்ளது என மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஊடகங்களுக்கு குறிப்பிட்டுள்ளார்.


பாடசாலை தேவைக்கு மாணவரிடம் அறவிடப்படும் பணத்தை கட்டுப்படுத்துவதற்காக சுற்றறிக்கைகள் திருத்தப்பட்டுள்ளன என முதலமைச்சர் தெரிவித்தார்.

பணம் கொடுக்க வசதியில்லாத பிள்ளைகளிடமிருந்து பணம் பெற அனுமதிக்கப்பட மாட்டாது என அவர் கூறினார்.

இவரது வறுமையை உணர்ந்து பண அறவீடுகளிலிருந்து இவருக்கு பூரண விலக்களிக்கப்பட்டிருந்தது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

800 ரூபா பணம் கொண்டு வரும்படி பாடசாலை நிர்வாகம் கூறியதாக இந்த பிள்ளை கூறியது உண்மையல்ல என இந்த பிரச்சினையை விசாரிக்க நியமிக்கப்பட்ட குழு தெரிவித்துள்ளது. (அ-2)





அவுஸ்திரேலியாவில் இருந்து இலங்கை வந்த புலம்பெயர் உறவுகள் மாங்குளம் பிரதேச மாதர் சங்கத்திற்கு தென்னங் கன்றுகள், தையல் இயந்திரம் ஆகியவற்றை வழங்கியதைப் படங்களில் காணலாம். (படங்கள்:- மல்லாவி செய்தியாளர்)

## தம்புள்ளயிலும் மர்மப் பொருள் விழுந்தது

தம்புள்ள புவக் அத்தாவல சமனலாயாய பகுதியிலுள்ள வீட்டின் மீது நேற்றைய தினம் அதிகாலை வானிலிருந்து மர்மப் பொருட்கள் விழுந்துள்ளன.

அந்தப் மர்மப்பொருள் கறுப்பு மற்றும் வெள்ளை நிறத்தில் இருப்பதாக வீட்டின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் அப்பகுதியிலுள்ள அரலகங்வில பகுதியில் வானிலிருந்து மர்மப்பொருட்கள் விழுந்தமை குறிப்பிடத் தக்கதாகும். (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விதியும் மதியும்

தன் எழுத்தோவியங்களில் கீழ்க்கண்ட தன் கருத்துக்களை வெளியிடுகிறார் உலகப் புகழ் பெற்ற மேல்நாட்டு நாடகாசிரியர் ஷேக்ஸ்பியர்.

விதியை நொந்து கொண்டு பயனில்லை. விதியை மதி கொண்டு மாற்றக் கூடிய பேராற்றல் உள்ள மனிதர்களும் இருக்கிறார்களேஎன்கிறகருத்தே அது.

**மதிக்குத் துணை நிற்கும் ஜோதிடம்**

ஆனால் மேலே கண்ட ஷேக்ஸ்பியரின் கருத்துக்கள் ஜோதிடத்திற்கு நேர் எதிரிடையான கருத்து என்று நாம் சொல்வதிற்கில்லை.

ஏனெனில், எல்லாவித ஆற்றல் பெற்றிருந்தும் ஆக்க வேலைக்குப் பயன்படாத வாய்ச்சொல் வீரர்கள் நம்மில் பலர் இருக்கிறார்களல்லவா? அவர்களுக்குத்தான் ஷேக்ஸ்பியரின் கருத்து முற்றிலும் பொருந்துமெனலாம்.

**உதாரணமாக,**

தத்துவம், வேதாந்தம் பேசிக் கொண்ட எந்தவித ஆக்க வேலைகளுக்கும் பயன்படாதவர்களும் இருக்கிறார்களே! அவர்களுக்கு இக்கருத்துப் பொருந்தலாம்.

ஆண்டவன் பால் தீவிர பக்தி கொண்டு, பக்திப் பரவசத்தில் மூழ்கி சிவன் பெரிதா? சக்தி பெரிதா? என்றோ, வைணவம் பெரிதா? சைவம் பெரிதாவென்றோ தேவையற்ற ஆராய்ச்சிகளில் இறங்கி, தங்கள் வாழ்நாள் பூராவும் எந்த ஆக்க வேலைக்கும் பயன் படாமல் இருக்கிறார்களே அவர்களுக்கு இக்கருத்துப் பொருந்தலாம்.

தன்னிடம் பல குற்றங்கள் மலிந்து கிடக்கும் போது பிறரது குற்றங்களைக் கண்டு மகிழ்வதிலேயே தங்கள் பொன்னான நேரத்தைச் சிலர் வீணாக்குவதும் உண்டு. இவர்களும் எந்தவித ஆக்க வேலைக்கும் பயன் படாதவர்களாகையால் ஷேக்ஸ்பியர் கருத்து இவர்களுக்கும் பொருந்தலாம்.

அமெரிக்கா ஆனந்த வாழ்க்கையையும், ரஷ்யா இரகசிய வாழ்க்கையையும் அழகாக, இரசமாக மேடைகளில் பேசி இந்தியாவில் வாழும் நாம் எப்படி வாழ வேண்டுமென்று திட்டமில்லாதவர்களும் எந்த ஆக்க வேலைக்கும் பயன்படாதவர்களுமான இவர்களுக்கும் இக்கருத்து பொருந்தலாம்.

யாரோ மேடையில் பேசிய அலங்காரச் சொற்களையும் ஆணித்தரமான விளக்கங்களையும் கேட்ட மாத்திரத்தில் தானும் அரசியல்வாதியாகி, ஒரு செய்தித்தாளை வாங்கி அக்குளில் வைத்துக் கொண்டு சந்து முனைகளிலும் டீக்கடைகளிலும் வெற்றிலைப் பாக்குக் கடைகளிலும் சலூன்களிலும் வீட்டுத்திண்ணைகளிலும் அரசியலை அள்ளி வீசிக் கொண்டே தங்கள் காலத்தை வீணடிக்கும் சிலரை நாம் பார்த்திருக்கிறோமல்லவா? இவர்களும் எந்தவித ஆக்க வேலைகளுக்கும் பயன்படாதவர்கள் தாம். இவர்களுக்கும் இக்கருத்துக்கள் பொருந்தும். இப்படி 40% மனிதர்கள் பிறருக்கு உதவாமல் நம்மில் இருப்பதை நாம் மறுப்பதற்கில்லை.

இதுவன்றி ஒன்றுமே தெரியாமல், எதையுமே தெரிந்து கொள்ளும் ஆர்வமில்லாமல், யார் எது சொன்னாலும் வைதாலும் அடித்தாலும் சோறு கிடைத்தால் போதுமென்று ஊர் சுற்றி வருபவர்களும் இருக்கிறார்கள் அல்லவா? இவர்களுக்கும் மேலே கூறிய கருத்து பொருந்தலாம்.

ஏன் இவர்களெல்லாம் இப்படி இருக்க வேண்டுமென்று பார்க்கும் போது நம்மில் ஊறிப்போன பழம் பதிலான *விதி* என்ற சொல் தான் முன்னே நிற்கிறது. விதி விதி என்று நாம் சொல்லச் சொல்ல அரைச் சோம்பேறிகள் முழுச் சோம்பேறிகளாகிக் கொண்டுதான் வருவார்கள்.

சமுதாய முன்னேற்றத்தில் அக்கறை கொண்ட யாரும் விதியைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. மதியின் உதவி கொண்டு விதியை மாற்றி அமைத்துக் கொள்ளவே முனைவர்.

அந்த அளவில் ஷேக்ஸ்பியர் சொன்ன கருத்து உண்மையானதும் அப்பட்டமானதும் ஆணித்தரமானதுமாகும்.

ஏன் நம் முன்னோர்களும் கூட விதியை மதியால் வெல்ல முடியுமென்ற தத்துவத்தைத் தான் போதித்து வந்திருக்கிறார்கள். புராண இதிகாசத்திலும் எத்தனையோ சான்றுகள் இருக்கத்தான் செய்கின்றன.

மார்க்கண்டனுக்குச் சிவனால் விதிக்கப்பட்ட ஆயுள் 16 வயது தான். ஆனால் அவன் மதி கொண்டு சிவார்ச்சனையால் என்றும் பதினாறு என்று வயது பெற்ற கதை உண்டல்லவா?

இதுபோலவே சத்தியவானின் உயிர் பிரிந்ததைக் கண்ட சாவித்திரி தன் கணவனின் விதி அவ்வளவு தான் என்று இருக்கவில்லை. எமனுடன் போராடி, மாண்ட கணவனை மீண்டும் பெற்றாள் தன் மதிநுட்பத்தால் என்கிறது புராணக்கதை.

இன்னும் இதுபோன்ற கதைகள் பல




உண்டு. எல்லாவற்றையுமே எழுதிக் கொண்டு வந்து காகிதத்தை நிரப்புவது நமது நோக்கமல்ல. விதியை மதியால் மாற்ற முடியுமா? முடியுமானால் இதில் அனுபவ பூர்வமாக வெற்றி பெற்றவர்கள் இருக்கிறார்களா? என்பதுதான் கேள்வி. ஒரேயடியாக விதியை மதியால் மாற்ற முடியாது என்பது வள்ளுவரின் வாக்கு.

ஆனால் ஓரளவாவது மாற்ற முடியும் என்கிற கருத்தில்

*தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சிதன்*
*மெய்வருத் தக்கூலி தரும்*

என்று அவரும் கூறாமலிருக்கவில்லை.

விதியை நம்பிக் கொண்டிருப்பவர்கள் கூட சமயங்களில் தங்களை அறியாமல் மதியை உபயோகித்து விதியை மாற்றுகிறார்கள் என்பது உண்மை.

எல்லாவற்றிற்கும் விதியைச் சுட்டிக் காட்டித் தப்பிக்கும் நபர் கூட ஒரு பாம்பு தன்னை நோக்கிக் கடிக்க வருகிறதென்றால் அலறி கட்டிக் கொண்டு தலை கால் தெரியாமல் ஓடித் தான் தப்பித்துக் கொள்வதுமுண்டு. இதுஏன்? பாம்பு தன்னைக் கடிக்க வேண்டிய விதிபோல இருக்கிறதென்று பேசாமல் நிற்பதுதானே. இங்கே விதியை மாற்றக் கூடிய மதி முன்வந்து நிற்கிறது. அதே நபர் அல்லது அதுபோன்ற விதிக்கு முதலிடம் கொடுக்கும் நபர் ஏதாவது பலமான நோய் வாய்ப்பட்டால் அத்தகைய நோயிலிருந்து விடுபட எத்தனையோ டாக்டர்களிடம் சென்று சிகிச்சை பெறுவதும் உண்டல்லவா?

கண்கள் தெரிவதில்லை என்றால் கண் கெடவேண்டிய விதிபோல் இருக்கிறது என்று பேசாமல் இருப்பவர்கள் யார்?

குழந்தை பிறக்காத தம்பதிகள் சாந்தி முறைகளைக் கையாண்டு குழந்தைகளைப் பெறுவதையும் நாம் பார்க்காமலில்லை. விதியின் மேல் பழி போடுபவர்கள் கூட இந்த அறிவுரைகளைத் தம்பதிகளுக்கு அளிப்பதுண்டு. இத்தகைய சூழ்நிலையில் விதிமேல் பழி போடுபவர்களும் தங்களையறியாமல் மதி கொண்டு விதியை மாற்ற முனைவது கண் கூடு.

ஆகவே, இத்தகைய சமயங்களில் எப்படி விதியை மதிகொண்டு மாற்ற எண்ணமுண்டாகிறதோ அதுபோலத் தங்கள் வாழ்க்கையின் தரத்தை உயர்த்திக் கொள்ளவும் பயனற்ற வேலைகளிலிருந்து தங்களை விடுவித்துக் கொண்டு பயனுள்ள ஆக்க வேலையில் ஈடுபடுத்திக் கொள்ளவும் தங்கள் விதியில் சிறு மாற்றத்தையாவது மதிகொண்டு ஏற்படுத்திக் கொள்ளலாம்.

## சவுதிக்கான இலங்கை தூதுவராக கிருஸ்ணமூர்த்தி நியமிக்கப்படுவார்

சவுதி அரேபியாவுக்கான இலங்கை தூதுவராக சிரேஷ்ட இராஜதந்திரி வி.கிருஸ்ணமூர்த்தியின் பெயர் சிபாரிசு செய்யப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளது.

ரிஸானா நபீக்கிற்கு அண்மையில் சவுதி அரேபியாவில் சிரச்சேதம் செய்யப்பட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதையடுத்து அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் சவுதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவர் அஹமட் ஜவாத் இலங்கை அரசாங்கத்தினால் மீளழைக்கப்பட்டார்.

இதனையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே இராஜதந்திரி வி.கிருஸ்ணமூர்த்தியின் பெயர் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

சென்னையிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தில் பிரதி உயர்ஸ்தானிகராக கடமையாற்றிய இவர் இராஜதந்திர சேவையில் நீண்டகால அனுபவம் கொண்டவராவார்.

இதேவேளை இலங்கைக்கான சவுதி அரேபிய தூதுவர் அப்துல் அசீஸ் அல் ஜம்மாஸ் நாடு திரும்பவுள்ளதாக கொழும்பிலுள்ள தூதுவர் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எது எவ்வாறாயினும் இரு நாடுகளுக்குமிடையில் உறவு தொடர்ந்து நீடிக்கும் என்பதில் அமைச்சு உறுதியாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## எந்தவொரு மாற்று கட்சிகளும் தேர்தலில் வெற்றி பெறாது

(கொழும்பு)

ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி என்ற பிரதான இரண்டு கட்சிகளுக்கு மேலதிகமாக வேறு எந்தவொரு மாற்று முன்னணிக்கும் தேர்தலில் வெற்றிபெற முடியாது என்ற கருத்தை ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான பாலித ரங்கே பண்டார நேற்று முன்தினம் வெளியிட்ட கருத்துக்கு பதிலளிக்கும் முகமாகவே ஜோன் அமரதுங்க இந்த நிலைப்பாட்டை வெளியிட்டுள்ளார்.

அவ்வாறான மாற்று கொள்கை முன்னணிகளை தோற்றுவிப்பவர்கள் இறுதியில் அரசியலில் இருந்து விலக வேண்டிய நிலை மாத்திரமே ஏற்படும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எதிர்வரும் மாகாண சபை தேர்தலுக்காக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிராக மாற்று அரசியல் முன்னணியொன்று தோற்றுவிக்கப்படும் என்ற நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார்.

இதனிடையே 11 எதிர்தரப்பு அரசியல் கட்சிகள் ஐக்கிய தேசிய கட்சியுடன் ஒன்றிணைந்த ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.

எவ்வாறாயினும் அந்தக் கூட்டணியில் தாம் இணைந்து கொள்ளப் போவதில்லை என்றும் பாலித ரங்கே பண்டார அறிவித்துள்ளார். (அ-2)

## வாரணாசியில் விபத்து யாத்திரிகர்கள் காயம்

(கொழும்பு)

இலங்கை யாத்திரிகர்களை ஏற்றிச்சென்ற பேருந்து ஒன்று உத்தரப்பிரதேசத்தில் உள்ள வாரணாசி பகுதியில் விபத்திற்குள்ளாகியுள்ளதாகக் கூறப்படுகிறது. அதில் பயணித்த இலங்கையர்கள் சிலர் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வாரணாசிக்கு நேற்றுமுன்தினம் சென்ற யாத்திரிகர்கள் அடங்கிய பேருந்து மலைப் பகுதி ஒன்றில் கட்டுப்பாட்டை இழந்து குடை சாய்ந்துள்ளது.

குறித்த பேருந்தில் 14 இலங்கையர்கள் பயணித்துள்ளதாகவும் இவர்களுக்கு கை மற்றும் கால்களில் காயம் ஏற்பட்டுள்ளதாகவும் இலங்கை வெளிவிவகார அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

காயமடைந்தவர்கள் டில்லியில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகரகத்திற்கு அழைக்கப்பட்டு மீள இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ-2)

### க.பொ.த(உ/த)பெறுபேறு


**கிளி/கனகபுரம் மகா வித்தியாலயம்**

**வணிகப்பிரிவு**

டி.நிறோசான்- 3ஏ, ப.பவித்திரன்- 3ஏ, த.நிதர்சன-ஏ2பி, வி.டயானி- ஏ2பி, சே.சயந்தனா- 3பி, அ.நிசாந்தன்- 2ஏசி.

**கலைப்பிரிவு**

செ.திசாந்தினி- 2பிசி



யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மைய மாணவர்களின் எங்கள் கதைகள் -2 எனும் புகைப்படக் கண்காட்சி அண்மையில் யாழ். பல்கலைக்கழக கலைப்பீட முன்றலில் நடைபெற்றது. இதன்போது கண்காட்சியில் வைக்கப்பட்டிருக்கும் புகைப்படங்களை மாணவர்கள் பார்வையிடுவதையும் படத்தில் காணலாம். (படம்:-உ.சாளீன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




368

# ஏரோட்டம் நின்று போனால்...

## அம்புலிமாமா கதைகள்



காசி தன் விவசாய நிலத்தையே வெறித்துப்பார்த்துக் கொண் டிருந்தான். சில ஆண்டுகளாகவே அவன் பிள்ளைகள் அவனை விவசாயத்தை விட்டொழித்து விட்டு நகரத்துக்குப்போவோ மென்று நச்சரித்து வந்தனர். அவன் மனைவியும் அவர்களுக்கு ஆதரவாகப்பேசி வந்தாள். கிரா மத்துப்பள்ளியில் மேற்படிப்பு வச தியில்லாததால் நகரத்துக்குச் செல்லவேண்டுமென மனைவியும் வற்புறுத்தினாள்.

ஆனால் காசிக்கு தன் குழந்தை போல் கவனித்துப் பாடுபட்டு பயி ரிட்டுவந்த நிலத்தை விட விருப்பமில்லை. வீட்டிலுள்ளவர் கள் நச்சரிப்பையும் தாங்கமுடிய வில்லை. அதனால் அவன் தன் நண்பனான விநாயகத்திடம் ஆலோசனை கேட்கப் போனான்.

விநாயகமும் விவசாயிதான்! காசி வயல்வேலைமுடிந்து நேராக விநாயகத்தின் வீட்டுக்குச் சென்ற போது அவன் தனிமையில் உட் கார்ந்து இருந்தது வியப்பாக இருந் தது.என்னப்பா? வயல்வேலை முடிந்து வீட்டுக்கு வந்துவிட் டாயா? எங்கே உன்னுடைய பொண் டாட்டி பிள்ளைகள்? என்றான்.

ஒரு சோகப் பெருமூச்சு விட்ட விநாயகம் அவர்களா! அவர்கள் நகரத்திற்குச் சென்றுவிட்டார்கள். நான் தனியாக இருக்கிறேன் என் றான். காசியின் முகத்தில் ஏற் பட்ட குழப்பத்தைக் கண்டு அவனே தொடர்ந்து இங்கு படிப்பு வச தியில்லையென்பதால் மனைவியும் பிள்ளைகளும் நகரத்திற்குச் சென்று விட்டனர். நான் மட்டும் தனியாக இருக்கிறேன் என்றான்.

அடடா! அப்படியா? என்று திகைப்புடன் கேட்ட காசி என் வீட்டிலும் இதே பிரச்சினைதான்! அதற்கு ஏதாவது ஆலோசனை பெற லாம் என்று உன்னைத்தேடி வந் தால் உன் வீட்டிலும் அதே பிரச் சினைதானா? சரிதான்! நீ எடுத்த முடிவு சரிதான்! ஆனால் என் னால் என் குடும்பத்தைப் பிரிந் திருக்க முடியாது. அதனால் நான் வயலை விற்றுவிட்டு குடும்பத்து டன் நகரத்திற்குப் போகலாம் என்று நினைக்கிறேன் என்றான்.

தயவுசெய்து அப்படிச் செய் யாதே காசி, என்ற விநாயகம் இவ் வாறு ஒவ்வொருவரும் விவசாயத் தைக் கைவிட்டுப்போனால் கடைசி யில் எல்லோரும் பட்டினி கிடக்க நேரிடும் என்றான்.

எல்லோரும் நன்றாகப் பட்டினி கிடக்கட்டும் என்று கத்தியவாறு அங்கு வந்தான் விநாயகத்தின் பக். கத்து வீட்டுக்காரனான ராஜு. ஊர்



உலகம் உட்கார்ந்து சாப்பிட நாம் வியர்வை சிந்த உழைக்கிறோம். ஆனால் உலகத்துக்காக உழைக்கும் நமக்கு அரைவயிறு சோறுகூட கிடைப்பது இல்லை. ஒவ்வொரு ஆண்டும் நாம் மட்டும் ஏன் கஷ்டப்பட வேண் டும்? நம் நாட்டு ராஜாகூட நம்மைப் பற்றிக் கவலைப் படுவது இல்லை என்று பொரிந்து தள்ளினான்.


கோபப்படாதே ராஜு என்ற விநா யகம் நமக்கும் ஒருநாள் நல்லகாலம் வரும் என்றான். அதுவரை நாம் பட் டினி கிடக்கவேண்டுமா? என்ற காசி நாம் வயலுக்காகப் படும் சிரமத்தை யும் உழைப்பையும் வேறு ஏதாவது தொழிலில் காட்டினால் நாம் ராஜா போல் இருக்கலாம். நான் பேசாமல் நிலத்தை விற்றுவிடப்போகிறேன் என்று படபடத்தான்.

மறுபடியும் சொல்கிறேன் காசி! அவசரப்பட்டு நிலத்தைவிற்று விடாதே! நாம் எல்லோரும் ஒன்று பட்டு ஒற்றுமையாய் சேர்ந்து நம் முடைய விளைச்சலுக்கு நல்ல விலை கிடைக்கப் பாடுபடுவோம் என்றான் விநாயகம்.

நடக்காத விடயம் பற்றிப் பேசாதே! நாம் கரடியாய் கத்தினா லும் நம் குறைகளை அதிகாரிகளும் கேட்பதில்லை. நாம் மன்னரிடம் உழைப்புக்கேற்ற ஊதியம் கேட்கி றோம். ஆனால் அரசாங்கம் மிகவும் குறைந்த விலைக்கு நம் தானியத் தைக் கொள்முதல் செய்வதால் நம் வருமானம் மிகக்குறைவாக உள் ளது. எத்தனையோ முறை இதை எடு த்துச்சொல்லியும் மன்னர் அக்கறையே காட்டுவதில்லை என்றான் ராஜு.

நண்பர்களே! நம் கஷ்டங்களை நாம் வாய்வார்த்தையாக மன்னரி டம் கூறினால் பயனில்லை. அவ ற்றை மன்னர் உணரும்படி தான் செய்ய வேண்டும். அதற்கு என்னி டம் ஒரு திட்டம் உள்ளது. நாம் மூவரும் பாத யாத்திரை மேற்கொண்டு நம்முடைய ராஜ்யத்தில் உள்ள எல்லாக்கிராமங் களுக்கும் சென்று எல்லா விவசாயி களையும் சந்தித்து ஆதரவு திரட்டு வோம். பல இலட்சம் கைகள் ஒன்று சேர்ந்தால் ஆலமரமே ஆடிப்போ கும். மன்னர் எம் மாத்திரம்? என்று விநாயகம் தன் திட்டத்தை விளக்கி னான். ஏனைய இருவரும் அதற்கு ஒப்புக்கொள்ள பாதயாத்திரை தொடங்கியது.

அந்த ஆண்டு ஆடிமாதம் விதை விதைத்து பின்னர் நாற்று நட்டு



விவசாயத்துக்கு வழக்கம்போல் பிள்ளையார் சுழிபோட்டனர். ஆறு மாதங்கள் பின் பொங்கலு க்கு முன் அறுவடையும் முடிந்தது. ஆனால் ராஜ்யம் முழுவதும் பய ங்கர அதிர்ச்சி ஏற்பட்டது. ஏனெ னில் அந்த ஆண்டு ஒரு மணி நெல்



கூட விற்பனைக்கு வரவில்லை. வழக் கமாகக் கிடைக்கும் விளைச்சலில் 20 சதவீதம் கூட தேறவில்லையென் றும் அதனால் மக்களுக்கு எது வுமே கிடைக்காது என்ற செய்தி ராஜ்யத்தையே நிலைகுலையச் செய்தது. இடியுண்டதுபோல் அதிர்ந்த மன்னன் அவ்வாறு விளைச்சல் மிகக்குறைந்து போனது ஏன் என்று விசாரணை செய்த போது தான் உழவர்கள் வேண்டுமென்றே மிகக்குறைவாகவே பயிரிட்டுள்ள னர் என்று தெரியவந்தது. கொதித் துப்போன மன்னன் இந்தப் புரட் சிக்கு முக்கிய காரணமான விநாயகத் தையும் அவன் இரு நண்பர்களை யும் தன்னிடம் வரவழைத்தான். அவர்களுடைய சதியை தேசத்து ரோகம் என்று கடுமையாக சாடி விட்டு அதற்கு விளக்கம் கேட்டான்.

உடனே விநாயகம் மகாராஜா! எத்தனையோ முறை உங்களை நியா யமான முறையில் அணுகி நெல்லு க்கு சரியான விலை நிர்ணயம் செய்யுங்கள் என்ற போது எங்கள் வேண்டுகோளைப் புறக்கணித்தீர் கள். காரணம் எங்கள் வயிறு நிரம் பியதோ இல்லையோ நாங்கள் உழைத்து உருவாக்கும் தானியத் தை நீங்கள் உட்கார்ந்து தின்று களித்தீர்கள். உழைப்பது ஒருவன் அனுபவிப்பது வேறொருவன் எனும் நியாயம் எத்தனை நாள் செல்லும்? நீங்கள் நியாயமாகச் சொன்னால் புரிந்து கொள்ளமாட் டீர்கள் என்பதால் வேறு வழியி ன்றி இந்த வழியில் இறங்கினோம். இப்போதாவது புரிந்துகொள்ளுங் கள்! எங்கள் ஏரோட்டம் நின்று போனால் உங்கள் தேரோட்டமும் நின்றுவிடும் என்றான்.


விநாயகத்தின் பேச்சு மன்ன னுக்குக்கோபம் மூட்டினாலும் அவன் சொல்வதிலுள்ள நியாயத்தை உணர்ந்து மௌனம் ஆனான். நீண்டநேரம்யோசித்தபின் உங்கள் கோரிக்கையின் நியாயத்தை மிக வும் தாமதமாக இன்றுதான் புரிந்து கொண்டேன். இனி அடுத்த ஆண்டு முதல் உங்கள் விளைச்சலு க்கு கணிசமான விலை கிடைக்கும் படி நான் கட்டளை பிறப்பிக்கின் றேன். உங்களைக் கலந்து ஆலோசி த்த பின்னரே விலையை நிர்ணயம் செய்வேன். இனிமேல் நீங்கள் இது போன்ற செயல்களில் ஈடுபட வேண் டாம் என்றான். மன்னனின் பேச்சைக் கேட்டு மகிழ்ச்சி ஆரவாரம் செய்த விவசாயிகள் நிறைவுடன் வீடு திரும்பினர். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்ற சொல்லின் உண்மை அன்று தான் அவர்களுக்கு புரிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் உலகப்போர்

## 44

## மானுடத்திற்கான திடக்கண்ணீர்!



ஊர் முனைக்கு வந்துட்டாக.

நூறு நூத்தம்பது வருசமா நிக்கிறேன். இந்த ஊருக்கதை ஒண்ணு விடாமத் தெரியும் எனக்கு. ஆனா உண்மை சொல்ல மாட்டேன்னு ஊமைச் சாட்சியா ஓங்கி நிக்குது ஒரு அரசமரம்.

தெரு வழியா நடந்து போறாக ஊருக்குள்ள.

'கெக் கெக்கே'ன்னு எக்கி எக்கித் தலையத் தூக்கி இவுகள வேடிக்கை பாக்குதுக அஞ்சாறு கோழிக.

ஒரு முந்திய இடுப்புல உடுத்திக்கிட்டு மறுமுந்தியக் காத்துல ஒதறிக் காயவச்சுக்கிட்டிருக்கா கூன்விழுந்த கிழவி ஒருத்தி.

தெருவுல கிடக்கற மாட்டுச் சாணி மேல ஒண்ணுக்கு இருந்து கிட்டிருக்கான் மூக்குத் துடைக்கத் தெரியாத ஒரு மூணு வயசுப்பய.

ஒரே மாதிரி வாசலும் கதவும் எந்த வீட்டுக்கும் இல்ல.

ஒரு வீட்டுக் கதவு; ஒரு வீட்டுக்குப் படலு.

ஒரு வீட்டுக்குத் தகரம்; ஒரு வீட்டுக்குக் கோணிச்சாக்கு.

அழுதுக்கிட்டே தெருவுல மலம் கழிச்சிக்கிட்டிருக்கு ஒரு புள்ள. தெருக் கல்லுல உக்காந்து அதுக்கு ஒரு வாய் ஊட்டி விட்டுக்கிட்டே தானும் ஒரு வாய் தின்னுக்கிட்டிருக்கா கடமை தவறாத தாயொருத்தி.

ஊரு நாட்டுல நடக்கிற இந்தக் கூத்துகளப் பத்தி யாதொரு கவலையும் இல்லாம வேப்ப மரத்துக்குள்ள இருந்து தன் தொழிலைத் தான் செஞ்சிக்கிட்டிருக்கு கொள்கை மாறாத குயில் ஒண்ணு.

குக்கு... குக்கு... கூ... குக்கு... கூ...

சல்லிக்கட்டு ஆடுதுகளா சடுகுடு ஆடுதுகளான்னு தெரியாதபடிக்கு முள்முருங்கை மரத்துல அழிச்சாட்டியம் பண்ணுதுக அஞ்சாறு சிட்டுக் குருவிக.

"எல்லா தேசங்களிலும் பறவைகளும் விலங்குகளும் ஒரே வாழ்க்கைதான் வாழ்கின்றன. பகுத்தறிவுள்ள மனித வாழ்க்கைதான் இடத்துக்கு இடம் பேதப்பட்டிருக்கிறது. இல்லையா எமிலி?"

"நீங்கள் சொல்வது உண்மை... ஆனால், பேதப்படுத்தியது பகுத்தறிவு அல்ல. பேராசை; சுரண்டல்."

"கரண்ட்டு வந்துருச்சு... கரண்ட்டு வந்துருச்சு" வெளிய ஒக்காந்திருந்த சனம் விசுக்குன்னு ஓடி வீட்டுக்குள்ள போயிருச்சு டீவி பாக்க.

உக்காரவும் எந்திருக்கவும் ஒத்தாசைக்கு ஆளுவேணும்ங்கற கெழடு கட்டைக மட்டும் திண்ணையில உக்காந்து வெறிச்சு வெறிச்சுப் பாக்குதுக அந்த மூணுபேரையும்.

"ஏப்பா சின்னப்பாண்டி! சினிமாவுல சேந்தவுகளா இவுக? படம் புடிக்க வந்துருக்காகளா?" ஆசையாக் கேட்டா ஒரு கெழவி.

"சினிமா எங்க கெழவி ஓடுது? சீரியலுக்கு வந்திருப்பாக" மறுத்துப் பேசுனா கீரைக்காரி.

"இல்ல பாட்டி... இவங்கல்லாம்; வெளிநாட்டு ஆளுக. ஊரைச் சுத்திப் பாக்க வந்திருக்காக" என்றான் சின்னப்பாண்டி.

"இதெல்லாம் ஒரு ஊரு- இதச் சுத்திப்பாக்க ஆளு... ஏலே சின்னப் பாண்டி! சிட்டாம்மாகிட்டச் சொல்லித் தலைக்கு எண்ணெய் வைக்கச் சொல்லுப்பா அந்தப் பொட்டைப்புள்ளைக்கு. கொரங்கு பிச்சு எறிஞ்ச தூக்கணாங் குருவிக்கூடு மாதிரி தொங்கிக் கிடக்கு"

கெழவி சொன்னத எமிலிக்குச் சின்னப்பாண்டி சொல்லவும் அவ கலகலன்னு சிரிச்சுட்டா கையில முடியத் தள்ளிவிட்டுக்கிட்டே.

"இப்படித்தான் இருக்குமா இந்திய கிராமங்கெளெல்லாம்?" என்றான் இஷி.

"சில கிராமங்கள் இதைவிட அழகாக; பல கிராமங்கள் இதைவிட மோசமாக", என்றான் சின்னப்பாண்டி.

"மொத்தம் மூன்று இந்தியா" என்றான் இஷிமுரா.

"முதல் இந்தியா- அயல்நாட்டு வங்கிகளின் அந்தப்புரங்களில்.



இரண்டாம் இந்தியா- வளர்ந்துவரும் நகரப்புறங்களில். மூன்றாம் இந்தியா- வளராத கிராமப்புறங்களில்.

இந்த மூன்றாம் இந்தியாதான் பொய்யில்லாத இந்தியா; புறக்கணிக்கப்பட்ட இந்தியா"

## மனிதனை இடத்துக்கிடம் பேதப்படுத்தியது, பகுத்தறிவு அல்ல. பேராசை; சுரண்டல்

"வளமான பூமி; ஆனால் வறுமைப் பட்ட மக்கள்" என்றான் சின்னப் பாண்டி.

"மண்வளம் இயற்கை; வறுமை செயற்கை" என்றாள் எமிலி.

"என்ன செய்ய வேண்டும் இஷி" என்றான் சின்னப்பாண்டி.

"அமைப்பை மாற்று" புன்னகையோடு சொல்லிவிட்டு இறுக்கமானான் இஷி.

☆☆☆☆☆☆

மாடு கட்டுற கொட்டத்துல ஒக்காந்து பழைய மம்பட்டிக்குப் 'பண்டுதம்' பாத்துக்கிட்டிருந்தாரு கருத்தமாயி. வயசாகிப்போனா மனுசனுக்குப் பல்லு ஆடறமாதிரி மம்பட்டியும் ஆடுதில்லன்னு உள்ளுக்குள்ள சொல்லிக்கிட்டாரு.

மம்பட்டியவிட்டுப் புடியத் துண்டாக் கழட்டிட்டு, பழைய ஒட்டை இருந்த பாகத்த வெட்டுக்கட்டையில வச்சு வெட்டி எறிஞ்சிட்டுப் புது ஒட்டை போட்டுக்கிட்டிருக்காரு புடியில.

அரைகிலோ அரிசிய முறத்துல கொட்டி ஒரு புடை புடைச்சுட்டுப் பத்துப் பத்து அரிசியா முன்முறத்துக்குத் தள்ளி அரிசியில கல்லுப் பெறக்கிக்கிட்டிருக்கா சிட்டம்மா. வரவர கண்ணு சிறுசாப் போச்சா கல்லு சிறுசாப் போச்சான்னு தெரியலையேன்னு அரிசிகூட அவளாப் பேசிக்கிட்டிருக்கா.

திடுதிப்புன்னு ஒரு வெள்ளக்காரப் புள்ளையும் ஒரு வெளிநாட்டுப் பயலும் வீட்டுக்குள்ள வரவும் கிறுக்குப் புடிச்சமாதிரி நிக்கிறாக கெழவன் கெழவி ரெண்டுபேரும்.

"இவர்தான் என் தந்தை; அவர் என் தாய்."

ரெண்டுபேருக்கும் ஒரு ஜப்பான் வணக்கம் போட்டான் இஷி. அவன் பண்ணுனதுக்குத் திருப்பி என்ன பண்ணனும்னு தெரியாம முழிக்குதுக ரெண்டும்.

'ஹாய்'னு சொல்லி எமிலி கருத்தமாயிக்குக் கை கொடுக்கவும் அவரு மம்பட்டிப் புடியவிட்டுட்டு மளார்னு எந்திரிச்சுட்டாரு. சிட்டம்மாவுக்குக் கை கொடுக்கப் போகவும் அவ முறத்தத் திண்ணையில போட்டு அரிசியச் சிந்த விட்டுட்டு, ரெண்டு கையையும் துடைக்கிறா துடைச்சீலையில அழுத்தி அழுத்தி.

"வரவேற்கிறோம்; வரலாம் உள்ளே"

கால் செருப்பைக் கழத்தாம விசுக்குன்னு எட்டுவச்சு உள்ள போனா எமிலி.

பூட்சு, உறை ரெண்டையும் ஒரு ஓரமாக் கழத்தி ஒதுங்க வச்சிட்டு உள்ள போறான் இஷிமுரா. அவுக ஊருல விருந்தாடி போறவன் வீட்டுக்குள்ள செருப்பு போடக் கூடாது. ஆனா விருந்தாளுக்குன்னு உண்டான செருப்ப வீட்டுக்காரன் வச்சிருப்பான். அவுக வீட்டுக்குள்ள அதத்தான் போட்டு நடக்கணும். வீட்டுக்குள்ள போட்டு நடக்க செருப்புத் தருவாகளோன்னு வெறிச்சு வெறிச்சுப் பாக்கிறான் இஷி. 'வீட்டுக்காரனுக்கே காலில் செருப்பைக் காணோம்; விருந்தாளுக்கு எங்கே போவது?' புரிஞ்சுக்கிட்டான்.

"இதுதான் இந்தியாவில் ஒரு சராசரி விவசாயி வீடு" என்றான் சின்னப்பாண்டி.

கயிறு தொங்கிப்போன கட்டில் சட்டத்துல ஒக்காந்தாக எமிலியும் இஷிமுராவும்.

ஒரே ஒரு மர நாற்காலி கெடந்துச்சு. ஒரு கை இல்ல அதுக்கு; அடுத்த கை ஆடிக்கிட்டிருக்கு. அவுக வீட்டுல நாற்காலியும் ஒரு மாடு மாதிரிதான். கால் இருந்தாப் போதும்; கை தேவையில்ல மாட்டுக்கும் நாற்காலிக்கும்.

"ரெண்டு பேருக்கும் மோரு குடு ஆத்தா. பச்சமொளகா போடாத. காரம் தாங்கமாட்டாங்க"


"நீ ஒரு வெவரம் கெட்ட பயப்பா. வெள்ளைக்காரச்சி வாரான்னு சொல்லியிருந்தா வீடு வாசலாவது பெருக்கி வச்சிருப்பேன்.

இப்பப் பாரு... மயிலக் கொண்டாந்து மாட்டுத் தொழுவுல அடைச்ச மாதிரி"

முனகிக்கிட்டே போறா சிட்டம்மா மோர் கொண்டுவர.

தட்டுமுட்டுச்சாமான்- குலுக்கை- அதுமேல அடுக்குப்பானை- கிழங்குச் சாக்கு- அருவாமணை- புருசன் பொண்டாட்டி மாதிரியே அடியும் மூடியும் சேராத ஒரு தகரப் பெட்டி- காத்தைக் கம்மியாக் கொடுத்துச் சத்தம் பெரிசாக் கொடுக்கிற ஒரு காத்தாடி- வெளிச்சத்துக்கு இல்லேன்னாலும் கரண்ட்டு வந்துச்சா இல்லையான்னு காமிச்சுக் கொடுக்க ஒரு பல்பு.

கண்ணை ஒரே ஒரு சுத்துச் சுத்தி அத்தனையும் அளந்துட்டாக எமிலியும் இஷியும். (தொடரும்)



பாடம்

வேர்களை அறுத்தோடும்
நதியின் மீதும்
கலகலவென்று பூச்சொரியும்
கரையோரத்துக் கிளைகள்...
அறுத்ததற்குக் கோபமில்லையாம்
நனைத்ததற்கு நன்றியாம்

மரம் சொன்னது:
"இன்னா செய்தார்க்கும்
இனியவை செய்"
முகவரி இல்லாமல்
பூமிக்கு வருகிறது
எங்கே சிப்பி விழித்திருக்கிறதோ
அங்கே விழுந்து முத்தாகிறது

மழைத்துளி சொன்னது:
"முத்து
எப்போதும்
விழித்திரு மனிதா விழித்திரு"

-வைரமுத்து-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குற்றவியல் பிரேரணை

# உயர்நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான குற்றவியல் பிரேரணை குறித்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பிற்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளின் அடிப்படையில் குற்றவியல் பிரேரணை தொடர்பில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு விசாரணை நடத்தியது.

எனினும் நாடாளுமன்ற நிலையியற் கட்டளையின் அடிப்படையில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு விசாரணை நடத்த முடியாது என உச்சநீதிமன்றம் ரீட் விசாரணையொன்றை பிறப்பித்திருந்தது. இந்த ஆணையை இரத்துச் செய்யுமாறு கோரி தற்போது மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த ரீட் ஆணை இரத்துச் செய்யப்படாவிட்டால் எதிர்காலத்தில் நீதிமன்றங்களினால் நாடாளுமன்றத்தின் மீதும் நிலையியற் கட்டளைகளின் மீதும் உத்தரவுகள் பிறப்பிக்க சந்தர்ப்பம் ஏற்படும் என மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குற்றவியல் பிரேரணை குறித்த விசாரணைகள் 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பிற்கு அமைவாக மேற்கொள்ளப்படுகின்றது. இது நாடாளுமன்ற விவகாரப் பணிகளாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கம்பஹா, ரத்தோட்ட பொகுவிட்ட என்னும் இடத்தைச் சேர்ந்த எஸ்.கே.ஹேவகே இவ்வாறு மேன்முறையீட்டு மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

இதேவேளை, புதிய பெற்றோலிய வள அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பாவை வரவேற்பதற்காக பெற்றோலிய வளக் கூட்டுத்தாபனம் 100 இலட்ச ரூபாவினை செலவிட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா நேற்றையதினம் முதல்தடவையாக கொலன்னாவ எரிபொருள் நிலையத்திற்கு விஜயம் செய்துள்ளார்.

இதனைமுன்னிட்டு குறித்த கட்டடத் தொகுதிக்கு 42 இலட்ச ரூபா செலவில் நிறப்பூச்சு பூசப்பட்டுள்ளது. இந்த நிறப்பூச்சு பூசும் பணியில் ஈடுபட்ட பெற்றோலிய வள திணைக்கள ஊழியர்களுக்கு மேலதிகநேர வேலைக் கொடுப்பனவாக 35 இலட்ச ரூபா செலவிடப்பட்டுள்ளது.

3 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான 35 பூச்சாடிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. வரவேற்பு விழா ஏற்பாடுகளை மேற்கொள்ளும் ஏனைய ஊழியர்களுக்கும் மேலதிக நேர வேலைக்கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

## சிறிய ரக வாகன கணக்கெடுப்பு

(கொழும்பு)

கொழும்பு நகரினுள் நுழையும் அனைத்து சிறியரக வாகனங்களும் தற்போது கணக்கெடுப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன.

இவ்வாகனங்களை கணக்கெடுக்கும் நடவடிக்கை நேற்று நண்பகல் 12 மணிவரை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு நகரில் வாகனப் போக்குவரத்து நெரிசலை குறைக்குமொரு நடவடிக்கையாகவே இக்கணக்கெடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இந்த நடவடிக்கை காரணமாக பல பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் உண்டாகியிருப்பதாக பொலிஸார் கூறினர். (அ-2)

# 4 இலங்கையர்கள் றியாத்தில் கைது

சவுதி அரேபியாவின் றியாத் நகரில் போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட நான்கு இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

றியாத் நகரின் தீரா பொலிஸார் குறித்த இலங்கையர்களை கைது செய்துள்ளனர். ஆஷ் என்னும் தடை செய்யப்பட்ட போதைப் பொருட்களை வைத்திருந்ததாக இலங்கையர்களுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் தொழில் செய்யும் இடங்களிலிருந்து தப்பிச் சென்று, போதைப் பொருள் வர்த்தகம் மற்றும் விநியோகத்தில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குறித்த நபர்களிடமிருந்து ஆயிரத்து 500 சவுதி றியால் பெறுமதியான போதைப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

இவர்கள் அநுராதபுரத்தைச் சேர்ந்தவர் எனவும் அவருக்கு மூன்று முஸ்லிம்கள் ஒத்துழைப்பு வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபர்கள் பாலியல் தொழில் மற்றும் சட்டவிரோத சாராய வர்த்தகத்திலும் ஈடுபட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (எ-1)

## கனடா செல்ல முயன்ற எண்மர் கைது

கடல் வழியாக அவுஸ்திரேலியா மற்றும் கனடா நோக்கி பயணிக்கத் தயாராகவிருந்த எண்மர் சிலாபம் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, கரவெட்டி, உடுப்பிட்டி, கதிரவெளி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

கைது செய்யப்பட்ட எண்மரும் 19 தொடக்கம் 42 வயதிற்கு இடைப்பட்ட ஆண்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் நேற்றைய தினம் சிலாபம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர். (அ-2)

# இனப்பிரச்சினையை தக்கவைப்பதே த.தே.கூட்டமைப்பின் நோக்கம்

## அமைச்சர் விதாரண குற்றச்சாட்டு

(கொழும்பு)

எதிர்வரும் ஜெனீவா மனித உரிமைகள் அமர்வின் போது இலங்கைக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு கோரியிருப்பது அதன் அரசியல் காய் நகர்த்தலாகும் என்று இலங்கை அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

அமைச்சர் திஸ்ஸ விதாரண இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். இந்த நடவடிக்கையை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு பல வருடங்களாக மேற்கொண்டு வருகின்றது. சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்களின் உதவியுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தப் பணியை மேற்கொண்டு வருவதாகவும் திஸ்ஸ விதாரண குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பை பொறுத்தவரை அந்தக் கட்சி எப்போதுமே இலங்கையின் பிரச்சினைகள் தீர வேண்டும் என்று எதிர்பார்க்கும் கட்சியல்ல. இலங்கையில் பிரச்சினைகளை தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்று நினைக்கும் கட்சியாகும் என்று விதாரண சுட்டிக்காட்டினார். (அ-2)

# எதிர்க்கட்சி கூட்டணி குறித்து நாமும் முடிபெடுப்போம்!

## சம்பந்தன் அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சிகள் கூட்டணி உடன்படிக்கையில் கையெழுத்திடுவது பற்றி முடிபு எடுக்க தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் செயற்குழு விரைவில் கூடி தீர்மானம் எடுக்கும் என அக்கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் செயற்குழு விரைவில் கூடி பத்து எதிர்க்கட்சிகள் சேர்ந்து அமைக்கும் கூட்டணியின் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையொப்பம் இடுவது பற்றி ஆராய்ந்து ஒரு முடிபு எடுக்கும்.

அதன் பின்னரே எதிர்க்கட்சிகளின் புரிந்துணர்வு உடன்படிக்கையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கையெழுத்திடும் என்றும் அவர் குறிப்பிட்டார். எதிர்க்கட்சிகள் சேர்ந்து கூட்டணி ஒன்றை அமைப்பது ஒரு நல்ல ஆரோக்கியமான விடயம். எதற்கும் கூட்டமைப்பின் செயற்குழு இவ்விடயத்தை ஆராய்ந்து தான் முடிவு எடுக்க வேண்டும் என்றார். (அ-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## பேய்ப்புடோல்

**Botanical Name-**
***Melothria heterophylla***
**Family-Cucurbitaceae**
**Sinh- Kawudu-kekiri**

பல்லாண்டு காலம் வாழக்கூடிய ஏறு கொடியாகும். நீண்ட தண்டுகளைக் கொண்டது. இதனுடைய தந்திக் கம்பிகள் நீண்டவை. இளம் செடி உரோம அமைப்புக் கொண்டது. இலைகள் தனியிலை, எதிரிலை அடுக்கம் கொண்டவை. 7.5-10 செ.மீ. நீளமானது. பிரகாசமான, பச்சை நிறமான இலைகள். பூக்கள் ஒழுங்கானவை, வெள்ளை நிறமானது. ஒருபாலானவை. 3.7 செ.மீ. நீளமான காய்கள். மளமளப்பானது, இலைகள் கோண வடிவமானவை. வெள்ளை நிறமானது. ஆனி தொடக்கம் ஆடி மாதம் வரை பூக்களைக் காணலாம்.

விதைகள் மூலம் இனவிருத்தி செய்யலாம். யாழ்.மாவட்டத்தில் பருத்தித்துறை பகுதியில் இதன் பரம்பல் காணப்பட்டது. ஆனால், தற்போது இவ்வினம் மிகவும் அருகி வருகிறது. ஆனாலும் பூநகரி, கிளிநொச்சி மாவட்ட



கிராஞ்சி பிரதேசத்தில் இதன் பரம்பல் அதிகம்.

### மருத்துவப் பயன்கள்

சித்த மருத்துவத்தில் காய்ச்சல் (சுரத்திற்கு) நோய்க்கு பயன்படும் முக்கிய மூலிகைகளுள் முக்கியமானது பேய்ப்புடோல் ஆகும்.

இதனைவிட மிகவும் கைப்புச் சுவையானது. அத்துடன் இலகுத் தன்மையும் கொண்டது. இதயத்திற்கு நன்மை தரும். இதனால் விந்துப் பெருக்கமும் காணப்படும். அத்துடன் சமிபாட்டுக்கு தேவையான ஐடராக்கினியையும் வளர்க்கும்.

### மருத்துவப் பயன்கள்

☆காய்ச்சலுக்கு நிழலில் உலர்த்திய பேய்ப்புடோலை சிறுசிறு துண்டுகளாக நறுக்கி ஒரு பங்கிற்கு 4 பங்கு நீர் விட்டு 1/4 ஆக சுண்டக்காய்ச்சி 30-60 மில்லி அளவு காலை, மாலை அருந்தவும்.

☆ கொத்தமல்லி, பேய்ப்புடோல், சீரகம் ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் 5 கிராம் அளவு எடுத்து 200 மில்லி நீர் விட்டு 1/4 ஆக காய்ச்சி 30 மில்லி காலை, மாலை அருந்த தாகம், பசியின்மை, வயிற்றுப் பொருமல், காய்ச்சல் குணமாகும்.

☆ பேய்ப்புடோல், இலாமிச்சம்வேர், மிளகு, பற்படாகம், வெட்டி வேர் ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் 5 கிராம் எடுத்து அருவல் நொருவலாக்கி இடித்து 300 மில்லி நீர் விட்டு 150 மில்லியாக சுண்டக்காய்ச்சி வடித்து 50 மில்லி குடிநீரை காலை, மாலை குடிக்க விடக் காய்ச்சலுக்கு (வைரஸ் தொற்றுக்களால் ஏற்படுவது) கொடுக்கலாம்.

☆ செம்பருத்தம் பூக்களையும் பேய்ப்புடோலையும் சம அளவு எடுத்து நிழலில் உலர்த்தி பொடித்து அரித்து 500 மில்லி கிராம் அளவு ஒரு டம்ளர் காய்ச்சிய பசுப்பாலில் கொடுக்க தாது பலப்பட்டு உடல் பலம் பெறுவதோடு விந்து வெளியாதலும் குறையும்.

☆ பேய்ப்புடோல் சேர்த்துக் காய்ச்சிய கஞ்சியை காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கொடுக்கலாம்.

இதற்கு சிவத்தப் பச்சரிசி 100 கிராம் எடுத்து நீரில் வேக விட்டு சிறிதாக நறுக்கி பேய்ப்புடோல் காயையும் இலையையும் சேர்த்து தேவையானளவு உப்பும் சிறிதளவு கப்பி தேங்காய்ப்பாலும் சேர்த்து கஞ்சியாக காய்ச்சி அருந்தக் கொடுக்கலாம். இதனால் காய்ச்சலுக்கு இலகு ஆகாரமாக அமைவதோடு மட்டுமன்றி பசியையும் தூண்டக் கூடியது. காய்ச்சலினால் நாக்கில் ஏற்படும் சுவையின்மையையும் நீக்கும்.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன முரண்பாடுகள் தற்போது மத முரண்பாடுகளாக மாற்றம்

## ஐ.ம.முன்னணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டில் நிலவி வந்த இன முரண்பாடுகள் தற்போது மத முரண்பாடுகளாக மாற்றமடைந்துள்ளதாக ஜனநாயக மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

அதிர்ஷ்டவசமாகவோ அல்லது துரதிர்ஷ்டவசமாகவோ நாட்டில் நிலவி வந்த இனமோதல்கள், மத மோதல்களாக மாற்றமடைந்துள்ளன. ரணில் விக்ரமசிங்க ஓர் சிரேஷ்ட அரசியல்வாதி. இந்த நாடாளுமன்றுடன் உண்மையில் நட்புறவுடன் செயற்படுகின்றார்.

நாடாளுமன்றின் அவைத் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா முஸ்லிம்கள் மீதான தாக்குதல்களை பொய் என்கிறார். தம்புள்ள, தெஹிவளை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இடம்பெற்ற சம்பவங்களை அமைச்சர் நிராகரிக்கின்றார்.

இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் நாட்டில் மத முரண்பாடுகள் உருவாகக் கூடிய சாத்தியம் எற்பட்டுள்ளது. இதேவேளை, மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு முழு அளவில் ஒத்துழைப்பு வழங்கப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

2009 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அமைப்பினால் மனித உரிமைப் பாதுகாப்பு தொடர்பில் முன்வைக்கப்பட்ட யோசனைத் திட்டங்களை அமுல்படுத்த வேண்டும். மனித உரிமைகளை மேம்படுத்த எதிர்க்கட்சிகள் ஆதரவளிக்கும்.

கல்வி மற்றும் சுகாதாரத்துறைக்கு ஒதுக்கப்படும் நிதியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனால் இலவசக் கல்வி மற்றும் சுகாதார சேவைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ராஜபக்ஷ அரசாங்கம் வெளி நாடுகளில் கடன் பெற்றுக் கொண்டு எதிர்கால தலைமுறையினரை கடனாளியாக்கியுள்ளது. நாட்டை தற்போதைய அடைந்துள்ள நிலையிலிருந்து மீட்பதற்கு சகல தரப்பினரின் ஒத்துழைப்பும் அவசியம் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# இந்தியாவின் இரு சபை அமர்வுகளில் இலங்கை பிரச்சினை எதிரொலிக்கும்

(கொழும்பு)

இந்தியாவின் லோக்சபை, ராஜ்யசபை அமர்வுகள் ஆரம்பமாகவுள்ளது. குறித்த இரண்டு சபைகளிலும் இலங்கையின் பிரச்சினையை முன்வைக்க தமிழகத்தின் அ.தி.மு. கவும் தி.மு.கவும் தயாராகி வருவதாக தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஜெனீவா மனித உரிமைகள் அமர்வில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்படவுள்ள அமெரிக்காவின் யோசனைக்கு இந்தியா ஆதரவளிக்க வேண்டும் என்று வலியுறுத்தி இந்த இரண்டு கட்சிகளும் கீழ்,மேல் சபைகளில் தமது கோரிக்கைகளை முன்வைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் தி.மு.க. பிரதிநிதிகள் எம்.கே.ஸ்டாலின் தலைமையில் இந்தியாவில் உள்ள வெளி நாட்டு தூதரகங்களுக்கு சென்று அமெரிக்க யோசனைக்கு ஆதரவு வழங்குமாறு கோரி வருகின்றனர்.

அவர்கள் அண்மையில் இத்தாலி, மலேசியா போன்ற தூதரகங்களுக்கு விஜயம் செய்து தமது கோரிக்கையை முன்வைத்தனர். அத்துடன் அவர்கள் அமெரிக்க மற்றும் ரஷ்ய இராஜதந்திரிகளையும் சந்தித்தனர். (அ-2)

# இலங்கைத் தூதரகத்திற்கு எதிராக இத்தாலியில் போராட்டம்

இத்தாலியில் அமைந்துள்ள உரோமாபுரியில் இயங்கும் இல ங்கை தூதுவராலயத்தின் சேவை தொடர்பில் திருப்தியற்ற நிலையில் காணப்படுவதால் அதற்கு எதிராக போராட்டம் ஒன்று எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாலியில் உள்ள இலங்கையர் ஒன்றியம் ஆர்ப்பாட்டத்தை நடத்தவுள்ளதாக உரோமாபுரியிலுள்ள தர்மஷோக விகாரையின் தலைவர் தம்பதெனிய தம்மாராம தேரர் தெரிவித்துள்ளார்.

தூதராலயத்தில் மூழ்கிப் போனமக்கள் சேவையை கருத்திற்கொண்டு காரியாலயத்துடன் உள்ள உறவுகளைநிறுத்திக்கொள்வதற்கு தாம்தயாராவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஞாயிற்றுக்கிழமைகளில் இலங்கையர்களுக்கு உரோம் தூதரகத்தில் கிடைத்த விசேட சேவை தற்போது கிடைக்கப்பெறுவதில்லை என்று இலங்கையர் ஒன்றியத்தின் துணை இணைப்பாளர் நிஸாந்த கருணாரத்ன தெரிவித்தார்.

இந்த சேவைகள் நிறுத்தப்பட்டதன் காரணமாக சைபிரஸ், கிறீஸ், மோல்டோனா போன்ற நாடுகளில் உள்ள இலங்கையர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் செயற்பாட்டாளர்களின் நடவடிக்கைகள் தற்போது அதிகரித்துள்ளதன் காரணமாக அவற்றை கட்டுப்படுத்துவதற்கு ரோம் தூதரகத்திலிருந்து எந்த வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்படுவதில்லை என்று போராட்டக்காரர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (அ-2)

# கிளிநொச்சியை பார்க்கின்றபோது சிங்கப்பூரை பார்ப்பது போல் உள்ளது

## புகழ்கிறார் விளையாட்டுத்துறை அமைச்சர்

கிளிநொச்சி,முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள இளைஞர், யுவதிகளுக்கு பல துறைகளிலும் நல்ல திறமைகள் உண்டு. அந்த திறமைகளை தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் வெளிக்கொணர வேண்டும் என விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டுத்துறை சங்கம் அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், கடந்தகாலயுத்தம் இவர்களின் திறமைகளை வெளியில் கொண்டு செல்ல தடையாக அமைந்து விட்டது. ஆனால், தற்போது இந்த நிலைமை மாற்றமடைந்துள்ளது. யுத்தம் முடிவுக்கு வந்து நான்கு ஆண்டுகள் நெருங்கிக் கொண்டிருக்கின்றன.

யுத்தத்திற்கு பின்னரான இந்தக் காலப் பகுதியில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பல அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

கிளிநொச்சியை பார்க்கின்ற போது சிங்கப்பூரை பார்ப்பதைப் போன்ற உணர்வு ஏற்பட்டுள்ளது. அந்த அளவுக்கு மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. எனவே. இந்த வாய்ப்புக்களைப் பயன்படுத்தி இங்குள்ள இளைஞர், யுவதிகள் தங்களுடைய திறமைகளை விளையாட்டுத்துறையில் வெளிப்படுத்தி தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் சாதனைகள் படைக்க வேண்டும். அதற்காக விளையாட்டுத்துறை அமைச்சு எல்லா ஏற்பாடுகளையும் செய்து தர தயாராக உள்ளது.

சார்க் விளையாட்டுப் போட்டிக்கு துப்பாக்கி சுடும் போட்டிக்கு செல்ல இருக்கும் இரண்டு வீரர்கள் முன்னாள் விடுதலைப்புலிகளின் போராளிகள். அவர்கள் இம்முறை நிச்சயம் பதக்கம் வெல்வார்கள் என்ற நம்பிக்கையுள்ளது என்றார். (அ-2)




★1258 - பக்தாத் மங்கோலியரிடம் வீழ்ந்தது.

★1668 - ஸ்பெயின் போர்த்துக்கலை தனி நாடாக அங்கீகரித்தது.

★1755 - ஜாவாவின் மடாரம் பேரரசு "யோக்ய கர்த்தா சுல்தானகம்" மற்றும் "சுரகர்த்தா சுல்தானகம்" என இரண்டாகப் பிரிக்கப்பட்டது.

★1880 - எடிசன் விளைவை தோமஸ் எடிசன் அவதானித்தார்.

★1914 - பொன்னம்பலம் அருணாசலத்திற்கு சேர் பட்டம் பக்கிங்ஹாம் அரண்மனையில் வழங்கப்பட்டது.

★1934 - சோவியத் நீராவிக்கப்பல் செலியூஷ்கின் ஆட்டிக் பெருங்கடலில் மூழ்கியது.

★1945 - இரண்டாம் உலகப் போர்: சோவியத் படைகள் ஹங்கேரியின் புடாபெஸ்ட் நகரை ஹிட்லரின் நாசிப் படைகளிடம் இருந்து மீட்டன.

★1960 - பிரான்ஸ் தனது முதலாவது அணுகுண்டை சோதித்தது.

★1971 - வியட்நாம் போர்: ஐக்கிய அமெரிக்காவின் உதவியுடன் தெற்கு வியட்நாம் லாவோஸைத் தாக்கியது.

★1974 - நோபல் பரிசு பெற்ற அலெக்சாண்டர் சொல்ஷெனிட்சின் சோவியத் ஒன்றியத்தில் இருந்து நாடு கடத்தப்பட்டார்.

★1975 - நியூயோர்க் நகரில் உலக வர்த்தக மையத்தில் தீ பரவியது.

★1990 - இரண்டு ஜேர்மனிகளும் இணைவது குறித்த இரண்டு கட்டத் திட்டம் அறிவிக்கப்பட்டது.

★1996 - நேபாள மக்கள் புரட்சி மாவோயிசவாத போராளிகளால் ஆரம்பிக்கப்பட்டது.

★2001- எல் சல்வடோரில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 400 பேர் வரை கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

★1879 -சரோஜினி நாயுடு, இந்திய சுதந்திரப் போராட்ட வீராங்கனை (இ.1949)

★1910 - வில்லியம் ஷாக்லி, நோபல் பரிசு பெற்ற அமெரிக்க இயற்பியலாளர் (இ.1989)

★1920 - அ.மருதகாசி, தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியர் (இ.1989)

### இறப்புகள்

★1950 - செய்குத்தம்பி பாவலர், தமிழறிஞர் (பி.1874)

★2009 - கிருத்திகா, தமிழக எழுத்தாளர்

**சரோஜினி நாயுடு**



இந்தியாவின் ஐதராபாத் மாநிலத்தில் ஒரு வங்காள குடும்பத்தின் மூத்த மகளாக 1979 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதி சரோஜினி நாயுடு பிறந்தார். இவரது தந்தை விஞ்ஞானியாகவும் தத்துவவியலாளராகவும் மற்றும் கல்வியியலாளராகவும் விளங்கிய அகோர்நாத்சடோபத்யாயா; தாய் பரத சுந்தரி. இவரது தாய் ஒரு பெண் கவிஞர் ஆவார்.

சரோஜினி நாயுடு பாரத்திய கோகிலா இந்தியாவின் நைட்டிங்கேல் என்று அழைக்கப்படுபவர். இவர் ஒரு பிரபலமான குழந்தை ஞானி. சுதந்திர போராளி மற்றும் கவிஞரும் ஆவார்.

இவரது பிறந்த நாள் இந்தியாவில் மகளிர் தினமாக கொண்டாடப்படுகிறது. இவர் உருது, தெலுங்கு, ஆங்கிலம், பெர்சியம் மற்றும் பெங்காலி ஆகிய மொழிகளைப் பேச கற்றுக் கொண்டார்.

1905 ஆம் ஆண்டில் வங்காளம் பிரிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் இந்திய சுதந்திர போராட்டத்தில் பங்கேற்றார். 1903 முதல் 1917 ஆம் ஆண்டு வரையான கால கட்டத்தில் சரோஜினி, கோபால கிருஷ்ண கோகலே. ரவீந்திர நாத் தாகூர். முஹம்மது அலி ஜின்னா. அன்னி பெசண்ட் சி.பி.ராமஸ்வாமி ஐய்யர். மோஹன்தாஸ் காந்தி மற்றும் ஜவஹர்லால் நேரு ஆகியோரின் அறிமுகத்தைப் பெற்றார்.

1915 முதல் 1918 ஆம் ஆண்டுகளுக்கிடையில் அவர் இந்தியா முழுவதும் இளைய சமுதாயத்தினரின் நல்வாழ்வு, பணியாளர் நலன், பெண் கொடுமை மற்றும் தேசியப் பற்று குறித்து பல்வேறு சொற்பொழிவுகளை மேற்கொண்டார்.

1925 ஆம் ஆண்டில் அவர் காங்கிரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண் இவரே ஆவார்.

1947 ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரம் பெற்றதற்குப் பின்னர் இவர் ஐக்கிய மாகாணத்தின் (தற்போது உத்தரப் பிரதேசம் என்று அழைக் கப்படுகின்றது) ஆளுநராக பதவியேற்றார். இதன் வழியாக இந்தியாவின் முதல் பெண் ஆளுநரானார். இவர் 1949 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2 ஆம் திகதி மாரடைப்பால் மரணத்தை தழுவிக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கே இருள்...! விலகுமா...? பாதை புலப்படுமா?

**நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் வரையில்தான் இலங்கையில் இருவேறு ஆட்சிப் பிரதேசங்கள் காணப்பட்டன. அரச அல்லது இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதி, விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதி என இவை இருவகைப்பட்டிருந்தன. போர் முடிவுக்கு வந்து நான்கு ஆண்டுகளாகின்ற நிலையிலும், இந்த இருவகைப்படுத்தப்படும் நிலை இன்னமும் மாறவில்லை. இதனால்தான், வழக்கமான சிவில் நிர்வாகம் நடைபெறும் பகுதி தனியாகவும் இராணுவ ஆதிக்கம் நிறைந்த வடக்கு- கிழக்குப் பகுதி தனியாகவும் பார்க்கப்படும் சூழல் காணப்படுகிறது. வடக்கும் கிழக்கும் தனியானதொரு இராணுவக் கவனிப்புக்குள்ளாக்கப்பட்டுள்ள பிரதேசமாகவே அடையாளப்படுத்தப்படுகின்றன.**

விடுதலைப்புலிகளுடன் வெளிநாட்டு அரசாங்கங்கள் பேசிய போதெல்லாம் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் ஒரு விமர்சனம் முன்வைக்கப்படுவது வழக்கமாக இருந்தது. விடுதலைப்புலிகளுக்கு அரசியல் அந்தஸ்தை அளிக்க வெளிநாடுகள் முனைகின்றன என்பதே அந்தக் குற்றச்சாட்டு. விடுதலைப்புலிகளுக்கு எந்தவகையிலும் அங்கீகாரம் கிடைத்து விடக்கூடாது என்பதால் தான் அரசாங்கம் அவ்வாறு கூறிவந்தது. ஆனாலும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் பெருமளவு பிரதேசமும் இலட்சக்கணக்கான மக்களும் இருந்த நிலையில் -அவர்கள் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் ஒரு தனியான நிர்வாகத்தையே நடத்தி வந்த நிலையில், அரசாங்கத்தின் குற்றச்சாட்டுகளையும் மீறி வெளிநாடுகள் அந்தத் தொடர்பைப் பேணுவதில் ஆர்வம் காட்டின. பல நாடுகள் விடுதலைப்புலிகளை தமது நாட்டுக்கு அழைக்கும் அளவுக்கு அந்தத் தொடர்புகள் பின்னர் இறுக்கமாயின. ஆனாலும் போரில் விடுதலைப்புலிகள் தமது கட்டுப்பாட்டில் இருந்த நிலங்களை இழந்து, நிர்வாகத்தை இழந்து தோல்வியைச் சந்திக்கின்ற ஒரு கட்டத்தில், அத்தகைய நாடுகள் எல்லாம் விடுதலைப் புலிகளை கைவிட்டு விட்டதும் வரலாறு. அப்போது விடுதலைப் புலிகள் இருந்த நிலையில், இப்போது இலங்கை இராணுவம் இருக்கிறது. நாடுமுழுவதும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்தாலும், வடக்கும் கிழக்கும்தான இராணுவத்தின் ஆட்சியில் இருப்பது போன்ற தோற்றம் காணப்படுகிறது. மிகையான படைக்குவிப்பு, எல்லாவுற்றிலும் படைத்தலையீடுகள் உள்ளிட்ட பல்வேறு வெளிப்புறத் தோற்றக் காரணிகள், வடக்கு, கிழக்கை ஒரு இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமாகவே இன்னமும் வரையறுக்க வைக்கின்றன.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் வரையில்தான் இலங்கையில் இருவேறு ஆட்சிப் பிரதேசங்கள் காணப்பட்டன. அரச அல்லது இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதி, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதி என இவை இருவகைப்பட்டிருந்தன. போர் முடிவுக்கு வந்து நான்கு ஆண்டுகளாகின்ற நிலையிலும், இந்த இருவகைப்படுத்தப்படும் நிலை இன்னமும் மாறவில்லை. இதனால் தான், வழக்கமான சிவில் நிர்வாகம் நடைபெறும் பகுதி தனியாகவும் இராணுவ ஆதிக்கம் நிறைந்த வடக்கு- கிழக்குப் பகுதி தனியாகவும் பார்க்கப்படும் சூழல் காணப்படுகிறது. என்னதான் அரசாங்கம் அனைவருக்கும் சம உரிமை என்று கூறினாலும், வடக்கும் கிழக்கும் தனியானதொரு இராணுவக் கவனிப்புக் குள்ளாக்கப்பட்டுள்ள பிரதேசமாகவே அடையாளப்படுத்தப்படுகின்றன. அதிகாரபூர்வமாக இந்தப் பிரிப்பு இல்லாவிட்டாலும், மறைமுகமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நியதியாகவே இது காணப்படுகிறது. தெரிந்தோ தெரியாமலோ, வடக்கு, கிழக்கின் நிர்வாகத்தில் இராணுவத் தலையீடுகளுக்கு அரசாங்கம் மட்டுமன்றி வெளிநாடுகள்கூடத் துணைபோகிறன



என்பதுதான் அதில் ஆச்சரியத்துக்குரிய விடயம்.

ஒரு பக்கத்தில், வடக்கில் படைக் குறைப்புச் செய்யப்படவேண்டும் என்றும் நடமுறை வாழ்வில் இருந்து படையினர் தலையீடுகள் அகற்றப் படவேண்டும் என்றும், வெளிப் படையாக வலியுறுத்தும் நாடுகளே, வடக்கு-கிழக்கில் படைத் தலையீடுகளுக்கு அங்கீகாரத்தையும், ஆதரவையும் கொடுக்கன்றன. இந்த ஆரவு வெளிப்படையானதாக இல்லாவிட்டாலும், மறைமுகமானது என்றும் சொல்லமுடியாது. அண்மையில், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் மூன்று பிரதி உதவிச் செயலர்கள் இலங்கையின் நிலைமைகளை அவதானிக்க வந்திருந்தனர். இவர்கள் கொழும்பில் வந்திறங்கியதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்தித்துவிட்டு, அடுத்துப் பார்க்கச் சென்றது யாழ்ப்பாணத்தைத் தான். அந்தளவுக்கு யாழ்ப்பாணம் முக்கியத்துவம் வாய்ந்த இராஜதந்திர கேந்திரமாக உள்ளது. விடுதலைப் புலிகளின் காலத்தில் மட்டுமன்றி, இப்போதும்கூட வடக்கின் மீதான, வடக்கு மக்களின் கருத்துமீதான சர்வதேச கவனிப்பு இன்னமும் குறைந்து போகவில்லை. அமெரிக்க குழு மட்டுமன்றி எந்தவொரு நாட்டுப் பிரதிநிதிகளும் இலங்கை வந்தால், தமிழ் மக்களின் அரசியல் நிலைப்பாடுகளை அறிவதற்கு தேடிச் செல்வது வடக்கைத்தான்.

வடக்கு- கிழக்கிற்கு வெளியேதான் பெரும்பாலான தமிழர்கள் வாழ்கின்றனர். இந்த நிலையில் எவ்வாறு வடக்கு -கிழக்கிற்கு மட்டும் தனியான தீர்வை அளிக்க முடியும் என்று அரசாங்கம் சொல்லும் நியாயங்களை மறுத்துவிட்டு, தமிழ் மக்களின் கருத்தை அறிய வெளிநாடுகள் வடக்கைத்தான் நாடுகின்றன. அண்மையில் யாழ்ப்பாணம் வந்த அமெரிக்கப் பிரதிநிதிகளிடம், யாழ்.படைத் தலைமையகத் தளபதி வழக்கம் போலவே ஒன்றை வலியுறுத்தியிருந்தார். வடக்கில் சிவில் நிர்வாகங்களில் படையினர் தலையிடுவதில்லை என்பதே அது. ஆனால், அவரே, படையினர் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளும் திட்டங்கள் பணிகள் குறித்தும் விபரித்திருந்தார்.

வடக்கில் கண்ணிவெடிகளை அகற்றல், வீதி புனரமைப்பு, வீடமைப்புப் பணிகள் போன்ற- போர் சாராத பணிகளில், படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

உண்மையில் கண்ணிவெடி அகற்றல் தவிர்ந்த, வடக்கில் படையினர் மேற்கொள்ளும் பணிகளுக்கும், அவர்களின் தொழில்சார் பொறுப்புகளுக்கும் தொடர்பேயில்லை. ஆனாலும், அதில் படையினர் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். படையினர் இத்தகைய பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதால், வெளிநாட்டுப் பிரதிநிதிகள், அவர்களுடன் தொடர்புகளைப் பேண வேண்டியவர்களாக்கப்பட்டுள்ளனர். அத்துடன், இதனால் வடக்கில் படைக்குவிப்பையும் நியாயப்படுத்த முடிகிறது.

வடக்கில் சிவில் நிர்வாகத்தில் படயினர் தலையிடுவதேயில்லை என்று அரசாங்கமும் படைத்தரப்பும் கூறினாலும், வடக்கில் படைகள் குறைக்கப்பட்டு சிவில் நிர்வாகத்தில் அவர்களின் தலையீடுகள் அகற்றப் படவேண்டும் என்றுவெளிநாடுகள் வலியுறுத்தினாலும் இந்த இரண்டுமே ஒரு புள்ளியில் சந்தித்துக் கொள்கின்றன. அதாவது வடக்கில் நிர்வாகப் பணிகளில் இருந்து இராணுவம் விலக்கப்படவேண்டும் என்று கூறினாலும், அதே இராணுவத்தைத் தேடிச்சென்று சந்திக்கின்றன வெளிநாடுகள். வடக்கிற்குச் செல்லும் எந்தவொரு வெளிநாட்டு பிரதிநிதிகளும் யாழ். படைத் தலைமையகத்துக்குச் செல்லாமல் விடுவதில்லை. கிளிநொச்சியிலும் இப்போது அதேநிலை உருவாகியுள்ளது.

வடக்கில் படைக்குவிப்பை, சிவில் நிர்வாகத்தை- வலியுறுத்தும் நாடுகள் கூட இதற்கு விதிவிலக்காக முடியாது.

காரணம், வடக்கின் நிர்வாக கட்டமைப்புடன் இராணுவம் அந்தளவுக்கு இணைக்கப்பட்டுள்ளது. நாட்டின் வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளுக்குச் செல்லும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் எந்தவொரு கட்டத்திலும், அந்தப் பிரதேச இராணுவத் தளபதிகளையோ முகாம்களையோ தேடிச் செல்வதில்லை. ஆனால், வடக்கில் நிலைமை அப்படியில்லை. இது ஒருவகையில் வெளிநாடுகளின் முரண்பட்ட போக்கு என்று கூட சொல்லலாம்.

வடக்கில் படையினர் தலையீடுகளை குறைக்க வேண்டும் என்ற தமது கொள்கைசார் விடயத்திலேயே, வெளிநாடுகள் சமரசம் செய்துகொள்ள வேண்டிய அளவுக்கு நிலைமைகளை ஏற்படுத்தி வைத்துள்ளது அரசாங்கம். வடக்குடன் இராணுவத்தை இரண்டறக் கலந்து விட்டுள்ள நிலையில், வடக்கின் நிர்வாகத்தில் இராணுவம் தலையிடுவதில்லை என்று கூறுவது அபத்தமான நியாயம் என்பதை வெளிநாடுகள் நன்றாகவே அறியும். ஆனாலும், ஒரு அரசாங்கமாக இல்லாத போதிலும், வடக்கின் மீது கொண்டிருந்த அதிகாரம் விடுதலைப்புலிகளுக்கு அங்கீகாரம் கொடுக்க வெளிநாடுகளை எவ்வாறு நிர்ப்பந்தித்ததோ, அதபோலவே இப்போது வடக்கில் இராணுவத்தையும் அங்கீகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர்கள் இராணுவத்துடன் தொடர்பைப் பேணவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இராஜதந்திர ரீதியாக இதனை எவ்வகையில் நியாயப் படுத்தினாலும், இராணுவமயப் படுத்தலில் இருந்து வடக்கை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தும் நாடுகள், அதற்குத் தொடர்ந்து அங்கீகாரம் அளிப்பது முரண்பட்ட விடயமாகவே தோன்றுகிறது.

சர்வதேசத்தின் அணுகுமுறைகள் குறிப்பாக அமெரிக்காவின் அணுகுமுறை அவதானிப்பாளர்ளைக் குழப்பமுறவைக்கும் என்றே பேசப்படுகிறது.


இருப்பினும் அடுத்தமாதம் நிகழவிருக்கும், மனித உரிமைப் பேரவை மாநாட்டிற்குப் பிறகாவது மேற்கு நாடுகளின் இவ்வணுகுமுறைபற்றி புரிந்துகொள்ள முடிகிறதா பார்ப்போம்...!

-சுபத்ரா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசி மாத இராசி பலன்கள்

# 13.02.2013 - 13.03.2013



## மேடம்

**அச்சுவினி, பரணி,
கார்த்திகை 1 ஆம் பாதம்**

**கொடுக்கல்- வாங்கல் ஒழுங்காகும்!
முன்னேற்றத்திலேயே முழு மூச்சாய் இருக்கும் மேட இராசி நேயர்களே!**

மாசிமாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்திலேயே வக்ர நிவர்த்தியான குருவின் பார்வை 6 மற்றும் 8, 10 ஆகிய இடங்களில் பதிவாகிறது. எனவே, உத்தியோகம் சம்பந்தமான முயற்சி எடுத்தவர்களுக்கு இரண்டு, மூன்று இடங்களில் இருந்து கூட அழைப்புகள் வந்து சேரலாம். எதை உபயோகப்படுத்திக் கொள்வது என்ற சிந்தனை மேலோங்கும். தொழில் செய்வோருக்கு இதுவரை வசூலாகாத பாக்கிகள்கூட வசூலாகி பரவசப்படுத்தும். விலகிச் சென்ற பங்குதாரர்கள்கூட விரும்பி வருவதாக சொல்லி நச்சரித்துக்கொண்டே இருப்பர்.

ஜென்மத்தில் கேது இருப்பதால் எதையும் நீங்கள் தீர்மானமாக முடிவெடுக்க இயலாது. வரும் வாய்ப்புகளை உதறித்தள்ளவும் மனம் இருக்காது. எனவே, சுய ஜாதகத்தில் தெசா புத்தி பலன் பெற்று இருப்பவர்கள் அதன் தன்மை அறிந்து செயற்படுவது நல்லது.

எப்படித்தான் நீங்கள் செயற்பட்டாலும் கூட 7 இல் உள்ள சனி உங்களை பின்தொடர்ந்து கொண்டே இருக்கும். எனவே, அப்போதைக்கு அப்போது ஆன்மீகத்திலும் அன்றாடம் செய்யும் வழிபாடுகளிலும் கவனம் செலுத்த வேண்டிய சூழ்நிலை உருவாகும். சனியின் கடுமையைக் குறைக்கவும் சந்தோஷங்களைத் தக்க வைத்துக் கொள்ளவும் ஒவ்வொரு சனிக்கிழமையும் நீங்கள் சனிபகவான் வழிபாட்டை மேற்கொள்வதோடு விரதத்தையும் கடைப்பிடிப்பது நல்லது.

இராசிநாதன் செவ்வாய் சனியை பார்த்து இம்மாதத்தில் மாபெரும் மாற்றங்களை உங்களுக்கு வழங்கப்போகிறார். 8 இற்கு அதிபதி செவ்வாய் இராசிநாதனாகவும் விளங்குகிறார். அதேசமயம் தொழிலுக்கும் இலாபத்திற்கும் அதிபதியாக சனி விளங்குகிறார். எனவே, இக்காலத்தில் ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடலாம். உடன் பிறப்புகள் வழியே ஏற்பட்ட பஞ்சாயத்துக்கள் முடிவிற்கு வராமல் நீடிக்கலாம். சொத்துப் பிரச்சினைகள் தலை தூக்கும். என்றைக்கோ வாங்கிய சொத்து உங்களுக்கு உரிமையானது அல்ல என்று யாரேனும் வாதிடலாம். எல்லாவற்றுக்கும் பொறுமையை கடைப்பிடிப்பது நல்லது. படபடப்பை குறைத்து பணிவோடு பேசினால்தான் கடகடவென காரியங்கள் நடைபெறும். பணத் தேவைகள் உடனடியாக பூர்த்தியாகும் என்றாலும் மார்ச் 2 ஆம் திகதிக்குப் பின்னர் எதிர்பாராத விரயங்களைச் சந்திக்க நேரிடும்.

**கும்ப சுக்கிரனின் சஞ்சாரம்!**

பெப்ரவரி 22 ஆம் திகதி உங்கள் இராசிக்கு 2,7 இற்கு அதிபதியான சுக்கிரன் இலாப ஸ்தானத்திற்கு வரப்போகிறார். எனவே, தனாதிபதி 11 இற்கு வரும் நேரம் பணப்புழக்கம் அதிகமாகவே இருக்கும். பரிசீலனை செய்யாமல் செய்த ஒப்பந்தங்களில்கூட இலாபம் இருமடங்காக வரலாம். சூரியன், செவ்வாய், புதன், சுக்கிரன் ஆகிய நான்கும் கூடி கும்பத்தில் சஞ்சரிக்கும் சில நாட்களில் திடீர் திடீர் என சில காரியங்கள் முடிவடையும். முன்பு வாங்கிய சொத்துக்களை விற்பதில் ஆர்வம் காட்டுவீர்கள். அதில் இலாபமும் கிடைக்கும்.

**விரய ஸ்தானத்தில் இராசிநாதன் சஞ்சரிக்கும் நேரம்!**

மார்ச் 2 ஆம் திகதி மீன இராசிக்கு செவ்வாய் செல்லப் போகிறார். 8 இற்கு அதிபதி 12 இல் சஞ்சரிக்கும் பொழுது விபரீத இராஜ யோகம் செயற்படும் நேரமாக அமையும். எனவே, சில காரியங்களை நீங்கள் திட்டமிடாது செய்துகூட வெற்றி பெறலாம். சில காரியங்களில் திட்டமிட்டும் நடக்காமல் போகலாம். என்ன இருந்தாலும் செவ்வாய் சனியின் பார்வை இப்பொழுது வருகிறது.

**செவ்வாய், சனி பார்க்கும் காலம்!**

உலகில் செவ்வாய், சனி பார்க்கும காலங்களில் எல்லாம் உள்ளத்தில் நிம்மதி குறையலாம். வல்லவன் யார் என்று மோதிக்கொள்ளும் சூழ்நிலையும் உருவாகலாம். இல்லத்திலும் உள்ளத்திலும் இதுவரை வீற்றிருந்து ஒத்துழைப்பு தந்தவர்கள் இப்பொழுது இடையூறு செய்ய முன்வரலாம். இக்காலத்தில் பரிகாரங்களும் வழிபாடுகளும் உங்களுக்கு அவசியத் தேவை. குறிப்பாக குலதெய்வ வழிபாடுகளை செய்வது நல்லது.

இம்மாதம் செவ்வாய் தோறும் முருகப் பெருமான் வழிபாட்டையும் சனிக்கிழமை தோறும் ஆஞ்சநேயர் வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள். செல்வ நிலை உயரும். செல்லும் இடங்களிலும் செல்வாக்கு மேலோங்கும்.

இம்மாதம் இராசிநாதன் செவ்வாய், சனியைப் பார்ப்பதால் கூடுதல் விழிப்புணர்ச்சியோடு செயற்படுவது நல்லது. குடும்பத்தில் உள்ளவர்களையும் அனுசரித்துச் செல்லுங்கள். விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலம் கணவன்- மனைவிக்குள் உள்ள கருத்து வேறுபாடுகள் அகலும். வீடு மாற்றச் சிந்தனை மேலோங்கும். உடன்பிறப்புகள் உங்கள் கருத்துக்களை கேட்டு நடப்பார்களா என்பது சந்தேகம்தான். பண வரவு திருப்திகரமாக இருந்தாலும்கூட மன அமைதி குறையும் மாதமாகத்தான் அமைகிறது. அங்காரக வழிபாடும் ஆஞ்சநேய வழிபாடும் செய்வதோடு ஜென்ம கேதுவிற்கு சர்ப்ப சாந்தியும் செய்தால் நன்மை கிடைக்கும்.

## ஆலயங்களுக்குச் சென்று வழிபாட்டை மேற்கொண்டால் செல்வ நிலை உயரும்; செல்வாக்கு மேலோங்கும்

# சிவல்புரி சிங்காரம்

**கார்த்திகை 2,3,4, ஆம் பாதங்கள்,
ரோகினி, மிருகசீரிடம்
1,2 ஆம் பாதங்கள்**

**அனுசரித்துச் சென்றால் ஆதாயம்!
தங்களால் எந்தக் காரியத்தையும் வெற்றிகரமாக முடிக்க முடியும் என்ற தன்னம்பிக்கை கொண்ட இடப இராசி நேயர்களே!**

மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்திலேயே வக்ர நிவர்த்தியான குருவால் மாற்றங்களும் திடீர் திருப்பங்களும் வந்து சேரப் போகின்றன. குரு உங்கள் இராசிக்கு 8,11 ஆகிய இடங்களுக்கு அதிபதி. அதுமட்டுமல்ல உங்கள் இராசிநாதன் சுக்கிரனுக்கு பகைக் கிரகமாகவும் விளங்குகிறது. அப்படிப்பட்ட கிரகம் வக்ரம் பெறும்பொழுது மிகுந்த நன்மைகளை வாரி வழங்கும். வலுவாக சஞ்சரிக்கும் பொழுது எதிரிகளின் பலத்தை அதிகரிக்க வைக்கும்.

உங்களை பொறுத்தவரை இந்த மாதம் பணப்புழக்கம் நன்றாக இருந்தாலும் மன அமைதி ஓரளவேயிருக்கும். எனவே, எதையும் ஒருமுறைக்கு இருமுறை செய்யும் சூழ்நிலை உருவாகலாம். 6 இல் உள்ள இராகுவால் அஷ்டலட்சுமி யோகம் செயற்படும் விதத்தில் இருக்கிறது. பணம் வந்த மறுநிமிடமே செலவாகும் என்பதால் முன்கூட்டியே எதைச் செய்ய வேண்டும், எப்படிச் செய்ய வேண்டும், எதை எதையெல்லாம் வாங்க வேண்டும் என்பதை யோசித்து வைத்துக் கொள்ளுங்கள்.

திட்டமிட்டவற்றை திட்டமிட்டபடியே செய்து கொடுக்க செவ்வாயின் ஆதிக்கம் உங்களுக்கு கை கொடுக்கும். எனவே, வீட்டிற்கு தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் அக்கறை காட்டுங்கள். மின்சாதன பொருட்கள், டி.வி, மிக்சி, கிரைண்டர், பிரிட்ஜ் போன்றவற்றை மாற்றம் செய்ய நினைப்பவர்கள் இப்பொழுது மாற்றிக் கொள்ள முன்வரலாம். புதிதாக வாங்க நினைப்பவர்களும் வாங்கி மகிழலாம். பெண் குழந்தைகளின் சுபச் சடங்குகளை எதிர்கொள்ள நேரிடலாம்.

இம்மாதத் தொடக்கத்தில் சனியும் வக்ரம் பெற்று செவ்வாயின் பார்வையில் சஞ்சரிக்கப்போவதால் உடன்பிறப்புகளிடமும் உடன் இருப்பவர்களிடமும் கொஞ்சம் கூடுதல் விழிப்புணர்ச்சி காட்டுவது நல்லது. இக்காலத்தைப் பொற்காலமாக மாற்றிக்கொள்ள, தக்க விதத்தில் சுய ஜாதகத்தை ஆராய்ந்து பரிகாரங்களை மேற்கொள்ளுங்கள். பொதுவாக அங்காரக வழிபாடு ஆனந்தம் வழங்கும்.

**கும்பச் சுக்கிரனின் சஞ்சாரம்!**

பெப்ரவரி 22 ஆம் திகதி கும்ப இராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கிறார். உங்கள் இராசிநாதனாகவும் 6 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்கும் சுக்கிரன் தன, பஞ்சமாதிபதியோடும் சுகாதிபதியோடும் கூடும் இந்த நேரத்தில் பல நல்ல வாய்ப்புகள் இல்லம் வந்து சேரும். உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு எதிர்பார்த்தபடி அமையும். ஊர் மாற்றம் அல்லது வீடு மாற்ற சிந்தனை வெற்றி பெறும். உறவினர்களின் வழியே வரவேண்டிய பாக்கிகள் எதிர்பாராத விதத்தில் வசூலாகி வளர்ச்சி கூடும்.

**மீனச் செவ்வாயின் ஆதிக்கம்!**


மார்ச் 2 ஆம் திகதி விரயாதிபதியாகவும் சப்தமாதிபதியாகவும் விளங்கும் செவ்வாய் இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். எனவே, விரயத்திற்கு ஏற்ற இலாபம் வந்து சேரும். வாழ்க்கைத் துணைக்கு உத்தியோகம் கிடைத்து அதன் மூலமும் வருமானம் வரலாம். வெளிநாட்டிலிருந்து வியக்கும் செய்தி வந்து சேரும். உள்ளம் மகிழும் விதம் வீடு மற்றும் இடங்கள் வாங்கும் வாய்ப்புகளும் கைகூடி வரலாம்.

**செவ்வாய், சனி பார்க்கும் காலம்!**

பெயர்ச்சியான செவ்வாயின் பார்வை 6 இல் சஞ்சரிக்கும் சனியின் மீது பதிவதால் ஆரோக்கிய பாதிப்புகள் ஏற்பட்டு அகலும். எலும்பு, நரம்பு சம்பந்தமாக ஏற்படும் நோய்களை ஆரம்ப காலத்திலேயே அறிந்து மருத்துவ ஆலோசனை பெறுவது நல்லது.

இம்மாதம் துர்க்கை வழிபாடு துயரங்களைப் போக்கும்.

இம்மாதத்தை மூன்று பகுதிகளாக பிரித்துக் கொள்ளலாம். முதல்பகுதி நாட்களில் மன அமைதியும் மகிழ்ச்சி பயணங்களும் உருவாகும். பணவரவும் திருப்தி தரும். பெண் குழந்தைகளின் கல்யாண கனவுகளை நனவாக்குவீர்கள். மாதத்தின் மையப் பகுதியில் வருமானம் திருப்தி தரும். உங்கள் பெயரிலேயே தொழில் தொடங்குவதற்கான அறிகுறிகள் தோன்றும். உடன்பிறப்புகள் உதவிக் கரம் நீட்டுவர். மாதத்தின் கடைசி பகுதியில் எதையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்து செய்வது நல்லது. உடல் ஆரோக்கியத்திலும் அக்கறை தேவை. உடன் இருப்பவர்களையும் உடன்பிறப்புகளையும் அனுசரித்து செல்வதன் மூலமே ஆதாயம் அடைய முடியும். நந்தி வழிபாடு நலம் சேர்க்கும்.



## இடபம்

## இந்நேரம் பல நல்ல வாய்ப்புகள் இல்லம் வந்துசேரும்; உத்தியோக, ஊதிய உயர்வு எதிர்பார்த்தபடி அமையும்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மாவின் ஈடேற்றத்திற்காக ஆண்டவரால் வழங்கப்பட்ட காலம் தவக்காலம்

இறை மானிட உறவை புதுப்பிக்க வருவதே இத்தவக்காலம். இவ்வுறவை புதுப்பித்துக் கொள்ள மனிதனுக்கும் இறைவனுக்குமிடையே உரையாடல் செய்ய நம்மை அழைக்கின்றது இத் தவக்காலம். நமது வாழ்வில் பல்வேறு வழிகளில் நம்மோடு உறவாடிய இறைவன்- இத்தவக்காலத்தில் தன்பாடுகளின் வழியாக நம்மோடு அவர் கொண்டுள்ள அன்பை- உறவை உறுதிப்படுத்த நமக்கு அழைப்புவிடுக்கின்ற காலமே இந்த தவக்காலம்.

இறைவாக்கினர்கள் வழியாக பேசிய இறைவன் நீதித் தலைவர்-அரசர்கள் வழியாக செயற்பட்டு தொடர்ந்தும் மானிட இனத்தின் இடறிய பாதையைச் சமன் செய்து அன்புறவை கட்டியெழுப்ப இறுதியாக அன்னை மரி வழியாக தன் அன்பு மகனை மானிடர் பால் தந்தார். தவக்காலம் நமக்கு உறவை வளர்க்க நமக்கு தரப்படும் உறவின் அற்புதமான காலமாகும்.

இந்தவேளையில் கத்தோலிக்கர்கள் தவக்காலம் என்னும் காலத்திற்குள் இன்று நுழைகின்றனர். திருவழிபாட்டு ஆண்டுச் சக்கரத்தில் தவக்காலம் அல்லது மனமாற்றத்தின் காலமும் ஒன்றாகும்.

தவக்காலம் என்பது எம் ஆன்மாவின் ஏற்றத்திற்காக ஆண்டவரால் வழங்கப்பட்ட அருமையான காலமேயாகும். இறைவிருப்பத்தை வாழ்வில் ஏற்று அதன்படி, வாழ்ந்து கடவுளோடும் மனிதரோடும் ஒப்புரவாவதற்கான காலமே தவக்காலமாகும்.

நாம் அனைவரும் மீண்டும் ஒருமுறை எம் ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தி வலுப்படுத்தி வளப்படுத்த வல்லதேவன் தரும் காலமே



தவக்காலம் என்று உறுதியாகக் கூறலாம்.

தவக்காலத்தின் தொடக்க நாளான இன்றையதினம் திருநீற்று புதன் அல்லது சாம்பல் புதன் என்று கத்தோலிக்கர் அழைப்பர். இன்றைய தினம் திருப்பலிப் பூசையில் பங்கு கொள்பவர்களின் நெற்றியில் சாம்பலால் சிலுவை அடையாளம் இடப்படுகின்றது. நாம் மண்ணுக்குரியவர்கள் மண்ணுக்கே திரும்பவேண்டும் என்பதை நினைவுபடுத்துவதற்கே சிலுவை

## திருநீற்றுப்புதன் இன்று

அடையாளம் சாம்பலால் இடப்படுகின்றது.

மனித வாழ்வின் நிலையற்ற தன்மையை உணர்த்தும் ஓர் அடையாளமாகவும் அதே நேரம் நம்மில் தவம், தாழ்ச்சி உருவாக வேண் டிய ஓர் அழைப்பை திருநீற்றுப் புதனும் அன்று நம் மீது பூசப்படும் சாம்பலும் நமக்குத் தருகின்றன.

கிறிஸ்து உயிர்ப்புப் பெருவிழாவை நோக்கிய இத்தவக்காலப் பயணம் நாற்பது நாட்களை கொண்டது. ஆண்டவரின் நாள் என அழைக்கப்படும் ஞாயிற்றுக்கிழமைகளை தவிர்த்து தவக்காலம் நாற்பது நாட்கள் அனுஷ்டிக்கப்படுகின்றது. இந்நாட்களில் பாவத்திற்காக மனம் வருந்தல், மனமாற்றம் மற்றும் புதுப்பித்தலின் திருப்பயணமாகச் செலவிடப்பட வேண்டும் என நாம் அழைப்புப் பெறுகின்றோம்.

வேதாகமத்தில் நாற்பது என்ற எண் பல்வேறு சிறப்பு அடையாளங்களைக் கொண்டுள்ள ஒன்றாகும். இஸ்ராயேலரின் 40 ஆண்டுப் பாலைவனப் பயணத்தை இது நினைவுபடுத்தி நிற்கின்றது. அப்பாலைவனப் பயணக் காலம், எதிர்பார்ப்பின், சுத்திகரிப்பின் மற்றும் இறைவனுடன் நெருக்கமாக இருந்த காலமாகும். அதுமட்டுமல்ல, சோதனையின் மற்றும் துன்பங்களின் காலமாகவும் இருந்தது. தன் பொதுவாழ்வை ஆரம்பிப்பதற்கு முன்னர் இயேசு பாலைவனத்தில் நாற்பது நாட்களைச் செலவிட்டதையும் இத்தவக்காலம் நினைவுறுத்தி நிற்கின்றது. இந்த நாற்பது நாட்களும் இயேசு செபத்தில் இறைதந்தையுடன் ஆழமான நெருக்கத்தில் இருந்தார். அதுமட்டுமல்ல, தீமை எனும் மறைபொருளையும் அவர் எதிர்கொண்டார்.

### தவக்காலம் ஒன்றிப்பின் காலம்

தவக்காலத் தன்னொறுப்பு என்பது இயேசுவின் பாஸ்கா மறையுண்மையில் அவரைப் பின்பற்றுவதற்கும் நம் விசுவாச வாழ்வை ஆழப்படுத்துவதற்கும் உதவுவதை நோக்கம் கொண்டதாகும். இந்த நாற்பது நாட்களும் நாம் நமதாண்டவரின் வார்த்தைகளையும் எடுத்துக்காட்டுக்களையும் ஆழமாகத் தியானிப்பதன் மூலம் அவரிடம் மிக நெருக்கமாக வந்து நம் ஆன் மீக வறட்சி, சுயநலம் மற்றும் உலகாயுதப் போக்குகளை வெற்றிகொள்ள வேண்டும் என எமக்கு காட்டுகின்றது.

சிலுவையில் அறையுண்டு பின்னர் உயிர்த்தெழுந்த நமதாண்டவருடன் கொள்ளும் ஒன்றிப்பில் பாலைவன அனுபவத்தின் வழியாக உயிர்ப்பின் மகிழ்வு மற்றும் நம்பிக்கையை நோக்கி இறைவன் நம்மை வழிநடத்திச் செல்லும் இத்தவக்காலத்தில் நாம் அவருடன் ஒன்றிப்பை வளர்ப்போம். ஒப்புரவாவது மிக அவசியமானதும் கூட. படைத்தவரோடு மட்டுமல்ல, நம்மோடு வாழ்வோரோடும் நாம் ஒப்புரவாவது காலத்தின் கட்டாய தேவையாகின்றது.

ம.பிரான்ஸ்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

நல்ல ஆரோக்கியமுள்ள சமூகத்தை கட்டியெழுப்புவதில் அக்கறை கொள்வோம். நம்முடைய நல்ல மாதிரிகையின் வழி புதிய சமூகத்தை கட்டியெழுப்புவோம். உறவிலே இறைவனை உயிர்ப்பிக்கச் செய்து, தெய்வ தரிசனம் பெறுவோம். தவக்காலம்- உறவின் காலம். உறவின் உயிர்ப்பின் தளிர் நம்மிலே புதிய தசாப்தத்தை தர இத்தவக்காலத்தை பயன்படுத்துவோம்.

# பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்ட நிலையில் அரச பயங்கரவாதம் தோன்றியுள்ளது

## மௌபிம ஜனதாவின் தலைவர் தெரிவிப்பு

நாட்டில் வடக்கு மற்றும் தெற்கில் தோன்றிய பயங்கரவாதம் தோற்கடிப்பட்ட நிலையில் அரச பயங்கரவாதம் தலைதூக்கி நாட்டையும் மக்களையும் சீரழித்து வருவதாக மௌபிம ஜனதா பெரமுனவின் தலைவர் ஹேமகுமார நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பு புதிய நகர மண்டபத்தில் எதிர்க் கட்சிகளின் எதிர்ப்பு இயக்கத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகளிடையேயான உடன்பாடுகள் தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்தும் குறிப்பிடுகையில்,

இந்நாட்டிலே யுத்தமொன்று நடந்தது. யுத்தத்திற்கு சிங்கள மக்களோ தமிழ் மக்களோ முஸ்லிம் மக்களோ எந்த மதத்தைச் சேர்ந்த பிரிவினரோ விரும்பவில்லை.

நாம் பயங்கரவாதத்திற்கு எதிரானவர்கள். 71 ஆம் ஆண்டிலும் 89 ஆம்ஆண்டு தெற்கிலும் ஆரம்பமான பயங்கரவாதங்களுக்கு நாம் எதிரானவர்கள். அதேபோல் வடக்கின் பயங்கரவாதத்திற்கு நாம் எதிரானவர்கள். தெற்கில் ஏற்பட்ட பயங்கரவாதத்தினால் நாடு மோசமாக பாதிக்கப்பட்டது. அதேபோல் வடக்கில் ஏற்பட்ட பயங்கரவாதத்தினாலும் நாடு மோசமாக பாதிக்கப்பட்டது.

ஆனாலும் இன்று வடக்கில் பயங்கரவாதம் இல்லை. அதேபோல் தெற்கிலும் பயங்கரவாதம் இல்லை. இந்த நாட்டிலே தற்போது ஒரே ஒரு பயங்கர்வாதமே இருக்கின்றது. அது இந்த அரசு மேற்கொள்கின்ற அரச பயங்கரவாதமே.

இன்று அரசாங்கத்திற்கு எதிராக கருத்துக்களைத் தெரிவிக்க முடியாதுள்ளது. அரசிற்கு எதிராக அறிக்கையொன்றை வெளியிட முடியாதுள்ளது. அரசாங்கத்திற்குள் காணப்படும் இயலாமை. வங்குரோத்து நிலைமையினை விமர்சிக்க முடியாதுள்ளது.

இன்று இந்த நாட்டில் சமூக சேவையாளர்கள் அரச தலைவர்கள். பல்வேறான அரசியல் செயற்பாட்டாளர்களுக்கு என்ன நடக்கின்றது என யாருக்கும் தெரியாதுள்ளது. இவ்வாறாக மக்களை ஏமாற்றும் அரசாங்கத்தை, அடக்கு முறையிலான அரசாங்கத்தை விரட்டியடிப்பதற்காகவே பல்வேறான கட்சிகளைச் சேர்ந்தோர் ஒரே குறிக்கோளில் இருந்து கைகோர்த்துள்ளோம் என்றும் கூறினார். (அ-2)

## மின்சாரம் தாக்கி இளைஞன் காயம்

(கனகபுரம்)


மின்சாரம் தாக்கி இளைஞன் ஒருவன் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இச்சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை மல்லாவியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவது,

உடுப்பை வைத்து உலர விடுவதற்காக வீட்டிற்குள் உள்ள கொடியில் போட்ட வேளையே குறித்த சிறுவனை 1/2 மணி நேரமாக மின்சாரம் தாக்கி அவரின் உள்ளங்கை எரிந்துள்ளது.

இச்சம்பவத்தில் அதே இடத்தை சேர்ந்த அனுசியன் (வயது17) என்ற இளைஞனே மின்சார தாக்குதலுக்கு உள்ளாகி மல்லாவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிறார். (அ-3-259)





கிளி/இயக்கச்சி அ.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு போட்டி அண்மையில் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் மாலை அணிவித்து அழைத்து வரப்படுவதையும் நிகழ்வில் வெற்றியீட்டிய மாணவிக்கு வெற்றிச்சின்னம் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-பூநகரிச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட விகிதாசாரத்தை மாற்றியமைத்து தேர்தலில் வெற்றிபெற சில சக்திகள் முயற்சி

## கொக்காச்சான் குளத்தில் மேலும் 700 சிங்கள குடும்பங்கள் குடியேற்றம்–ஆனந்தன் எம்.பி



வவுனியா

**வவுனியா மாவட்டத்திலுள்ள தமிழ்க் கிராமமான கொக்காச்சான்குளத்தில் மேலும் 700 சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டு வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலகப் பிரிவுக்கு மாற்றப் பட்டுள்ளது. கொக்காச்சான்குள கிராமத்தின் பெயரும் சிங்களப் பெயராக மாற்றப்பட்டுள்ளதாக வன்னி மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள் ளார்.**

வவுனியா மாவட்டத்தின் இன விகிதாசார த்தை மிகவும் மோசமாக மாற்றியமைக்கும் வகையில் நன்கு திட்டமிட்ட முறையில் இரா ணுவத்தின் ஆதரவுடன் இந்த நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது எனவும் அவர் குற்றம் சாட்டியிருக்கின்றனர்.

வவுனியா பிரதேச செயலகப் பிரிவுக் குட்பட்ட கொக்காச்சான் குளத்தில் ஏற்கனவே 300சிங்கள குடும்பங்கள் குடியேற்றப்பட்டி ருந்தன. இங்கு 3 ஆயிரம் சிங்களக் குடும் பங்களைக் குடியேற்றுவதை இலக்காகக் கொண்டே அரசாங்கம் தன்னுடைய நட வடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு விடுத் துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டு ள்ளதாவது, வவுனியா பிரதேச சபைப் பிரிவுக்குட் பட்ட கொக்கச்சான் குளம் பாரம்பாரியமான ஒரு தமிழ்க் கிராமமாகும். இங்கு கடந்த வரு டத்தில் 300 சிங்களக் குடும்பங்கள் இராணுவ ஆதரவுடன் கொண்டுவரப்பட்டு குடியேற்றப் பட்டனர். இதன்பெயரும் கலாபோகஸ்வெவ என சிங்களப் பெயராக மாற்றப்பட்டுள்ளது. இப்போது மேலும் 700 குடும்பங்களைச் சேர்ந்த சிங்களவர்கள் இங்கு குடியேற்றத்துக் காக கொண்டுவரப்பட்டு நேற்று முன்தினம் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

இதன்போது ஆளும் கட்சி எம்.பி. நாமல் ராஜபக்ச நேற்று முன்தினம் இங்கு விஜயம் செய்து குடியேற்றவாசிகளுக்கான உதவி களை வழங்கியுள்ளார்.

இந்தக் கிராமத்தில் 3 ஆயிரம் சிங்களவர் களைக் கொண்டு வந்து குடியேற்றுவதுதான் அரசாங்கத்தின் இலக்காகவுள்ளது. வவுனியா விலுள்ள இராணுவ அதிகாரி ஒருவர் இதற் கான முயற்சிகளைத் துரிதமாக முன்னெ டுத்து வருகின்றார். இந்தப் பகுதியில் வாழ்ந்த தமிழர்கள் கடந்தகால வன்முறைகளின் போது அங்கிருந்து வெளியேற்றப்பட்டுவிட்ட நிலையில் இப்போது சிங்களவர்கள் இவ் வாறு. கொண்டு செல்லப்பட்டு குடியேற்றப் படுவதால் தமிழர்கள் பெரும் அதிர்ச்சியடைந் துள்ளனர். இங்கு தமிழர்களின் காணிகள், வயல் நிலங்கள் என்பன பெருமளவுக்கு உள் ளன என்பன கவனிக்கத்தக்கது.

குடியேற்றப்படும் சிங்களவர்களை ஊக்கு விப்பதற்காக அவர்களுக்கு பல்வேறு சலு கைகளும் வசதிகளும் செய்து கொடுக்கப் படுகின்றன. இவற்றின் மூலம் சிங்களக் குடி யேற்றவாசிகள் மேலும் குடியேறுவதற்கு ஊக்குவிப்படுகின்றார்கள். மேலும் வசதிகள் செய்து தரப்படும் என்ற வாக்குறுதிகளும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

வவுனியாவின் இன விகிதாசாரத்தைப் பெருமளவுக்கு பாதிக்கும் வகையிலான இந்த நடவடிக்கை தமிழ் மக்களுக்குப் பெரி தும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. ஏற் கனவே மன்னார், முல்லைத்தீவு, மாவட் டங்களில் நெடுங்கேணி அரியகுண்டான் பகுதியிலும் பெருமளவு சிங்களக் குடியே ற்றங்கள் இடம்பெற்றிருக்கின்றன. அரிய குண்டானின் பெயரும் அதாவெட்டுவெவ என சிங்களப் பெயராக மாற்றப்பட்டுள்ளது.

போர் முடிவுக்கு வந்த பின்னர் மீள் நல்லி ணக்கத்துக்கான செயன்முறைகள் முன் னெடுக்கப்படுவதாக சர்வதேச சமூகத்துக்கு அரசாங்கம் கூறிக் கொள்ளும் நிலையில் இவ்வாறான ஆக்கிரமிப்புக்களே இடம் பெறு கின்றன என்பதை இந்தியா உட்பட சர்வதேச சமூகம் புரிந்துகொள்ளவேண்டும்.

இவ்வாறான செயற்பாடுகளை நிறுத்து வதற்கான அழுத்தங்களை சர்வதேச சமூகம் இலங்கை அரசுக்குக் கொடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

இதேவேளையில் வன்னியிலுள்ள காடு கள் பலவும் அழிக்கப்பட்டு அங்கு இங்கு முஸ்லிம்களைக் குடியேற்றுவதற்கான நடவ டிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந் தப் பகுதிகளில் முஸ்லிம்கள் முன்னர் ஒரு போதும் வசித்தவர்களல்ல. ஆனால் மாவட்டத் தின் இன விகிதாசாரத்தை மாற்றியமைத்து அடுத்து வரும் தேர்தல்களில் தமது வெற்றி வாய்ப்பை அதிகரித்துக் கொள்வதை நோக்க மாகக் கொண்ட சில சக்திகளே இதன் பின் னணியில் செயற்படுகின்றன.

இந்த சுயநலன் கொண்டவர்களின் செயற் பாடுகளால் காலம்காலமாக ஒற்றுமையாக வாழ்ந்து வந்த மக்களிடையே விரோதம் விதைக்கப்படுகின்றது. இணநல்லுறவு பேணப் படவேண்டுமானதால் இவ்வாறான செயற் பாடுகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (அ-250-266)


வேலைவாய்ப்புடன் கூடிய UK STUDENT VISA க்களை வழங்கி வரும்
EXPONET OVERSEAS CONSULTANTS



UK STUDENT VISA வில் பெரியளவிலான எந்த மாற்றங்களும் ஏற்படவில்லை. நீங்கள் உண் மையான மாணவராகவும் UK அரசாங்கத்தின் விதிமுறைகளை ஏற்றுக் கொள்பவராகவும் இருந்தால்,

- STUDENT VISA வில் (UNIVERSITY) எனில், நீங்கள் 20 மணித்தியாலங்கள் வேலை செய்ய முடியும்.
- STUDENT VISA HEI COLLEGE எனில், 10 மணித்தியாலங்கள் வரை வேலை செய்ய முடியும்.
- STUDENT VISA வில் MSC OR PHD செய்யப்போகின்றீர்களெனில் உங்கள் மனைவி, பிள்ளை களையும் அழைத்துச்செல்ல முடியும்.
- உங்கள் பல்கலைக்கழக படிப்பு முடிந்தவுடன் 2 வருட WORK PERMIT பெற்றுக் கொள்ள முடியும். (ஆனால் அதற்கு நீங்கள் தகுதியுள்ளவராகவும் வருடத்திற்கு £20000 இற்கு மேல் ஊதியத்துடனான வேலைவாய்ப்பையும் பெறவேண்டும்)

எமது நிறுவனம் இல. 379-1/2, காலிவீதி, வெள்ளவத்தையிலும் யாழ். மாவட்டத்தில் இல. 197 , அரசடி வீதி, யாழ்ப்பாணம் TEL-0117555511/14, 0217538395, E.MAIL: info@ expo group.lk எனும் முகவரியிலும் லண்டனில் இல. 56, THE GARDENS, HARROW, MIDDLESEX, HAI HEY இலும் செயற்பட்டு வருகிறது.

எமது நிறுவனம் மாணவர்களுக்கு லண்டனில் கல்வி கற்பது தொடர்பான வழிமுறைகளையும் ஆலோசனைகளையும் இலவசமாக வழங்கி வருகிறது மட்டுமல்லாமல் UK பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பதற்கான STUDENT VISA க்களையும் பெற்றுக்கொடுப்பதில் முன்னணியாகத் திகழ்கிறது.

விளம்பர விபரணம்

UK TIER- 4 STUDENT VISA சம்பந்தமாக தெரிந்து கொள்ளவேண்டிய நடைமுறைகள்

- UK BA இன் தரப்படுத்தலுக்கமைவாக HIGHLY TRUSTED SPONSOR LICENSE உடைய COLLEGES AND UNIVERSITY களில் இருந்து பெற்றுக்கொள்ளும் அனுமதிகளுக்கு மட்டுமே VISA வழங்கப்படுகிறது.
- மாணவர்கள் கற்க விரும்பும் பாடநெறிகளுக்கமைவாக SELT பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். SELT என்பது SECURE ENGLISH TEST என்பதாகும். UKBA இனால் அங்கீகரிக்கப்பட்ட ENGLISH TEST PROVIDERS இன் பரீட்சைகளின் மூலம் மாணவர்கள் SLT தேவையினை பூர்த்தி செய்து கொள்ளமுடியும்.
- NQF LEVEL 3,4,5, இற்கான கற்கை நெறியினை பூர்த்தி செய்வதற்கு குறைந்தபட்சம் CEFR B1 LEVEL ஐ பூர்த்தி செய்திருக்கவேண்டும். NQF LEVEL 6 &7 இற்கு விண்ணப்பிப்ப தாயின் CEFR B2 LEVEL இனைப்பூர்த்தி செய்திருக்க வேண்டும்.
- தற்பொழுது UK இற்கு TIER-4 STUDENT VISA வில் செல்லும் மாணவர்கள் பகுதிநேர வேலைவாய்ப்பினைப் பெறவேண்டுமாயின் அவர்களது அனுமதிகள் GOVERNMENT COLLEGES OR UNIVERSITIES OR UNIVERSITY ASSOCIATE COLLEGE இல் இருந்து பெற்றிருத்தல் வேண்டும்.

EXPONET
Overseas Consultants


## உணவகமொன்றில் மஞ்சள் நிற குடிநீர்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நகரில் உள்ள உணவுக் கடை ஒன்றில் அசுத்தமான நீரைப்பயன்படு த்தி உணவுகள் தயாரிப்பதாகவும் உணவு உண்ட பின் அவ்அசுத்த நீரையே பருகக் கொடுப்பதாகவும் அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்குறித்த உணவுக்கடைக்கு அருகில் உள்ள கிணறு நில மட்டத்துடன் காணப்படுவ தால் நிலத்தில் உள்ள கழிவுகள் அனைத்தும் அக்கிணற்றினுள் சென்று நீரானது மஞ்சள் நிறத்தில் காணப்படுகின்றது.

இந்நீரையே உணவுக்கடையில் பயன்ப டுத்தி வருவதாகவும் விசனம் தெரிவித்துள்ள னர்.

இதனால் பல்வேறு வகையான நோய் களுக்கு உள்ளாக நேரிடும் எனவும் அச்சம் தெரிவித்துள்ளனர்.

எனவே உரியவர்கள் இதனைக்கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண் டுமென அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித் துள்ளனர். (அ-3-267)

## ஆசியாவின் போட்டி நாடாக சீனாவை கருதவேண்டாம்

### உயர்ஸ்தானிகர் காரியவசம் கூறுகிறார்

சீனாவை ஆசியாவின் போட்டி நாடாகக் கருதக்கூடாதுஎன இந்தியாவிற்கான இல ங்கை உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசம் தெரிவித்துள்ளார்.

ஆசிய பிராந்தியத்தை சமாதான வல யமாக உருவாக்குவதே இலங்கையின் நோக் கம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்து சமுத்திரத்தின் தந்திரோபாய சமநி லையை பாதிக்காத வகையில் சீனா உள்ளிட்ட நாடுகளுடன் இலங்கை உறவுகளைப் பேணி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

சீனா வேகமாக அபிவிருத்தி அடைந்து வருவதாகவும் மேற்குலக நாடுகளின் பொரு ளாதாரங்களுடன் போட்டியிட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆசியா சீனாவின் வளங்களை எவ்வாறு பயன்படுத்திக் கொள்வது என்பது பற்றி சிந் திக்க வேண்டுமே தவிர போட்டியாளராகக் கரு தக்கூடாது என அவர் தெரிவித்துள்ளார்.

சீனாவுடன் மிக நெருங்கிய பொருளாதார உறவுகளைப் பேணி வருவதாகக் குறிப்பிட்டு ள்ளார். இலங்கையின் சீன முதலீடுகளை இலங்கையும் இந்தியாவும் வரவேற்க வேண் டுமென அவர் தெரிவித்துள்ளார். (அ-2)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதம் குறித்த அரசாங்கத்தின் வரைவிலக்கணத்தை ஏற்க முடியாது

## சுரேஷ் எம்.பி தெரிவிப்பு

**தமது குடும்ப - இனவாத - சர்வாதிகார ஆட்சிக்கு எதிராகக் கொடி தூக்குவோரை அடக்கும் நோக்குடனேயே அரசாங்கம் பயங்கரவாதம் என்ற சொல்லுக்கு வரைவிலக்கணம் வழங்கியுள்ளது. அரசின் இந்த வரைவிலக்கணத்தை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது.**

**இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.**



பயங்கரவாதி என்றால் யார்? பயங்கரவாதச் செயல் என்றால் என்ன? என்பதற்கான வரைவிலக்கணத்தை அரசு கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் வெளியிட்டது.

அரசியல், மதம் அல்லது இலட்சியம் சார்ந்த கருத்துக்களைப் பரப்பும் நோக்கில் செயற்படுவது கூட பயங்கரவாதச் செயலே என்று அரசு தனது வரைவிலக்கணத்தில் உள்ளடக்கியுள்ளது.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

பிரித்தானிய காலனித்துவ ஆதிக்கத்திற்கு எதிராக ஆசியா, ஆபிரிக்கா கண்டங்களில் அஹிம்சை வழியிலும் ஆயுத வழியிலும் விடுதலைப் போராட்டங்கள் நடைபெற்றன.

இந்தியாவில் மகாத்மாகாந்தி தலைமையில் அஹிம்சை போராட்டமும் நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் உட்பட வேறு பல தலைவர்களின் தலைமையில் ஆயுதப் போராட்டங்களும் தென்னாபிரிக்காவில் நெல்சன் மண்டேலா தலைமையில் வெள்ளையர்களின் ஏகாதிபத்திய ஆட்சிக்கு எதிராக ஆயுதப் போராட்டமும் பாலஸ்தீனத்தில் யசீர் அரபாத் தலைமையில் ஆயுதமேந்திய விடுதலைப் போராட்டமும் நடைபெற்றன.

இதேமாதிரி பல்வேறு நாடுகளிலும் விடுதலைப் போராட்டங்கள் அஹிம்சை வழியிலும் ஆயுத வழியிலும் நடைபெற்றன.

இன்றைக்கும் பாலஸ்தீனத்தில் ஹமாஸ் என்ற இயக்கம் விடுதலைக்காக ஆயுதமேந்திப் போராடி வருகின்றது. இந்த ஆயுதப் போராட்டத்திற்கு இலங்கை அரசும் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

ஆனால் இலங்கையில் சுமார் 60 வருடங்களுக்கும் மேலாக ஆயுத அஹிம்சை வழிகளில் தொடரும் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை மட்டும் அரசு பயங்கரவாதப் போராட்டமாக சித்திரிக்கின்றது.

இலங்கையில் அரச வன்முறைகள், அடக்குமுறைகள் இன்றும் தலைவிரித்தாடுகின்றன. இந்த அரசு தமிழ், முஸ்லிம் மக்களைத் தொடர்ந்து துன்புறுத்திக் கொண்டே இருக்கின்றது. பாரிய ரீதியில் இன, மத, மொழி சார்ந்த அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. தமிழ், முஸ்லிம் மக்களின் வழிபாட்டு இடங்கள், வாழ்விடங்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் அரசு பயங்கரவாதம் என்ற சொல்லுக்கு வழங்கியுள்ள வரைவிலக்கணத்தைப் பார்க்கும்போது வேடிக்கையாக இருக்கின்றது.

தமது குடும்ப ஆட்சிக்கு எதிராக - இனவாத ஆட்சிக்கு எதிராக - சர்வாதிகார ஆட்சிக்கு எதிராகக் கொடி தூக்குவோரை அடக்கும் நோக்குடனேயே அரசு பயங்கரவாதம் என்று சொல்லுக்கு வரைவிலக்கணம் வழங்கியுள்ளது. அரசின் இந்த வரைவிலக்கணத்தை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

எனவே முதலாவதாக இந்த அரசானது இனம், மதம், மொழி, அரசியல் சார்ந்த அடக்குமுறைகளை கைவிட வேண்டும். தமிழ் பேசும் மக்களுக்கு உரிமைகளை வழங்க வேண்டும்.

இவ்வாறு அரசு செய்யுமானால் நாட்டில் விடுதலைப் போராட்டங்கள் இடம்பெறாது பயங்கரவாதம் என்ற பிரச்சினை வராது என்றார். (அ-2)

## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(தும்பளை)

பருத்தித்துறை புலோலி வடக்கைச் சேர்ந்த கே.அமரசிங்கம் யாழ். மாவட்ட சமாதான நீதி நிர்வாக பகுதிக்கான சமாதான நீதவானாகவும் அரச தமிழ், ஆங்கில மொழி பெயர்ப்பாளராகவும் நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் சத்தியப்பிரமாகும் செய்து கொண்டார்.

கடந்த 1964 ஆம் ஆண்டு அரச சேவையில் சேர்ந்து கொண்ட இவர் 1974 இல் தட்டெழுத்தாளராக பதவி உயர்வு பெற்று கொழும்பு மாவட்டத்திலும் பின்னர் பருத்தித்துறை பிரதேச செயலகத்திலும் பணியாற்றி இளைப்பாறியவராவார்.

தலைசிறந்த நாடக கலைஞரும் விளையாட்டு வீரருமான இவர் பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தின் கலைப்பரிதி விருதினையும் பெற்றவரென்பது குறிப்பிடத்தக்கது. (அ-3-19)



யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி நிறுவுநர் அமரர் வி.தாமோதரம்பிள்ளையின் சிலை திறப்புவிழா அண்மையில் நடைபெற்றபோது... (படம்:- எஸ்.செல்தீபன்)

## இலங்கை விவகாரம் தொடர்பில் இராஜதந்திரிகளுடன் தி.மு.க பேச்சு

இலங்கை விவகாரம் குறித்து தமிழகத்தின் திராவிட முன்னேற்றக்கழகக் கட்சி வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் பேச்சு வார்த்தையொன்று தி.மு.கவின் தலைவர் மு.கருணாநிதி தலைமையில் நடத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகின்றது.

எதிர்வரும் மார்ச் மாதம் இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் அமெரிக்கா முன்வைக்கும் தீர்மானத்திற்கு ஆதரவு திரட்டும் நோக்கில் வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தப்படுவதாக தி.மு.க அறி வித்துள்ளது.

இத்தாலி, மலேசியா, மொன்டன்கிரோ உள்ளிட்ட பல்வேறு தூதரக அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. அமெரிக்க மற்றும் ரஷ்ய தூதரக அதிகாரிகளுடனும் தி.மு.கவினர் இலங்கை விவகாரம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். (அ-2)

## தனியார் காணிகளிலிருந்து இராணுவத்தினர் வெளியேறினர்

(மல்லாவி)

மாங்குளத்தில் மக்கள் குடியிருப்புகளில் இருந்து இராணுவம் தமது படை முகாம்களுக்கு நகர தொடங்கியுள்ளது.

வன்னியில் இடம்பெற்ற இறுதிப்போரின் போது மாங்குளம் மக்கள் குடியிருப்புக்களிலும் பொது இடங்களிலும் முகாமிட்டிருந்த இராணுவத்தினரில் ஒரு பகுதியினர் தற்போது அங்கிருந்து நகர தொடங்கியுள்ளனர்.

கடந்த 1990 ஆம் ஆண்டுக்கு முன்பு ஏ-9 வீதியிலிருந்த படை முகாமுக்கே இவ்வாறு மாற்றப்பட்டுள்ளனர்.

மாங்குளம் புதிய கொலனி, நீதிபுரம் ஆகிய கிராமங்களில் இருந்து இராணுவத்தினர் வெளியேறிய வீடுகளின் உரிமையாளர்கள் தற்போது தமது காணிகளை துப்பரவு செய்து தமது காணிகளில் குடியிருப்பதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்வதை காண முடிகின்றது. (அ-3-15)

## உணவக உரிமையாளருக்கு பிணை வழங்கியது நீதிமன்று

(குருமன்காடு)

வவுனியா இறம்பைக்குளத்தில் உள்ள திருமண மண்டபம் ஒன்றில் திருமண வைபவத்தின்போது பரிமாறப்பட்ட உணவில் புழுக்கள் இருந்தமை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட குறித்த உணவகத்தின் உரிமையாளர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் தொடர்பாக வவுனியா நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே உரிமையாளரை ஒரு இலட்சம் ரூபா காசுப்பிணையிலும் 3 இலட்சம் ரூபா சரீரப்பிணையிலும் நீதிமன்றம் விடுவித்தது.

அத்துடன் வழக்கை எதிர்வரும் மே மாதம் 30 ஆம் திகதி வரை ஒத்திவைத்த நீதிமன்றம் அன்றைய தினம் வரையிலும் திருமண மண்டபத்தினை மூடுமாறும் உத்தரவிட்டுள்ளது.

வவுனியா நீதவான் நீதிமன்றில் நகர சபை பொதுச்சுகாதார பரிசோதகர் சி.கிரிதரனினால் கடந்த மாதம் 28 ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் மீண்டும் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போதே நீதவான் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, இறம்பைக்குளத்தில் உள்ள உணவகத்தில் திருமண வைபவத்தில் கடந்த மாதம் 28 ஆம் திகதி பரிமாறப்பட்ட உணவில் உயிருள்ள புழுக்கள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இது தொடர்பில் திருமண வீட்டார் உடனடியாக பொதுச்சுகாதார பரிசோதகர்களுக்கு தகவல்களை வழங்கினர்.

பரிசோதனையில் ஈடுபட்ட பொதுச்சுகாதார பரிசோதகர்கள் புழுக்கள் இருக்கின்றமையை உறுதி செய்து கொண்டு அன்றைய தினம் வழக்குத்தாக்கல் செய்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2-250)

## பிள்ளைத்தமிழ் நூல் வெளியீடு

(சரவணை)

சரவணை பள்ளம்புலம் அருள்மிகு முருகமூர்த்தி திருக்கோவில் திருமுருகன் மீது வே.இராசலிங்கம் பாடியருளிய பிள்ளைத்தமிழ் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அத்தியடி கணபதி கலாசார மண்டபத்தில் (அத்தியடிப் பிள்ளையார் மண்டபம்) நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

ஆசிரியுரையினை அவ் ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ நா.யோகீஸ்வரக் குருக்கள் வழங்கவுள்ளார்.

தலைமையுரையை தீவகக் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் ப.ஆரூரன், வெளியீட்டுரையை தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

கருத்துரையை ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஓய்வு பெற்ற விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசு வழங்கவுள்ளார்.

நூலின் முதற்பிரதியை கந்தையா ரவீந்திரன் பெற்றுக் கொள்ளவுள்ளார். (அ-3)

## பொதுக்கூட்டம்

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீகற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழக வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ்ப்பாணம், 82, நாவலர் வீதியில் அமைந்துள்ள சைவசமய அபிவிருத்திக்கழக அறிவகத்தில் நடைபெறவுள்ளது.

புதிய நிர்வாகிகள் தெரிவு, பிறவிடயங்கள் பற்றிய கலந்துரையாடல் என்பன இடம்பெறவுள்ளதால் அனைவரையும் தவறாது சமுகம் தரும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு அன்பான சொல் வியப்பு மிகுந்த அறிவழகுகளை உருவாக்கும். -விளாடிமிர்

வலம்புரி
T.P: 021 567 1530
website : www.valampurii.lk

## புனித பாப்பரசரின் பதவி விலகல் ஆத்மிகத்திற்கு ஏற்பட்ட இழப்பு

புனித பாப்பரசர் பதினாறாவது பெனடிக்ற் அவர்கள் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார் என்ற செய்தி கத்தோலிக்கத் திருச்சபை கடந்து உலக மக்கள் அனைவரையும் அதிர்ச்சிக்கு ஆளாக்கியுள்ளது.

கத்தோலிக்கத் திருச்சபையின் அதி உன்னதப் பதவியாக கருதப்படுகின்ற புனித பாப்பரசர் அதிரடியாக பதவி விலகியமைக்கான காரணம் என்ன? என்ற கேள்வி உலகின் இன்றைய முதன்மைக் கேள்வியாக நிற்கிறது.

தனது உடல் நிலை காரணமாக ஆன்மிகப் பணியை செய்யமுடியாதுள்ளதெனப் புனித பாப்பரசர் தனது பதவி விலகலுக்குக் காரணம் கூறினாலும், உள்ளார்ந்தமாக அவருக்கு ஏதோ ஒரு அழுத்தம் இருந்துள்ளதென்பதை மறுதலித்துவிடமுடியாது.

ஆன்மிகப்பணியில் ஈடுபடுவதென்பது கூட, இந்த உலகில் முடியாதென்பதை நிரூபிப்பதாகவே புனித பாப்பரசரின் பதவி விலகலைக் கருத வேண்டும்.

எதையும் வெளிப்படையாக – துணிந்து கூறுகின்ற நேர்மைத் திறன்கொண்ட புனித பாப்பரசர் பதினாறாவது பெனடிக்ற் அவர்கள் ஏனைய மதங்களையும் மதித்தவர்.

ஈழத்தமிழர்கள் சொல்லொணாத் துன்பப்பட்ட போது, தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என வலியுறுத்தியவர்.

சவுதி அரேபியாவில் ரிசானா என்ற இலங்கை முஸ்லிம் பிள்ளை தலைவெட்டப்பட்டபோது உலக மக்களிடம் ரிசானாவின் ஆத்ம இளைப்பாறலுக்காகப் பிரார்த்தியுங்கள் என தன் இரு கரங்களையும் நீட்டிய புனித பாப்பரசர் பதினாறாவது பெனடிக்ற், உலகில் ஏழ்மையால் வாடும் பெண்கள் வீட்டுப்பணிக்காகச் சென்று துன்பப்படுவதை சுட்டிக்காட்டி நின்றமை அவரிடம் இருக்கக் கூடிய இன, மத, மொழி என்ற பேதம்கடந்து பொதுமையை வெளிப்படுத்தி நிற்கும்.

இத்தகைய மதத் தலைவர்கள் உலகிற்கு அவசியம் தேவையாக இருக்கின்ற இவ் வேளையில், புனித பாப்பரசரின் பதவி விலகல் சமயப் பணி – ஆத்மிகப்பணி – இறை பணி என்பன அதர்மத்திற்குள்ளும் அரசியலுக்குள்ளும் உலக அடக்கு முறைகளுக்குள்ளும் அகப்பட்டு விட்டதென்பதை உணர முடிகிறது.

ஓ! இமாலயச் சாரலில் பனி கொட்டும் மலைகளின் அடிவாரங்களில் கோவணத்துண்டு தவிர, அனைத்தும் துறந்து சம்போ மகாதேவா... சம்போ மகாதேவா... என்று சாட்சாத் ஈசனை நினைக்கின்ற துறவிகள் ஞானிகள்தான்.

அவர்கள் அன்றே உணர்ந்தார்கள் போலும் இந்த உலகம் எதையும் விட்டுவைக்காதென்று.

எதுவாயினும் புனித பாப்பரசர் பதினாறாவது பெனடிக்ற் அவர்களுக்கு எங்கள் நன்றிகளைத் தெரிவிப்பதைத் தவிர, வேறு எதைத்தான் நாம் சொல்ல முடியும்.

# எதிரணிகளின் கூட்டு ஒரு நகைச்சுவை நாடகம்

## பிரபா எம்.பி.கிண்டல்

(கொழும்பு)

அரசாங்கத்தை கவிழ்ப்பதற்காக எதிரணி என்று சொல்லப்படுபவர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் கூட்டணி நகைச்சுவை நாடகத்தின் ஒரு பகுதியாக தென்படுகிறது என ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது,

எதிரணி கூட்டணியில் கைச்சாத்திட்டவர்களில் ஐக்கிய தேசிய கட்சியைத் தவிர பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் எந்தக் கட்சியும் கிடையாது. வெறும் இரண்டு நான்கு பேர் அங்கம் வகிக்கும் கட்சிகளைத் தான் ஐக்கிய தேசியக்கட்சி எதிரணி கூட்டணிக்குள் கொண்டு வந்துள்ளது. ஐக்கிய தேசியக்கட்சியையும் ஜனநாயக மக்கள் முன்னணியும் தவிர ஏனைய கட்சிகள்அரசியல் வங்குரோந்து நிலையில் உள்ள கட்சிகளாகும். இந்தக்கட்சிகளை கூட்டணிக்குள் வைத்துக் கொண்டு மாபெரும் சக்தியாக விளங்கும் அரசாங்கத்தை கவிழ்ப்பதென்பது நகைச்சுவைநாடகத்தின் ஆரம்பப் பகுதியைப் பார்ப்பது போலுள்ளது. மேடையில் கைகளைஉயர்த்திப் பிடித்துக்கொண்டிருப்பதை பார்க்கும் பொழுது கடந்த ஜனாதிபதி தேர்தல்தான் ஞாபகத்திற்கு வருகிறது. அந்த தேர்தலிலும் கைகளை உயர்த்தி பிடித்து படுதோல்வியைத் தழுவினர் என்பதையும் மறந்து விடக் கூடாது. தமிழ் கூட்டமைப்பினர் இதில் கையெழுத்திட மறுத்தமை வரவேற்கத் தக்கது. இதில் கையெழுத்திடுவதன் மூலமாக தனது தனித்துவத்தையும் இலட்சியங்களையும் அவர்கள் கைவிட தயார் இல்லை என்பது புரிகிறது.

மாறிமாறி வந்த அரசாங்கங்கள் தமிழ் மக்களுக்கு எதனையும் வழங்க வில்லை என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அதுமட்டுமன்றி சந்திரிகா அம்மையார் தமது தரப்பிலிருந்து தமிழ் மக்களுக்கான தீர்வினை கொண்டு வந்த போது தீர்வின் பிரதிகளை பாராளுமன்றத்தில் எரித்தது ஐக்கிய தேசிய கட்சி என்பதையும் அவர்கள் மறந்து விடக் கூடாது.

எதிரணி கூட்டணி என்பதற்குள் குறைந்த பட்சம் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி., சரத் பொன்சேகா தலைமையிலான கட்சிகளைத் கூட உள்வாங்க முடியாத நிலையில் இன்று ரணில் விக்கிரமசிங்க தள்ளாடிப் போயிருக்கிறார். இப்படியான கூட்டணியை அமைத்து அரசாங்கத்திற்கு சாதகமான போக்கையே அவர் ஏற்படுத்துகின்றார். யாழ்ப்பாணத்தில் 15-ம் திகதி நடக்கவிருக்கும் உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்டு மிச்சமிருக்கும் சிங்கள வாக்குகளையும் ஐக்கிய தேசிய கட்சிக்கு கிடைக்காமல் போக வழிபண்ணும் எதிர்க்கட்சி தலைவருக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

தமிழ் கூட்டமைப்பினரும் ஜனநாயக மக்கள் முன்னணியும் தமிழ் ஊடங்களுக்கு அனுப்பும் தமிழ் தீவிரவாத அறிக்கைகள் ஒன்று விடாமல் மொழி பெயர்க்கப்பட்டு சிங்கள பத்திரிகைகள் ஊடாக சிங்கள மக்களுக்கு பறைசாற்றப்படுகின்றது. இதன் மூலமாக இன்று எமது அரசாங்கத்திற்கு மேலதிகமான சிங்கள வாக்குகள் கிடைக்கப் பெறுகின்றன. இப்படியாக தமிழ்தேசியம் என்று கூறிக்கொண்டு தமிழ் தீவிரவாதம் பேசும் கட்சிகள் இன்றைய எனது ஜனாதிபதி மகிந்த அரசாங்கத்திற்கு சிங்கள மக்கள் மத்தியில்பெரும் வரவேற்பை பெற்றுக் கொடுக்கின்றன. அதனால் தானோ இவ் விருகட்சிதலைவர்களின் பிறந்தநாளுக் கு கூட மிகவும் கரிசனமாக ஜனாதிபதி அவர்கள் இவர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கின்றார் என நினைக்கின்றேன் என்றார் பிரபா எம்.பி. (செ-இ)

## இல்ல மெய்வல்லுநர் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் பாடசாலை அதிபர் ஏ.கைலாயபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் வைரமுத்து செல்வராஜா, சிறப்புவிருந்தினராக கனடா பழைய மாணவர் சங்கத் தலைவர் கே.சந்திரசேகரமுதலி, கௌரவ விருந்தினராக தென்மராட்சி உதவிக்கல்விப் பணிப் பாளர் ரீ.சிவகுமார் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (செ-5,29)

• • • • • • • • • • • • • • • •

(பண்டத்தரிப்பு)

யா/பிரான்பற்று கலைமகள் வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வியாழக்கிழமை பி.ப 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் வித்தியாலய அதிபர் கி.கிருஷ்ணானந்தா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தநிகழ்வில் பிரதம விருந்தினராக பிரதிக்கல்விப்பணிப்பாளர் சி.கந்தசாமி கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற அதிபர் வே.சிவசுந்தரம், கௌரவ விருந்தினராக பாடசாலை நலன்விரும்பி கு.கந்தசாமி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (செ-3,30)

• • • • • • • • • • • • • • • •

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை வல்வை சிவகுரு வித்தியாசாலையின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 16-ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பிரதமவிருந்தினராக வடமராட்சி கல்வி வலய முகாமைத்துவ பிரதிக் கல்விப்பணிப்பாளர் அழகேஸ்வரசாமி ஸ்ரீகரன், சிறப்பு விருந்தினராக மக்கள் வங்கி வல்வெட்டித்துறை கிளை முகாமையாளர் சதானந்தன் சர்வானந்தன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். பரிசில்களை திருமதி யோகேஸ்வரி ஸ்ரீகரன் வழங்கவுள்ளார். (செ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊரதீவு கிராமத்துக்கு மின்சாரம் கிடைக்குமா?

## கேள்வி எழுப்புகின்றனர் மக்கள்

புங்குடுதீவு ஊரைதீவுக்கிராமத்துக்கு மின்சாரம் வழங்க அரச உயரதிகாரிகள் முன்வருவார்களா என மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

யாழ்ப்பாணத்துக்கு தடையற்ற மின்சாரம் வழங்கவென யாழ். ஒளி மின் நிலையத்தை ஜனாதிபதி நேற்று திறந்து வைத்தார். இதன் மூலம் யாழ்ப்பாணத்துக்கு 24 மணி நேரமும் மின்சாரம் கிடைக்கப்பெறவுள்ளது.

இதேபோன்று புங்குடுதீவு இறுப்பிட்டிக் கிராமத்திற்கும் மண்டைதீவுக்கிராமத்திற்கும் நாளை மறுதினம் 15-ம் திகதி மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

ஆனால் ஊரதீவுக் கிராமத்துக்கு மின்சாரம் வழங்குவதற்கென எந்தவிதமான பூர்வாங்க ஏற்பாடுகளும் இன்னமும் மேற்கொள்ளப்படவில்லை.

இதனால் புங்குடுதீவில் ஒளியற்ற கிராமம் என்ற பெயர் ஊரதீவுக்கிராமத்திற்கு கிடைக்கவுள்ளது.

ஊரதீவுக்கிராமத்திற்கு மின்சாரம் வழங்கக்கோரி ஊரதீவுக்கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் வேலணை பிரதேச செயலாளர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளுக்கு கோரிக்கைகள், கடிதங்கள்வழங்கப்பட்டபோதும் எந்தவித நடவடிக்கைகளும் நடைபெற்றதாகத் தெரியவில்லை என ஊரதீவு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவித்தனர். ஊரதீவுக்கிராமத்திலும் பாடசாலைகள், கோவில்கள், பொது அமைப்புக்கள் என்பன காணப்படுவதுடன் மக்கள் நெரிசலாக வாழ்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஏ)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்



### அகங்காரம் இருக்கும் வரை முக்தி இல்லை

பாலும் நீரும் கலந்தது போன்றது உலகம். நீங்கள் ஓர் அன்னம் போன்று இருந்து நீரைத் தவிர்த்து பாலைப்பருகுங்கள்.

ஏகாந்தத்திலே (தனிமை) இருந்து நீங்கள் தியானம் புரியும்போது உங்கள் குடும்பத்தவரிடமிருந்து உங்களை முற்றிலும் பிரித்துக்கொண்டு தனித்திருங்கள்.

இல்லறத்தாருக்கு ஜீவர்களிடத்து அன்பு, பக்தர்களுக்குச் சேவை, கடவுளின் புனித நாம உச்சாடனம் ஆகியவை கடமைகளாகும்.

பணம் நமக்குப் பெற்றுத் தருவதெல்லாம் சோறும் கறியுமேயாகும். பணத்தையே உங்களுடைய உயிரும் உடலுமெனவோ, உங்களது ஒரே குறியும் நோக்கமும் எனவோ கருதாதீர்கள்.

அகங்காரம் இருக்கும் வரையில் ஞானமும் முக்தியும் கைவிடாது. பிறப்பும் இறப்பும் இருந்தே தீரும்; நீங்காது.

இல்லறத்தில் நம்பிக்கை கொள்ளுங்கள். கடவுளை நம்பி இருங்கள். பின்னர் நீங்களாகவே எதையுமே செய்யவேண்டியிராது. அன்னை காளி உங்கள் பொருட்டு யாவற்றையும் தாமே செய்வாள்.

சம்சாரமாகிய பெருங்கடலில் ஆறு முதலைகள் உள்ளன. காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் என்பவையே அந்த முதலைகளாம்.

பெண்ணாசையை ஒழித்தவன் உலகத்தையே துறந்தவன் ஆவான். அவனுக்கு இறைவன் வெகு அருகில் இருக்கிறார்.

மாயை என்பது தாய், தந்தை, சகோதர, சகோதரிகள், மனைவி, மக்கள், உற்றார், உறவினர் முதலியவர்களிடம் ஒருவனுக்கு உண்டாகும் பாசமாகும். எல்லா உயிர்களிடமும் சமமாகப் பரவும் அன்புக்கு தயை என்று பெயர்.




# ஆறுதல் வேண்டாம்

## அணியில் இருந்து நீக்கப்பட்ட கம்பீர்

கவாஸ்கருக்கு பின் இந்திய அணியின் சிறந்த தொடகக வீரராக கருதப்பட்டவர் கம்பீர். ஏனென்றால் அனைத்து ஆடு களத்திலும் சிறப்பாக ஆடக்கூடியவர். அப்படிப்பட்ட கம்பீர் இன்று தனது மோசமான ஆட்டம் காரணமாக அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 4 டெஸ்டில் விளையாடும் இந்திய அணியில் இருந்து அதி ரடியாக நீக்கப்பட்டுள்ளார். ஆனால் அவுஸ்திரேலியா அணிக்கெதி ரான இந்தியா 'ஏ' அணியின் பயிற்சி ஆட்டத்தில் கம்பீர் அணித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த ஆட்டத்தில் தன்னை நிரூபிக்கவுள்ளதாக தெரிவித்துள்ளார் கம்பீர்.

டுவிட்டரில் அவர், தான் அணியிலிருந்து நீக்கப்பட்டமை குறித்து குறிப்பிடுகையில், தைரியம் காட்ட வேண்டிய நேரம, கருணை, இரக்கம், ஆறுதல் தேவையில்லை, உற்சாகமாக இருங்கள் என்று தன் ரசிகர்களுக்கு அவர் கூறியுள்ளார்.

ஆனால் அணியில் தெரிவு செய்யப்பட்ட முரளி விஜய் மற்றும் ஷிகர் தவானுக்கு தனது வாழ்த்துக்களை தெரி வித்துள்ளார். மேலும் தான் அணியிலிருந்தாலும், இல்லாவிட்டாலும் இந்தியா வெற்றி பெறவேண்டும் எனவும் கூறியுள்ளார்.



# வாகை சூடியது நியூசிலாந்து

நியூசிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும் நியூசிலாந்து அணிக்குமிடை யேயான 2 ஆவது ரி-20 போட்டியில் இங்கிலாந்து அணி 55 ஓட்டங்களால் தோல்வியடைந்துள்ளது.

சேடன் பார்க் மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டி யில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பை தேர்வுசெய்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 192 ஓட்டங்களை குவித்தது.

முதலாவது விக்கெட்டுக்காக 75 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ்அணி தொடர்ந்து ஓட்டங்கள் அதிகரிக்க சீரான இடை வெளியில் விக்கெட்டுக்களை பறிகொடுத்தது.

நியூசிலாந்து அணி சார்பாக கப்ரில் 31 பந்துகளில் 47 ஓட்டங்களையும் ( 2 சிக்ஸ், 4 பவுண்டரி உட்பட), ரதபோர்ட் 27 பந்துகளில் 40 ஓட்டங்களையும் ( 3 சிக்ஸ், 1 பவுண்டரி உட்பட), மக்குலம் 38 பந்துகளில் 74 ஓட்டங்களையும் (5சிக்ஸ், 6 பவுண்டரி உட்பட) பெற்றனர்.

பந்து வீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக டேர்ன் பச் 38 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், ரைட் 24 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப் பற்றினர்.

193 என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 19.3 ஓவ ரில் அனைத்து விக்கெட் டுக்களையும் இழந்து 137 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. இங்கிலாந்து அணி சார்பாக பட்லர் 30 பந்துகளில 54 ஓட்டங்களையும் (1சிக்ஸ், 9 பவுண்டரி உட்பட), ரேட் வெல் 11 பந்து களில் 22 ஓட்டங்களை யும் (1சிக்ஸ், 3 பவுண் டரி உட்பட) பெற்றனர்.

பந்துவீச்சில் நியூசிலாந்து அணி சார்பாக பிறங்லின் 15 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், பட்லர் 9 ஓட்டங்க ளுக்கு 2 விக்கெட்டுக்களையும் மக்கெலநகன் 24 ஓட்டங்க ளுக்கு 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

மூன்று போட்டிகளைக் கொண்டுள்ள இந்த ரி -20 தொட ரில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றியைப் பெற்றுள்ள நிலையில் இறுதிப் போட்டி இரு அணிகளுக்கும் முக்கிய பேரட்டியாக மாறியுள்ளது.


பந்துவீச்சுக்களை சிதறடிக்கும் நியூசிலாந்து அணித் தலைவர் மக்குலம்



3 விக்கெட்டுக்களை வீழ்த்திய மேற்கிந்தியத் தீவுகள் அணியின் ஸ்மார்ட்

# கிரிக்கெட் அக்கடமி ஆரம்பிக்கிறார் ஹர்பஜன்

இந்தியாவின் சுழல் ஜாம்பவான் ஹர்பஜன் சிங் முப்பை யில் கிரிக்கெட் அக்கடமி ஒன்றை ஆரம்பிக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மும்பை மாநகராட்சி அதிகாரியைச் சந்தித்து கலந்துரையாடியபின் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

பஞ்சாப்பில் நான் கிரிக்கெட் அக்கடமி நடத்தி வருகிறேன். இதற்கு அடுத்தபடியாக மும்பையிலும் தொடங்குவதற்கு திட்ட மிட்டுள்ளேன். மும்பையில் கிரிக்கெட் அக்கடமி தொடங்கு வதற்கு அந்தேரியில் ஓர் இடம் தேர்வு செய்துள்ளேன். இது தொடர்பாக மாநகராட்சி அதிகாரியுடன் கலந்தாலோசித்துள் ளேன். இதன் மூலம் மும்பை மாநகராட்சி பாடசாலையில் படிக் கும் மாணவர்களுக்கு இலவசமாக கிரிக்கெட் பயிற்சி அளிப்பேன்.

மீண்டும் இந்திய அணியில் விளையாடுவதற்கு எனக்கு வாய்ப்பு கிடைத்தது மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. நன்றாக விளையாடி இந்திய அணி வெற்றி பெறுவதற்கு நான் கடுமையாக போராடுவேன் இவ்வாறு கூறினார்.

# வீரர்கள் மாற்றப்பட்டமை சரியான முடிவுதான் - கங்குலி

இந்திய அணியில் ஹர்பஜன் சிங்கை மீண்டும் சேர்த்தது சரியான முடிவுதான் என்று முன்னாள் இந்திய அணித் தலை வரும் தொலைக்காட்சி வர்ணனையாளருமான கங்குலி தெரிவித்துள்ளார்.

அத்துடன் கம்பீர் நீக்கம் பற்றி கருத்துத் தெரிவிக்கையில், கம்பீர் நீக்கப்பட்டது இயல்பான ஒன்றுதான். சிறப்பாக ஆடாத பட்சத்தில் நீக்காமல் இருக்க முடியுமா? ஆனால் அவர் நல்ல நிலைக்கு திரும்பி மீண்டும் அணியில் இடம்பெறுவார் என்ற நம்பிக்கை உள்ளது என்றார்

மகளிர் உலகக் கிண்ணம் – 2013

# சுப்பர் சிக்ஸ் ஆட்டத்தில் தீவுகளிடம் பணிந்தது நியூசிலாந்து

உலகக் கிண்ண மகளிர் சுப்பர் சிக்ஸ் சுற்றில், மேற்கிந்தியத் தீவு 48 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அணியை வீழ்த்தியது.

மும்பை, பிராபோர்ன் விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து முதலில் களத் தடுப்பைத் தேர்வு செய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவு 50 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 207 ஓட்டங்கள் எடுத்தது. ஸ்டெபானி டெய்லர் 49, டோட்டின் 27, ஷேனல் டாலி 37, அனிசா முகமது 31 ஓட்டங்கள் எடுத்தனர்.

208 என்ற இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடியநியூசிலாந்து 44.3 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 159 ஓட்டங்களை மாத்திரம் எடுத்தது. அணித் தலைவி சூஸி பேட்ஸ் 30, ரச்சேல் பிரீஸ்ட் 36 ஓட்டங்கள் எடுக்க, மற்றைய வீராங்கனைகள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். மேற்கிந்தியத் தீவுகளின் பந்துவீச்சில் ஸ்மார்ட் 3, டெய்லர், டோட்டின் தலா 2, அனிசா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

# முக்கிய ஆட்டங்கள் இன்று

இன்று நடைபெறும் சுப்பர் சிக்ஸ் இறுதிச் சுற்று ஆட்டங் களில் இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்று விட்ட அவுஸ்திரேலிய அணி (8 புள்ளிகள்), மேற்கிந்தியத் தீவுகளை (6 புள்ளிகள்) சந்திக்கிறது. இந்த ஆட்டம் மும்பையில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகிறது.

மற்றொரு ஆட்டத்தில் எல்லா ஆட்டத்திலும் தோல்வி கண்ட தென்னாபிரிக்கா- இலங்கை (2 புள்ளிகள்) அணிகள் மோதுகின்றன. இந்த ஆட்டம் கட்டாக்கில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகிறது. மும்பையில் பிற்பகல் 2.30 மணிக்கு தொடங் கும் இன்னொரு ஆட்டத்தில் இங்கிலாந்து (4 புள்ளிகள்) - நியூ சிலாந்து (4 புள்ளிகள்) அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன.

இறுதிப்போட்டிக்கான மோதலில் மேற்கிந்தியத் தீவுகள், இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகள் உள்ளன. இன்றைய ஆட்டத்தின் முடிவை பொறுத்தே இறுதிப்போட்டிக்கு தகுதி பெறும் இரண்டாவது அணி எது என்பது தெரியவரும். இருப்பி னும் புள்ளிகள் பட்டியலில் 2ஆவது இடத்தில் உள்ள மேற்கிந் தியத் தீவு அணி, அவுஸ்திரேலியாவுடன் மோசமான தோல் வியை சந்திக்காமல் இருந்தால் அந்த அணி ஓட்ட சராசரி அடிப்படையில் இறுதிக்கு முன்னேற வாய்ப்பு உள்ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியின் யாழ்ப்பாணப் பயணப் பதிவுகள்



சுன்னாகத்தில் அமைந்துள்ள யாழ் ஒளி மின்நிலையம் மற்றும் மின்நிலையத் திறப்பு விழா...



நயினாதீவு நாகவிகாரைக்கு செல்லும் ஜனாதிபதி மற்றும் அவர் குழுவினர்...



நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்தில் வழிபாட்டின்போது...



யாழ். அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் ஜனாதிபதியும் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளும்...

படங்கள்:எஸ்.ஆர்.கரன்;உ.சாவின்

## இலங்கை நாட்டில் ஒரே...

நிதிகளை சரியாக பயன்படுத்த வேண்டும் என வும் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர்களான பசில் ராஜபக்ஷ, எஸ்.பி.திஸாநாயக்க, ராஜித சேனாரத்ன, டக்ளஸ் தேவானந்தா, பவித்திரா வன்னியராச்சி உள்ளிட்ட அமைச்சர்களும், வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜ பக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீர துங்க உள்ளிட்ட செயலாளர்கள், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான முருகேசு சந்திரகுமார், சில்வேஸ்திரி அலன் ரீன், அப்பாத்துரை விநாயமூர்த்தி, திருமதி விஜயகலா மகேஸ்வரன் உள்ளிட்டவர்களும் பங்கு கொண்டனர்.

இதேவேளை யாழ்.குடாநாட்டில் மேற்கொள்ளப் பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் ஆவ ணப்படங்களுடன் ஜனாதிபதி அதிகாரிகளிடம் கேள்வி யெழுப்பியபோது அதற்கு பதிலளிக்க முடியாது துறை சார்ந்த அதிகாரிகள் திணறியதை அவதானிக்க முடிந் தது.

குறிப்பாக வீதி அபிவிருத்திப் பணிகள் தொடர்பிலும், பாடசாலைகள், கட்டிடங்கள் உள்ளிட்ட கட்டிடப் புனர்நிர் மாணப்பணிகள் தொடர்பிலும் ஜனாதிபதி கேள்வி எழுப்பினார்.

இதில் பல வீதிகள் எங்கு அமைக்கப்படுகிறது என்பது கூட அதிகாரிகளுக்குத் தெரியாமல் திக்குமுக்காடினர். அத்தோடு வீதிகளின் பெயர்களையும் ஊர்களின் பெயர்களையும் மாற்றி அறிக்கையில் அச்சிடப்பட்டிருந்தது.

காக்கதீவுக்கு தாக்கதீவு எனவும் அராலிக்கு அரியாலை எனவும் குறிப்பிட்டிருந்தனர்.

இவ்வாறு நேற்று இடம்பெற்ற யாழ்.மாவட்ட அபிவிருத்தி குழுக்கூட்டத்தில் அதிகாரிகளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திணறவைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, யாழ். பல்கலைக்கழகத்தில் கடந்த 1989 ஆம் ஆண்டிலிருந்து தண்ணீர்தாங்கி ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. இன்னமும் அமைத்து முடிக்கப்படவில்லை. அதற்கு என்ன காரணம் எனவும் ஜனாதிபதி கேள்வி எழுப்பினார். இதன்போது தண்ணீர்தாங்கி அமைப்பதற்கு ஒப்பந்தகாரர் கிடைக்கவில்லை என துணைவேந்தர் கூறியபோது சிரித்தபடி ஜனாதிபதி அமர்ந்திருந்தார். (எ-4,6)

## அளவுக்கு மிஞ்சினால்... உயிரைக்குடித்த பானம்!

(வெலிங்டன்)

அளவுக்கு மீறி கோக்கோ கோலா பானம் குடித்ததால் நியூ சிலாந்து நாட்டைச் சேர்ந்த 30 வயதுப் பெண் ஒருவர் இறந்ததாக மரண விசாரணை அதிகாரியால் அறிவிக்கப்பட்டுள்ளது.

நடாஷா ஹரிஸ் என்ற இந்தப் பெண் தினமும் 10 லீட்டர் கோக்கோ கோலா குடித்ததாகக் கூறப்படுகிறது.

மூன்றாண்டுகளுக்கு முன்னர் இவர் மாரடைப்பால் இறந்தார்.

இந்த அளவு குடித்ததால், அவர் தினமும் உட்கொள்ளப் பரிந் துரைக்கப்பட்ட அளவை விட இரண்டு மடங்குக்கும் மேலான அளவு கேபெயின் என்ற இரசாயனப் பொருளை உட்கொண்டிருந்தார்.

எட்டுக் குழந்தைகளின் தாயான நடாஷாவின் பற்கள் சிதைந் ததன் காரணமாக எடுக்கப்பட்டிருந்தன. அவர் விழித்திருக்கும் நேரம் முழுவதும் கோக்கோ கோலா குடிப்பாராம்.

கோக்கோ கோலா நிறுவனம், தனது பானம்தான் இவரது மரணத்துக்கு காரணமாக இருந்தது என்பதை நிரூபிக்க முடியாது என்று வாதிட்டுள்ளது. (ஏ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிலை கொடு...

நடனத்தின் மூலமே ஜனாதிபதி அழைத்துச் செல்லப்பட்டார்.

இதனைவிட இவ் நிகழ்வுகளிற்கு சென்றிருந்த தமிழ் ஊடகவியலாளர்கள் பாதுகாப்புத்தரப்பினரால் பெரும்பாலான இடங்களில் புறக்கணிக்கப்பட்டிருந்ததோடு அவமதிப்பிற்கும் உள்ளாக்கப்பட்டிருந்தனர்.

பின்னர் நயினைதீவிலிருந்து திரும்புவதற்கு ஆயத்தமாகிய போது படகு போக்குவரத்து மாலை 6.00 மணியுடன் நிறுத் தப்பட்டிருந்ததனால் குறிகாட்டுவான் இறங்கு துறையில் சுமார் 3 மணித்தியாலத்திற்கும் அதிகமாக காத்து நிற்க வேண்டியிருந்தது.

இதற்கு நிகழ்வு ஒருங்கிணைப்பாளர்களின் தவறே காரணம் என சுட்டிக்காட்டப்பட்டது.

இன்று யாழ். போதனா வைத்திய சாலையில் இடம்பெற்றும் நிகழ்விலாவது தமிழ்ப்பாரம்பரியம் பின்பற்றப்படுமா? என எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-4,6)

# உயர்பாதுகாப்பு வல...

றத்தை விரைவுபடுத்துமாறும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலுள்ள வலி.வடக்கை விடுவிக்குமாறும் கோரிக்கை விடுத்தார்.

மிகவும் கோபமாக தனது கருத்துக்களை நாடாளுமன்ற உறுப்பினர் முன் வைத்த போதும் எந்தவிதமான பதற்றமுமின்றி அமைதியாக தலையினை அசைத்து பதிலளித்ததோடு வழங்கப்பட்ட மகஜர் தொடர்பில் (அதிலுள்ள புள்ளி விபரம் தொடர்பில்) சந்தேகம் உள்ளதாகவும் அதனை பரிசீலிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதன்போது கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் சிரிப்பொலி எழுப்பினர். இதனை விட யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்கவினை அழைத்து நாடாளுமன்ற உறுப்பினரால் வழங்கப்பட்ட மகஜரினைக்கொடுத்து பரிசீலிக்கும் படி கூறியதோடு இது தொடர்பில் அவர் நடவடிக்கை எடுப்பார் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார். (எ-6)

# அபிவிரு...

பிதழ் வழங்க வேண்டும் என்று இல்லை. இருப்பினும் இந்தக் கூட்டத்திற்கு வருகை தந்த உங்களை வரவேற்கின்றேன் என்றார்.

யாழ்.மாவட்டத்தின் விசேட அபிவிருத்திக் குழுக்கூட்டம் நேற்று யாழ்.ரில்கோ விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

யாழ்.மாவட்டத்தின் விசேட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று யாழ்.ரில்கோ விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி மேற்கண்டவாறு குற்றஞ்சாட்டியதோடு எதிர்காலத்தில் அழைப்பிதழ் வழங்கப்பட வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தார்.

இதற்குப் பதிலளிக்கும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். அத்தோடு எதிர்காலத்தில் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திற்கு அழைப்பிதழ் வழங்குவது தொடர்பில் அரசாங்க அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறும் தெரிவித்தார். (எ-4,6)

# பாதுகாப்பு வேலி...

யினை இடைமறித்து இந்த வேலி அமைக்கப்பட்டுள்ளது.

ஆனால் பளையிலிருந்து காங்கேசன்துறை வரை புகையிரதப் பாதை அமைக்கப்படுவதாக கூறப்படுகிறது. பாதுகாப்புத் தரப்பினரின் வேலியைத் தாண்டி எவ்வாறு புகையிரதப் பாதை செல்லும் எனக் கேள்வி எழுப்பினார்.

இதன்போது குறுக்கிட்ட ஜனாதிபதி புகையிரதப் பாதை எங்கு போகுது, எப்படிப் போகுது, எதுக்குள்ளாக போகுது என்பது முக்கியமல்ல.

எங்கு போகுது என்பது தான் முக்கியம். பளையிலிருந்து காங்கேசன் துறை வரை புகையிரதப் பாதை அமைக்கப்படும். படையினரின் வேலியை ஊடறுத்து புகையிரதப் பாதை செல்லும் அதைப்பற்றி சந்தேகப்பட வேண்டாம். உங்கள் ஆசனத்தில் அமருங்கள் என்றார் ஜனாதிபதி. (எ-4,6)

# பாதுகாப்பு தரப்பினா...

எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், குமார்ரட்ணமும் நானும் ஒரே நாளில் கடத்தப்பட்டோம். எனது கண்கள் கட்டப்பட்டிருந்தது. அப்பொழுது லலித் மற்றும் குகன் தொடர்பில் என்னைக்கேட்டனர். அப்போது அவர்கள் இருவரும் இருப்பதாகக் கூறினர். கண்கள்கட்டப் பட்டிருந்தமையால் எனக்கு வெளியில் ஒன்றும் தெரியவில்லை.

எனினும் கடந்த 2011 செப்டெம்பர் முதல் 2012 ஜுலை வரையில் 76 பேர் கடத்தப்பட்டுள்ளனர். இதனை நாம் அரச மற்றும் அர சசார்பற்ற நிறுவனங்களின் வெள்ளைவான் கடத்தல், காணாமல் போனதாக பதிவாகிய முறைப்பாடுகள் தொடர்பிலேயே அறிக்கைப்படுத்தியுள்ளோம் எனதெரிவித்துள்ளார்.

இதனையடுத்து லலித், குகன் சாட்சியப்பதிவுகள் எதிர்வரும் ஏப்ரல் 23-ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (எ-11)

# ஒலிபெரு...

எதிர்கொண்டனர்.

இது குறித்து முறையிட சில நோயாளர்கள் முயன்ற போதும் அது பலனளிக்காது போகுமென எண்ணி அதனை கைவிட்டனர்.

புதிதாக அமைக்கப்பட்ட கட்டிடம் மையப் பகுதியில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# உத்தரவிட்டார் ஜனா...

மகிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதியிடம் குறித்த மாணவர்களின் பெற்றோர்களினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளையடுத்து அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீட மாணவர் ஒன்றியத்தின் செயலாளர் ப.தர்ஷானந்த் மற்றும் மாணவன் ஜெனமேஜெனன் ஆகிய இருவரும் கடந்த வருடம் நவம்பர் மாதம் 28-ம் திகதி பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவினரால் (ரி.ஐ.டி) கைது செய்யப்பட்டு வெலிகந்த புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த மாணவர்களுடன் மேலும் 11 மாணவர்கள் கைது செய்யப்பட்ட போதும் அவர்கள் பின்பு கட்டம் கட்டமா[illegible] விடுதலை செய்யப்பட்டனர்.

இருப்பினும் மேற்குறிப்பிடப்பட்ட மாணவர்கள் இருவரும் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டு இருந்தனர்.

இந்நிலையில் நேற்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த ஜனாதிபதியிடம் தடுப்பிலுள்ள மாணவர்களின் பெற்றோர்கள் உருக்கமான வேண்டுகோளை விடுத்ததோடு எதிர்காலத்தில் அரசாங்கத்துக்கு எதிரான எந்தவிதச் செயற்பாடுகளிலும் அவர்களை ஈடுபடாது பார்த்துக் கொள்வதாகவும்,

அவர்களை விடுதலை செய்து கல்வி நடவடிக்கைகளை தொடர்வதற்கு அனுமதியளிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டனர்.

இந்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தடுத்து வைக்கப்பட்டுள்ள மாணவர்கள் இருவரும் நாளைய[illegible] தினம் (இன்று) விடுதலை செய்யப்படுவா[illegible]கள் என உறுதியளித்தார்.

அத்தோடு மாணவர்கள் எனக்கொன்றும் எதிரிகளல்ல. கடந்த காலச் சம்பவங்களினால் அவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களை கல்விச் செயற்பாடுகளில் ஆர்வம் காட்டுமாறு கூறுங்கள். தவறான வழிநடத்தலுக்கு இடமளிக்காதீர்கள் என பெற்றோர்களிடம் தெரிவித்தார்.

அத்தோடு மாணவர்களின் பெற்றோர்களையும் அழைத்து அவர்களுடன் கலந்துரையாடினார். இதன்போது உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க, யாழ்.பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் உள்ளிட்டவர்களும் உடனிருந்தனர்.

இதேவேளை யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்கவினால் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போது தடுத்து வைக்கப்பட்டுள்ள மாணவர்கள் இருவரும் விரைவில் விடுதலை செய்யப்படுவார்கள் எனத் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6)


**Direct Marketing International Pvt (Ltd)**

**உடனடி வேலைவாய்ப்பு**

இளம் சமுதாயத்தினரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி ஓர் நற்பிரஜையாக உயர்த்தும் நோக்குடன் யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது D.M.I. International நிறுவனத்திற்கு சந்தைப்படுத்தல் முகாமைத்துவ பயிற்சியாளர்கள் தேவைப்படுகின்றனர். 6 மாத பயிற்சி வழங்கப்படும். பயிற்சியின் போது ரூபாய் 10,000 தொடக்கம் 15,000 வரை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் பதவி உயர்வுகளும் வழங்கப்படும். பயிற்சியை வெற்றிகரமாக முடித்ததும் தனியான ஒரு கிளைக் காரியாலயத்திற்கு உரிமையாளர் ஆகலாம். அத்துடன் ETF, EPF, Medical மற்றும் ரூபாய் 75000 இற்கு மேற்பட்ட சம்பளத்துடன் தொழிலை மேற்கொள்ளலாம்.

தகைமைகள் :- க.பொ.த. சாதாரண தரத்தில் சித்தி
அனுபவம் அவசியமற்றது, தங்குமிடம் இலவசம்

உடன் தொடர்பு கொள்க :- 0775566224, 0771906728, 077077

(1728)



**Deutsch, Dutch, French, English**

**ஜேர்மன் - டொச், நெதர்லாந்து - டச்**

தூதரக பரீட்சைகளுக்கான புதிய வகுப்புக்கள் அனைத்தும் ஆரம்பமாகி நடைபெறுகின்றன. மேலும் London செல்பவர்களுக்கான ஆங்கிலம் AI, French, Italian வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.

குறிப்பு: திங்கள் முதல் புதிய வகுப்புகளுக்கான பதிவுகள் நடைபெறும்.

**தொடர்பு: விவேகானந்தா அக்கடமி**

221/1 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel: Hotline, 0774842464

(கி-2405)



**Asphalt Plant for Sale**

அஸ்போல்ற் உற்பத்தி செய்யும் இயந்திரம் விற்பனைக்கு

தற்பொழுது இயங்கிக் கொண்டிருக்கும் வீதி அமைப்பிற்கு தேவைப்படும் அஸ்போல்ற் உற்பத்தி செய்யும் 80 ton/hr இயந்திரத் தொகுதி ஒன்று விற்பனைக்குண்டு.

இடம்:- கீரிமலை யாழ்ப்பாணம்
விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

விபரங்களுக்கு தொடர்பு:- 071-2347090/0115-422222
(EXT.210)
Fax:- 0112-914153
Email:- hr@vvkarunaratne.lk

(1727)



NALIN Information Technologies Pvt Ltd.

**NALIN IT இன் விசேட விலைக்குறைப்பு**

hp DELL

DUAL CORE DESKTOP ASSEMBLED PC
intel Dual Core 2.9 processor
M/Board intel 61
2GB DDR3 Ram
500GB SATA Hard Drive
Liteon DVD-Rw
HP 19" LED Monitor
Powerlogic Casing
Kery Board & Optical Mouse
Speaker Icon Ic-128
48,800/=

CORE I3 DESKTOP ASSEMBLED PC
Intel I3 3.3Ghz processor
M/Board intel 61
2GB DDR3 Ram
500GB SATA Hard Drive
Liteon DVD-Rw
HP 19" LED Monitor
Powerlogic Casing
Kery Board & Optical Mouse
Speaker Icon Ic-128
58,500/=

LAPTOPS
HP 1000 --- 56,000/=
DELL I3 --- 67,000/=
DELL I5 --- 79,500/=
DELL I7 --- 109,500/=

Bag, mouse, headphone free with laptops

650W SQUTE UPS FREE WITH SYSTEMS

CORE I5 DESKTOP ASSEMBLED PC
Intel i5 3.2 GHZ processor
M/Board intel 61
2GB DDR3 Ram
500GB SATA Hard Drive
Liteon DVD-Rw
HP 19" LED Monitor
Powerlogic Casing
Kery Board & Optical Mouse
Speaker Icon Ic-128
70,500/=

CORE I7 DESKTOP ASSEMBLED PC
Intel I7 3.4 GHZ processor
M/Board intel 61
2GB DDR3 Ram
500GB SATA Hard Drive
Liteon DVD-Rw
HP 19" LED Monitor
Powerlogic Casing
Kery Board & Optical Mouse
Speaker Icon Ic-128
85,500/-

Hp branded system i3 333o from Rs.72,000/=

8GB FLASH - 1,000/=
16GB FLASH - 1,900/=
32GB FLASH - 4,000/=
DDR3 2GB RAM - 2,200/=
DDR3 4GB RAM - 3,600/=
MULTI DONGLE - FROM 3,200 TO 5,500/=

NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD www.fb/nalinit.com
195/2, Parameswara Junction, Jaffna. T.P. 0212221121 / 0777667975



**கடைகள் வாடகைக்கு**

சின்னக் கடை வீதி
குருநகரில் கடைத் தொகுதி
வாடகைக்கு உண்டு.
எ.எஸ்.டி. ஸ்ரோர்ஸ்
208, சின்னக்கடை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0771511519, 0776156034

(கி-2418)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அ/ன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.02.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.